Viber: 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 05 புதன்கிழமை (18.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 120

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## இலங்கைத் தமிழர்களின் உரிமையை மீட்டெடுக்க

# இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## நெல்லையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(சென்னை) இலங்கைத் தமிழர்களின் உரிமையை மீட்டெடுக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இந்தியாவின் நெல்லை மாவட்டத்தில் வைத்து தெரிவித்துள்ளார். மேலும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய அரசு பல வழிகளில் நன்மைகள் செய்தாலும் இன்னும் கூடுதல் உதவிகள் செய்யக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (23-ம் பக்.)



தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் உள்ளே...

கடந்த 24 மணி நேரத்தில்

## மதுபோதையில் வாகனம் செலுத்திய 140 பேர் கைது

(கொழும்பு)

கடந்த 24 மணிநேர காலப்பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 140 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. 23

## பொது நலவாய வணிக மாநாட்டில்

ஜனாதிபதி இன்று உரை

(கொழும்பு)

பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்களுக்கான மாநாட்டினையொட்டி இடம்பெறும் 23

## வவு.வடக்கு, தெற்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆட்சி

(வவுனியா)

வவுனியா வடக்கு - நெடுங்கேணி பிரதேச சபை மற்றும் வவுனியா தெற்கு பிரதேச சபை ஆகிய இரண்டின் ஆட்சியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது.

வவுனியா வடக்கு - நெடுங்கேணி பிரதேச சபையின் தலைவர் பதவிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ச.துணிகாசலமும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஜெ.ஜெயரூபனும் போட்டியிட்டனர்.

இருவரும் 11 வாக்குகளைப் பெற்ற நிலையில், திருவுளச்சீட்டின் மூலம் தமிழ்த் தேசியக் 24

## வடக்கு, கிழக்கு செல்கின்றது காணாமல்போனோர் பணியகம்

(கொழும்பு)

காணாமல்போனோர் பணியகத்தின் உறுப்பினர்கள் மே மாத நடுப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

காணாமல்போனவர்களின் உறவினர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கும், பிராந்திய அலுவலகங்களை அமைப்பது சம்பந்தமாக ஆராய்வதற்காகவுமே இவ்விஜயம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

பயண நிகழ்ச்சி நிரல் அடுத்த வாரமளவில் அறிவிக்கப்படும் என்று பணியகத்தின் 23

வட்டக்கச்சி புதுக்காடுப் பகுதியில்

## போலி நாணயங்களுடன் சந்தேகத்தில் மூவர் கைது

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள வட்டக்கச்சி புதுக்காடுப் பகுதியில் போலியான 5000 ரூபாய் நாணயத்தாளுடன் மூன்று சந்தேக நபர்களை கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். 23

ஜனாதிபதி நாட்டில் இல்லாத காலப்பகுதியில்

## நாடாளுமன்றத்தில் மாற்றங்கள் நிகழாது இருக்கவே அமர்வுகள் ரத்துசெய்யப்பட்டது - மகிந்த

(கொழும்பு)



ஜனாதிபதி நாட்டில் இல்லாத காலப்பகுதியில் நாடாளுமன்றத்தில் ஏதேனும் மாற்றங்கள் நிகழ்ந்து விடும் என்ற அச்சத்தினாலேயே நாடாளுமன்ற அமர்வுகள் ரத்துச் செய்யப்பட்டதாக நாடாளு 23

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில்

## ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான பாரை மீன் சிக்கியது

(கரணவாய்)



வடமராட்சி கடற்பரப்பில் கரைவலை தொழில் செய்த மீனவர் ஒருவருக்கு நேற்றைய தினம் 20 ஆயிரம் கிலோவுக்கும் அதிமான மீன்கள் வலையில் சிக்கிக்கொண்டன. அவற்றின் 24

அரசியலமைப்பு பணிகளை

## ஆரம்பிக்காவிட்டால் சம்பந்தன் தனது பதவியை துறக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்பு பணிகளை மீளவும் ஆரம்பிக்காவிட்டால் எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென தேசிய சகவாழ்வு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இதனை அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்துள்ளார். 23

## நீதிச் சேவை அதிகாரிகளாக 19 பேர் புதிதாக நியமனம்

ஒரு தமிழர் கூட தெரிவாகவில்லை

(கொழும்பு)

நீதிச் சேவைகள் ஆணைக் குழுவால் 15 நீதவான்களும் 4 தொழில் நியாய சபைத் தலைவர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர்கூட தமிழர் இல்லை.

நீதிச் சேவைகள் ஆணைக் குழுவால் நீதிச் சேவையின் 2ஆம் வகுப்பின் முதலாம் தரத்து 23

## எதிர்வரும் 23-ம் திகதிக்கு பின்னர் அமைச்சரவை முழுமையாக மாற்றம்

அரசாங்க தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு பின்னர் அமைச்சரவை முழுமையாக மாற்றியமைக்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான முதற்கட்ட செயற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்ற நிலையில், முழுமையான அமைச்சரவை மாற்றம் ஏற்படுத்தப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

புதிய அமைச்சரவையினை அமைக்கும் மீளாய்வு நடவடிக்கைகள் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் நடைபெற்று வருகின்றன.

இதற்கமைய அமைச்சுப் பொறுப்புக்களில் ஏற்படவுள்ள மாற்றங்கள் குறித்த அறிக்கை, எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்படவுள்ளது. 23

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
இல.401 மனிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை), யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062
follow us cnrworldwideexpress
(A-2305)

# விடுவிக்கப்பட்ட வலி.வடக்கில் சிறிய இராணுவ முகாம்கள்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்ட வலி.வடக்கு மயிலிட்டி உட்பட 3 கிராம சேவையாளர் பிரிவில் சிறிய இராணுவ முகாம்கள் தற்போதும் உள்ளதாகவும் அதனை முழுமையாக அகற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்கும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

விடுவிக்கப்பட்ட 683 ஏக்கர் காணிப் பகுதியை நேற்று செவ்வாய்க்கிழமை பார்வையிடச் சென்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

மயிலிட்டி பிரதேசம் ஒரு போதும் விடுவிக்கப்படமாட்டாது என சொல்லப்பட்ட பிரதேசம். இந்த ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு கூட மயிலிட்டி மற்றும் மயிலிட்டி துறைமுகப் பிரதேசம் விடுவிக்கப்படமாட்டாது என உறுதியாக கூறப்பட்டிருந்தது. ஆனால், மயிலிட்டி துறைமுகம் விடுவிக்கப்பட்ட காலத்தில் இந்தப்பகுதி முழுவதும் விடுவிக்கப்பட வேண்டுமென கேட்டிருந்தோம். அதற்கமைய இந்தப் பிரதேசமும், வீதிகளும் மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

28 வருடங்கள் மக்கள் வாழாத பிரதேசம் என்ற காரணத்தினால், இந்தப்பகுதிகளில் நிறைய வேலைத்திட்டங்கள் செய்யப்பட வேண்டியிருக்கின்றது. பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியிருப்பதனால், அரசாங்கம் இந்த வேலைத்திட்டத்திற்கான நிதிகளை உடனடியாக கொடுக்க வேண்டும்.

அரசாங்கம் தமது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் அதே நேரம் அரசியல் கட்சியாகிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பும ஒரு சில வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உத்தேசித்துள்ள்து. காணி விடுவிப்புத் தொடர்பாக மேல்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் இந்த காணி விடுவிப்பிற்கு ஒரு காரணியாக இருக்கின்றது என கூறினார். (ம)

# பிரித்தானிய தூதரக அதிகாரிகளுக்கும் ஜனநாயக போராளிகள் கட்சிக்கும் இடையில் உத்தியோக பூர்வ சந்திப்பு

(திருகோணமலை)

இலங்கைக்கான பிரித்தானிய தூதரக அதிகாரிகளுக்கும் ஜனநாயக போராளிகள் கட்சியினருக்கும் இடையிலான உத்தியோக பூர்வ சந்திப்பொன்று நேற்றையதினம் திருகோணமலையில் இடம்பெற்றது.

போர் ஓய்வுக்குக்கு பின்னர் தற்போதைய விடுதலைப்புலிகளதும் அதன் போராளிகளது அரசியல் பொருளாதார செயற்பாடுகள் தொடர்பிலும். தாயக அரசியல் பரப்பில் போராளிகளது பங்குபற்றுதலும் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

போரில் நேரடியாக பங்குபற்றியவர்கள் புனர்வாழ்வின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட முடியுமானால் அதேபோன்று போர்ச்சூழலில் பலதரப்பட்ட காரணங்களுக்காகவும் காரணமின்றியும் நெடுநாட்கள் சிறையில் வாடும் அரசியல்கைதிகள் எவ்வித மானதொரு பொறிமுறையிலாவது உடனடி விடுதலைக்கு அழுத்தம்கொடுக்க வேண்டும் என எம்மால் கோரப்பட்டது.

தொடர்ச்சியாக இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் பேணப்பட வேண்டுமாயின் அதீத இராணுவபிரசன்னம் அகற்றப்படுவதோடு காணாமல்போனோர் தொடர்பில் அக்கறையுடனும் பொறுப்புடனும் தீர்வுகளை பெற்றுத்தரவல்ல ஒரு பொறிமுறைக் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும். அதனோடு தமிழர்களுக்கான ஒரு நியாயப்பாடான தீர்வு இலங்கையில் எட்டப்படும் வரை தமிழர்கள் பிரித்தானியாவில் இருந்து திருப்பி அனுப்பப்படுவது நிறுத்தப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டது.

இலங்கையில் மிகமோசமான யுத்தகாலப்பகுதியில் புலம்பெயர்ந்த தமிழ்மக்களை அன்புடன் அரவணைத்து பாதுகாத்த பிரித்தானிய அரசுக்கும் அதன் மக்களுக்கும் ஜனநாயக போராளிகள் கட்சியின் சார்பில் நன்றியும் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது என ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-9)

# லண்டனிலிருந்து ஜனாதிபதி திரும்பியவுடன் சுதந்திர கட்சியின் செயற்குழுக் கூட்டம்

(கொழும்பு)

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துக்கொள்வதற்காக லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடுதிரும்பியவுடனே ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழு கூட்டம் நடைபெறுமென முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி நாடுதிரும்பியவுடன் செயற்குழு கூட்டம் நடைபெறும் என நம்புகிறோம். அதன்போது, நாம் அரசாங்கத்திலிருந்து விலகவேண்டும் என்ற தீர்மானத்தையே முன்வைப்போம் என்றார். (ம)

# பாதுகாக்கப்பட்ட வனத்தில் கஞ்சா பயிர்ச் செய்கை

(புத்தளம்)

ஹம்பேகமுவ, கல்கொட்டுகந்த பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசத்தில் பயிர் செய்யப்பட்டு வந்த கஞ்சா தோட்டம் ஒன்று பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் அழிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் புத்தள முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் குறித்த வனப் பிரதேசத்தில் இரண்டு இடங்களில் கஞ்சா பயிரிடப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அனைத்து கஞ்சா செடிகளையும் தீ வைத்து அழிப்பதற்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர்நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கொட்டுகந்த வனஜீவராசிகள் காரியாலயம் ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர். (ம)

# ஆளுநராக தன்னை நியமிக்குமாறு வடக்கு மக்களே ஜனாதிபதியிடம் கோரினர்

## ரெஜினோல்ட் கூரே தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் ஆளுநராக தன்னை மீண்டும் நியமிக்குமாறு வடக்கு மக்களே ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்ததாக ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநராக இரண்டாவது தடவையாகவும் நியமிக்கப்பட்ட ரெஜினோல்ட் கூரே, நேற்று செவ்வாய்க்கிழமை தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். அதன் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த தவணைக்காலம் நிறைவடைந்து சென்றபோது, வடக்கின் பெரும்பாலான பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்ததால் மனவேதனையுடன் சென்றதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார். எனினும், அவற்றை செயற்படுத்துவதற்கான வாய்ப்பு தற்போது கிடைத்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைவதாக மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக மீண்டுமோர் தடவை பிறந்ததைப் போன்று மகிழ்வதாக குறிப்பிட்ட ஆளுநர், வடக்கின் அபிவிருத்தி உள்ளிட்ட செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட கடமைப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். (ம)


**வேலை ஆட்கள் தேவை**

தமிழ் ரைப்பிங் / போட்டோசொப்/ Vedio editing தெரிந்த ஆட்கள் பகுதி நேரமாகவோ, முழுநேரமாகவோ வேலை செய்யக்கூடியவர்கள் தேவை. நேர்முகத்தேர்வு 18,19/04/2018, புதன், வியாழன் (3663)

தொடர்புகளுக்கு :077 332 2527

**யா/புத்தூர் ஸ்ரீசோமாஸ் கந்தக் கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்**

இடம்:-கல்லூரி மண்டபம்

காலம்:-22.04.2018

நேரம்:-காலை 9.00 மணி தொடக்கம்

கல்லூரியின் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்

Dr.சி.கே.சிவபாலசிங்கம் (3657)

WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.

TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214

E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com (C-2249)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்**

**நுண்நிதியியல் டிப்ளோமா-2017/2018 முதலாம் அரையாண்டு பரீட்சைகள்**

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான முதலாம் அரையாண்டுப்பரீட்சைகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

| திகதி | நேரம் | பாடஇல | பாடம் |
|---|---|---|---|
| 21.04.2018 சனிக்கிழமை | மு.ப 09.30- பி.ப 12:30 | DMF 1135 | நுண்நிதி நிறுவனங்களுக்கான முகாமைத்துவ தகவல் முறைமை |
| 22.04.2018 ஞாயிற்றுக்கிழமை | மு.ப 09.30- பி.ப 12.30 | DMF1136 | ஆய்வு முறையியல் |

பதிவாளர் (சி-2301)

**வட மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும் மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகமும் இணைந்து நடாத்தும் மாபெரும் தமிழ் சிங்களப் புத்தாண்டு விழா-2018**

இடம்:-முல்/சிலாவத்தை இளம்பறவை விளையாட்டு மைதானம், சிலாவத்தை

காலம்:-2018.04.19ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.00 மணி முதல் மாலை வரை

**பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள்**

காலை 6.00 மணிக்கு மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம்

இருபாலாரும் கலந்து கொள்ளலாம்

1ஆம் பரிசு-25000/=

2ஆம் பரிசு-20000/=

3ஆம் பரிசு-15000/=

மற்றும் பத்து ஆறுதல் பரிசுகள் தலா 3000/= வீதம்.

சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் நிகழ்வுகளுக்கு மருத்துவ சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**காலை 8.30 மணி முதல் ஆண், பெண், முதியோர் பங்குபற்றும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகள்**

கயிறு இழுத்தல், கிளித்தட்டு, போர்த்தேங்காய் உடைத்தல், கைக் கொடிச்சவாரி, வழுக்குமரம் ஏறுதல், சாக்கோட்டம், தயிர்முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, நீத்துப் பெட்டி பின்னுதல், கிடுகு பின்னுதல், பலூன் ஊதி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல், தேசிக்காய் கரண்டி ஓட்டம், தோரணம் பின்னுதல், மாலை கட்டுதல், வேக நடை, நீர் நிரப்புதல்.

மாலை 2.30 மணி முதல் **கலை நிகழ்ச்சிகள்** இடம்பெறும்.

போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம். (சி-2302)

# ஆனந்த சுதாகரன் உள்ளிட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்



## கல்வியமைச்சரிடம் 3 இலட்சம் கையெழுத்துக்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

3 இலட்சம் கையெழுத்துக்களுடன் ஜனாதிபதி மற்றும் வெளிநாடுகளின் தூதுவர்களை சந்தித்து தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் விடுதலையை வலியுறுத்த போவதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சரும் பதில் முதலமைச்சருமான கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார். ஆனந்த சுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் 3 இலட்சம் கையெழுத்துக்களை திரட்டியிருந்தது.

இந்த கையெழுத்துக்களை வடக்கு மாகாண கல்வி அமைச்சரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர்மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் மனிதாபிமானத்தை தாக்கும் பிரச்சினைகளை நாம் தினம் தோறும் கண்டு கொண்டுதான் இருக்கின்றோம். பெற்றோரை இழந்து வாடும் குழந்தைகள், குழந்தைகளை இழந்து வாழும் பெற்றோர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல்கைதிகள் எனப் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம் 400 நாட்களை தாண்டியும் நடைபெற்று கொண்டிருக்கின்றது.

அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு எம்மால்வாழ்வாதார உதவிகளை வழங்க முடியுமே தவிர, அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு எம்மிடம் அதிகாரம் இல்லை.

வாழ்வாதாரத்தை எம்மால் வழங்க முடிந்தாலும் உள ரீதியான தாக்கம் என்பது அதிகமாக உள்ளது. அண்மையில் நடைபெற்ற அரசின் பேச்சுக்களின் போது காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் அரசியல் கைதிகளின் விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் பற்றி பேசியிருக்கிறார்கள்.

இந்த இரண்டு பிள்ளைகளும் தங்களது தாயை இழந்துள்ளார்கள், தங்கள் தந்தையோடு வாழ முடியாத துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையில் வருடம் தோறும் நடைபெறுகின்ற விசேட நிகழ்வுகள் மற்றும் சுதந்திர தின விழாவின் போது நூற்றுக்கணக்கான குற்றவாளிகள் ஜனாதிபதியால் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்படுகின்றார்கள். ஆனால் அரசியல் கைதிகள் என்போர் விடுதலை செய்யப்படவில்லை.

வெள்ளையனுக்கு எதிராக போராடியவர்களை ஹீரோ என்று ஜனாதிபதி அறிவித்து விட்டார். வெள்ளையனுக்கு பயங்கரவாதிகளாக தெரிந்தவர்கள் ஹீரோக்கள் என்றால், எங்கள் மக்களுடைய விடுதலைக்காக போராடியவர்கள் எங்களுக்கு ஹீரோவாக தெரியும் போது உங்களுக்கு பயங்கரவாதிகளாக தெரியலாம்.

ஆனால் அவ்வாறு இருந்தாலும் கூட, இவர்களின் கைதுகள் நியாயமாக இடம் பெறவில்லை. குற்றத்தின் பாற்பட்ட கைதாக நடைபெறவில்லை.

ஏராளமான மிகப்பெரிய குற்றவாளிகளுக்கு எல்லாம் மன்னிப்புக் கொடுத்து இந்த அரசு விடுதலை செய்கின்ற போது இந்த அரசியல் கைதிகளின் குழந்தைகள் ஆதரவற்று நிற்கும் போது நல்லாட்சி என்று கூறும் இந்த அரசு தனது மனிதாபிமானத்தை வெளிக்காட்ட வேண்டும்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்த பிள்ளைகள் ஜனாதிபதியை சந்திக்கும் போது புத்தாண்டுக்கு முன்னர் நீங்கள் உங்கள் அப்பாவோடு இணைந்து கொள்வீர்கள் என்று கூறியிருந்தார்.

ஜனாதிபதி தனது வாக்குறுதியைக் காப்பற்றத் தவறியுள்ளார். ஜனாதிபதி இவ்வாறு வெளிப்படையாக கூறியதால் இந்த கையெழுத்துக்கூட தேவைப்படாது என எண்ணியிருந்தேன்.

எனினும் இந்த கையெழுத்துக்களோடு சென்று ஜனாதிபதி மற்றும் முக்கிய நாட்டின் தூதர்களை சந்தித்து ஆனந்தசுதாகரனின் விடுதலையை வலியுறுத்துவேன்.

மேலும் முடிந்தவரை எங்கள் பக்கமிருந்து எந்த அழுத்தங்களை வழங்க முடியுமோ, அதனை வழங்க வேண்டும்.

எமது கல்வி உலகம் இது தொடர்பில் எடுக்கக்கூடிய பொருத்தமான காத்திரமான நடவடிக்கைகளுக்கு கல்வி அமைச்சு தொடர்ந்தும் உறுதுணையாக் இருக்கும். இந்த போராட்டத்திற்கு அனைத்து தரப்பும் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு பாராட்டுக்களை தெரிவிப்பதாகவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-4)

### பாலியல் குற்றச்சாட்டுக்குள்ளான அமைதிப்படையினர் மீது நடவடிக்கை

# இலங்கைக்கு 2018-ல் நிதி வழங்குவதற்கு கடும் நிபந்தனைகளை விதித்த அமெரிக்கா

(வோஷிங்டன்)

இலங்கைக்கு 2018 ஆண்டின் எஞ்சிய காலப்பகுதிக்கான நிதியை வழங்குவதற்காக அமெரிக்கா கடும் நிபந்தனைகளை விதித்துள்ளது.

அமெரிக்க காங்கிரஸினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு அமெரிக்க ஜனாதிபதி கையொப்பமிட்டுள்ள சட்டமூலம் குறித்தே அமெரிக்கா கடும் நிபந்தனைகளை விதித்துள்ளது.

இலங்கையின் ஜனநாயக திட்டங்களுக்காக அமெரிக்கா 35 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

காணாமல்போனோர் குறித்த விவகாரத்திற்கு தீர்வை காண்பதற்கான நடவடிக்கைகளிற்காக இந்த நிதி பயன்படுத்தப்படும்.

இதேவேளை, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்த நிதியை பெறுவதற்காக இலங்கை மனித உரிமை பேரவையின் தீர்மானத்திற்கு ஏற்ப நம்பகத்தன்மை மிக்க பொறிமுறையை ஏற்படுத்துவதற்கு இணங்கியுள்ளது என அமெரிக்க இராஜாங்க அமைச்சர் உறுதிசெய்யவேண்டும் என காங்கிரஸ் நிபந்தனை விதித்துள்ளது.

மேலும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் இதனை உறுதிசெய்து நிதி ஒதுக்கீட்டு குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை அரசு சித்திரவதைகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கும் பொதுமக்களின் நிலங்களை விடுவிப்பதற்கும் இணங்கியுள்ளது என அமெரிக்க இராஜாங்க செயலாளர் உறுதிசெய்யவேண்டும்.

இலங்கை குறிப்பிட்ட நிதியை பெறுவதற்காக காணாமல்போனோர் குறித்த அலுவலகத்தை அமைக்க வேண்டும், யுத்தத்தின் இறுதி தருணத்தில் படையினரிடம் சரணடைந்தவர்களின் பெயர் விபரங்களை வெளியிட வேண்டும். படையினரின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் எனவும் காங்கிரஸ் நிபந்தனை விதித்துள்ளது.

இலங்கையின் படையினருக்கு என 500.000 டொலர்களையே ஒதுக்கீடு செய்துள்ள அமெரிக்கா அதனை மனிதாபிமானமற்றும்இயற்கை அனர்த்தங்களை கையாள்வதற்கான பயிற்சிகளுக்குமே கடலோர பாதுகாப்பு நடவடிக்கைகளிற்குமே பயன்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

பாலியல் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்ட இலங்கையை சேர்ந்த அமைதிப்படையினருக்கு எதிராக இலங்கை அரசாங்கம் வலுவான நடவடிக்கையை எடுத்தால் மாத்திரமே அமைதிப்படை நடவடிக்கைகளுக்கான நிதியை இலங்கைக்கு வழங்க வேண்டும் எனவும் அமெரிக்க காங்கிரஸ் நிபந்தனை விதித்துள்ளது. (இ-7)

# கடந்த ஆட்சி போலவே மீண்டும் வாகரை பிரதேசத்தில் அட்டகாசம்

## சிறிநேசன் எம்.பி.விசனம்

(மட்டக்களப்பு)

கடந்தகால ஆட்சியில் மேற்கொண்ட பாணியிலே வாகரை பிரதேசசபை உறுப்பினரிடத்தில் அட்டகாசம் மேற்கொண்டுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை கிண்ணையடி மில்லர் விளையாட்டுக் கழகத்தின் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் நிரந்தரமாக பகைகளை உருவாக்குவதாகவோ, எதிரிகளை உருவாக்குவதாகவோ ஒரு சில்லறைத்தனமான செயற்பாட்டை ஏற்படுத்துவதாகவோ அமைந்துவிடக்கூடாது.

எனவே தேர்தலை மறந்து அடுத்த கட்டமாக வட்டாரத்தின் அபிவிருத்திக்காக ஒன்றுபட்டு இயங்க வேண்டும்.

வாகரைப் பிரதேச சபையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு உதவி செய்தமைக்காக வாகரை பிரதேச சபை உறுப்பினர் சந்திரமோகன் என்பவரது படகு மற்றும் வலைகளை எரித்து பழி வாங்கிய செயற்பாடு இடம் பெற்றுள்ளது.



இந்த செயற்பாட்டை போட்டி போட்டு தோற்றவர்கள் செய்ததாக அறியக்கூடியதாக இருக்கின்றது. உழைப்புக்குரிய உபகரணத்தினை அழித்துவிட்டதாக பெருமிதம் கொண்டாலும் கூட அவரது உழைப்பின் மூலமாக 25 பேர் வாழ்வாதாரத்தைப் பெறக்கூடியதாக இருந்தது.

தான் மட்டும் வாழாது கிராமத்தை சேர்ந்தவர்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்கில் செயற்பட்ட பிரதேச சபை உறுப்பினரின் படகும் வலைகளும் எரிக்கப்பட்டதால் கிட்டத்தட்ட 23 இலட்சம் ரூபா நட்டத்தை எதிர்நோக்கியுள்ளார்.

அடாவடித்தனம், அட்டகாசம், அராஜகம் என்பன கடந்த கால ஆட்சியில் அரங்கேற்றப்பட்டது. அதன் பிற்பாடு இவ்வாறு அட்டகாசம் இல்லாமல் இருந்தாலும் பழைய பாணியில் இந்த அட்டகாசத்தை ஒரு கீழ்த்தரமான செயற்பாடாக செய்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கையிலும் நீட் தேர்வு

# போதைப்பொருள் கடத்தப்படுவதால்தான் மீனவர்கள் பிரச்சினையை தீர்ப்பதில் சிரமம்

## இராஜாங்க அமைச்சர் இராதா சமாளிப்பு

(சென்னை)

நீட்தேர்வுமுறை இலங்கையிலும் நடைமுறையில் இருக்கின்றது என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.


தேவகோட்டை அருகே வுள்ள சேது பாஸ்கரா விவசாயக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட அவர் இதனைத் தெரிவித்தார்.

காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் போராட்டங்கள் அதிகரித்துள்ளன. இதில் சுமுகத் தீர்வை ஏற்படுத்த மத்திய அரசுடன், மாநில அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். காவிரி பிரச்சினையை தீர்க்க இலங்கை அரசு தமிழக அரசிற்கு பக்கபலமாக இருக்கும்.

நீட் தேர்வு முறை, இலங்கையிலும் நடைமுறையில் இருக்கின்றது. மேலும், இலங்கை - தமிழக பாடத்திட்டங்களில் பரிமாற்றங்களை செய்து கொள்வது தொடர்பாக மாநில கல்வித் துறை அமைச்சர் செங்கோட்டையனுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிகமான போதைப் பொருள்கள் கடத்தப்படும் சூழ்நிலையால் தான் தமிழக மீனவர்கள் பிரச்சினையைச் சந்திக்கிறார்கள். சீனாவின் ஆதிக்கம் உலக நாடுகள் அனைத்திலும் இருக்கின்றது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்புள்ளம் கொண்டு நீ
பண்பாய் பழகிடுவாய்
அமைதியாய் என்றும் பாசமாய் பேசிடுவாய்
வந்தாரை வரவேற்கும் வள்ளல் நீ
வற்றாத உன் வள்ளல் குணமையா
மங்கையின் அன்பு மணாளன் நீ
பிள்ளைகளின் ஆசை தந்தை நீ
உன் உறவுக்கு நல்ல சொந்தம் நீ
ஊரில் எல்லோருக்கும் என்றும் நண்பன் நீ
நீ மறைந்து ஓராண்டு போனதென்ன
உனை நினைத்து நெஞ்சம்
துடிப்பது என்ன
ஓராண்டு என்ன ஆண்டுகள்
ஆகட்டும் ஆயிரம்
மறவோம் நாம் உன் அன்பு முகம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கடந்த வருடம் (29.04.2017)
சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்**

## அமரர் இராசரெத்தினம்
## நாகராசா (ஆச்சாரியார்)

**அவர்களின் முதலாம் ஆண்டுக் கிரியைகள் விளம்பி வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் (18.04.2018) இன்று புதன்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

இல. 15, கண்ணாபுரம்,
நாவாந்துறை.

- குடும்பத்தினர்

(3650)

# மக்கள் நலன்களை முன்னிறுத்தி சேவையாற்றுங்கள்

## டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

தேர்தல் காலத்திலும் அதன் பின்னரான உள்ளூராட்சி மன்றங்களை அமைக்கும் காலத்திலும் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட கசப்பான சம்பவங்களை தொடர்ந்தும் முன்னிறுத்திக் கொண்டிராது மக்களுக்கான சேவைகளைச் செய்ய அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா நகரசபையின் ஆட்சி அமைப்பின்போது நடைபெற்ற சம்பவங்கள் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டியவை என்றே கருதுகின்றேன். மனக் கசப்புக்களை முன்னிறுத்தாது சபைகளின் அதிகாரத்தை பெற்றுள்ள அனைத்து தரப்பினரும் தாம் மக்களுக்கான சேவையை கருத்தில்கொண்டு மக்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்காக ஒருமித்து செயலாற்ற வேண்டும்.

அவ்வாறான ஒரு சூழ்நிலை உருவாகும் போதே தமிழ் மக்கள் எதிர்பார்த்த பலாபலன்களை ஓரளவேனும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் என நம்புகின்றேன்.

மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொடுக்காமல் எந்தத் தரப்பினராலும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுடன் இருந்து முரண்பட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அந்தவகையில் சபைகளை பொறுப்பேற்ற அனைவரும் தேவையற்ற முரண்பாடுகளையும் தனிப்பட்ட வன்மங்களையும் கைவிட்டு மக்கள் நலன்களை முன்னிறுத்தி செயலாற்ற வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தையின் குறைபாடுகள் தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர்கள் ஆராய்வு



(கரணவாய்)

நெல்லியடி சந்தையின் குறைபாடுகள் தொடர்பில் கரவெட்டிப் பிரதேச சபை உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று ஆராய்ந்துள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை கரவெட்டி பிரதேச சபையின் கன்னி அமர்வு இடம்பெற்றது.

அதற்கு முன்னதாக சுதந்திரக் கட்சியின் சதாசிவம் இராமநாதன் தலைமையிலான பிரதேச சபை உறுப்பினர்கள் சந்தைக்கு நேரடியாகச் சென்று வியாபாரிகளின் குறை நிறைகளைக் கேட்டறிந்தனர்.

சந்தையின் பழக்கடை உள்ள பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படாமை, கழிவகற்றும் வாகனம் சந்தைப் பகுதியில் தரித்து நிற்பது உள்ளிட்ட குறைபாடுகளை வியாபாரிகள் பிரதேச சபை உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதற்குப் பதிலளித்த சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் சதாசிவம் இராமநாதன் இது தொடர்பில் அடுத்த முறை இடம்பெறும் பிரதேச சபைக் கூட்டத்தில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (இ-60)

# தொண்டராசிரியர்கள் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 20ஆம்திகதி காலை, மாலை மத்திய கல்வி அமைச்சில் நடைபெறும் நேர்முகத் தேர்வுகளில் தோற்றும் தொண்டராசிரியர்களுக்கு போக்குவரத்து வசதியும் பத்தரமுல்லையில் தங்குமிட வசதி, உணவு வசதி என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் 19ஆம் திகதி மாலை 5.00மணிக்கு சங்கத் தலைவரின் ஏற்பாட்டில் செல்ல விரும்புபவர்கள் 077 437 9606 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும் என யோ. அருட்செல்வம் அறிவித்துள்ளார். (இ)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் குருதி சுத்திகரிப்பு நிலையம் திறப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள குருதி சுத்திகரிப்பு நிலையம் இன்று புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

காலை 9.30 மணிக்கு நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் ஞானசீலன் குணசீலன் கலந்து கொள்வார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவிற்கு அமைவாக வைத்தியசாலைகளில் குருதி சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

# உலகப் புத்தக நாள்

(யாழ்ப்பாணம்)

இம்மாத இறுதியில் வரும் உலகப் புத்தக நாளை முன்னிட்டு, யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டம், உரை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது.

வாசகர் வட்டத் தலைவர் அ.யேசுராசாவின் தலைமையில் இந்நிகழ்ச்சி கள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில்பொது சன நூலக குவிமாடக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. 'புத்தகத்தின் வழிப் படம்' என்னும் தலைப்பில் ச.சத்தியதேவனும், 'எனக்குப் பிடித்த புத்தகங்கள் சில....' என்னும் தலைப்பில் குப்பிழான் ஐ.சண்முகனும், 'சம கால ஈழத்து இலக்கியச் செல்நெறி' என்னும் தலைப்பில் தி.செல்வமனோகரனும், 'வ.அ.இராசரத்தினம் படைப்புலகம்' என்னும் தலைப்பில் த.அஜந்தகுமாரும், 'கி.ராஜநாராயணன் படைப்புலகம்' என்னும் தலைப்பில் சோ.பத்மநாதனும் உரையாற்றுவார்கள்.

ஆர்வமுள்ள யாரும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளலாமென வாசக வட்டத்தினர் அறிவித்துள்ளனர் (இ-7)


வலம்்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு;
021 221 7603,
021 567 1532



33வது பிறந்தநாள் நினைவுகள்



செல்வி. வல்லிபுரநாதன் பிறிந்தாஜினி (பிறிந்தா)

மலராய்: 18.04.1985
விதையாய்: 02.01.2009

விண்ணில் கலந்தவளே எம் கண்ணில் நிறைந்தவளே
அன்புத் திருமகளே எம் ஆசைக்கினியவளே
புண்ணில் வேலோடு எம் பொழுதிருவாய்க் கழிந்திட நாம்
இன்பம் தொலைத்துந்தன் இன்முகத்தைத் தேடுகின்றோம்.

எங்கள் சுடர் நிலவே எம் இதயத்தொளிர்பவளே
துயரப் பெருவெளியில் நாம் துடிதுடிக்கக் கரைந்தவளே
நீங்காத் துயரமதை எம் நெஞ்சமெல்லாம் சுமக்கின்றோம்
உன் பிறந்த நாள் நினைவில் உதிரமதை வடிக்கின்றோம்



இராமலிங்கம் வீதி, மட்டுவில்நாடு மேற்கு, பூநகரி. குடும்பத்தினர்.


## இராசி பலன்

**மீனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பகை விலகி பாசம் கூடும் நாள்.

**மேடம்:** காலைப் பொழுதே கல கலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில்கூட வெற்றி கிடைக்கலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்:** பெருமைகள் வந்து சேர பெருமாளை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்:** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள்.

**கும்பம்:** பெற்றோர் மீது பிரியம் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**மகரம்:** சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்:** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு.

**தனுசு:** அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், வியாபார விரோதம் விலகும், கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், திடீர் பயணங்கள் சிந்திக்க வைக்கும், களத்திர நன்மையுண்டு.

**துலாம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


**கன்னி:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், பயணங்கள் கைகூடும்.

**கிரகநிலை:** புத | சூரி.சந் சுக் | ராகு | கேது | சனி, செவ் | குரு

இராசி பலன்
கிரகநிலை
சந்திராஷ்டமம்
சித்திரை, சுவாதி
காலை 9.10 மணிக்கு
இடப-சந்

**18.04.2018**
சித்திரை 05, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
திருதியை பின்னிரவு 3.46 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 2.28 மணிவரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை
இராகுகாலம் 12.03-01.33 மணிவரை
கார்த்திகை விரதம்
அட்சய திருதியை, அமிர்த சித்தம்
வள்ளவன்

# வடக்கு ஆளுநராக ரெஜினோல்ட் கூரே நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார்



படங்கள்:-உ.சாளின்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள ரெஜினோல்ட் கூரே நேற்றைய தினம் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாகப் பழைய பூங்காவில் அமைந்துள்ள அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார். நாட்டில் உள்ள அனைத்து மாகாண ஆளுநர் மாற்றத்தின் போது வடக்கு மாகாண ஆளுநராக இருந்த ரெஜினொல்ட் கூரேயையும் ஜனாதிபதி மாற்றியிருந்தார்.

எனினும் வடக்கு மாகாணத்துக்கு தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் பல்வேறு தரப்பட்டவர்களால் முன்வைக்கப்பட்ட நிலையில் தமிழர் ஒருவரே வடக்கு மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இதே போன்று ஜனாதிபதியிடம் இந்த கோரிக்கையை விடுத்திருந்தனர்.

எனினும் முன்னர் இருந்த வடக்கு ஆளுநராக ரெஜினோல்ட் கூரேயை ஜனாதிபதி மீண்டும் நியமித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று யாழ்.வந்த கூரேக்கு பலாலியில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாக அமைந்துள்ள மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு வந்த அவருக்கு மாலைகள் அணிவித்தும் பொன்னாடைகள் போர்த்தியும் வரவேற்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து மீளவும் வடக்கு மாகாண ஆளுநராக தன்னுடைய கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார். இதன் போது வடக்கிலுள்ள பலரின் வேண்டுகோளுக்கமையவே தான் மீளவும் இங்கு வந்துள்ளதாகவும் தான் இங்கு செய்ய வேண்டிய கடமைகள் நிறையவே இருப்பதாகவும் அவற்றைச் செய்வதற்காக சகல நடவடிக்கைகளையும் தான் முன்னெடுக்க உள்ளதாகவும் கூறினார். இந்த பதவியேற்பு நிகழ்வுகளில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (இ-4)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகத்தில் முன்பள்ளி சிறார்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கான சித்திர பாட செயலாற்றுகையும் கண்காட்சியும் அண்மையில் பணிப்பாளர் திருமதி. காண்டீ தனபாலன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கனடா டொரண்டோ நகர் கல்வி சபை உறுப்பினர் பா.சிவபாலன் கலந்து கொண்டார். சிறுவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் நிறக்கலவைகள் மூலமாகவும் கணனி மூலமாகவும் படங்களை வரைந்து காட்சிப்படுத்தினர்.

(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# தவராசாவிடமிருந்து பதவியை பறிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி சி.தவராசாவிடமிருந்து பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளதாக மாகாண சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பதவியை சிங்கள உறுப்பினர் ஒருவருக்குப் பெற்றுக்கொடுக்கும் முயற்சிகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்னெடுத்து வருவதாகத் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவிடம் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமக்கு வழங்குமாறு, மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போர்க்கொடி தூக்கியுள்ளது. அதனால் அந்தப் பதவியைப் கொடுப்பதா? அல்லது தொடர்ந்தும் தவராசாவையே இருக்க அனுமதிப்பதா? என்பது தொடர்பில் இழுபறிநிலை காணப்படுகிறது என்று அறிய முடிகிறது.

கட்சிக்குள் ஏற்பட்ட உள் முரண்பாடுகள் காரணமாக சி.தவராசாவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று ஈ.பி.டி.பியினர் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். எனினும் சபையில் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து தவராசாவை நீக்கி விட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக வவுனியா மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினரான ஜெயதிலகவை அந்தப் பதவிக்கு நியமிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண உறுப்பினர்கள் மாகாண சபையின் அவைத் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-4)

# க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள்

**யா/புத்தளை மகா வித்தியாலயம்**

வி.மதிவர்மன்-4ஏபி4சி, வை.சயிதன்-3ஏ5பிசி, எம்.சஞ்சயன்-3ஏ2பி3சிஎஸ், என்.தாரணி-3ஏ2பி3சிஎஸ், இ.தர்சனா-3ஏபி3சி2எஸ், வை.அபிராமி-3ஏபிசி3எஸ், எஸ்.பிரசாத்-2ஏ2பி5சி, கே.சகீதாஸ்-2ஏ2பி4சிஎஸ், ஆர்.றோகினி-2ஏபி3சிஎஸ், எல்.அபிரா-ஏ2பி4சி2எஸ், கே.சிந்துஜன்-ஏ2பி2சி4எஸ், ரிசாலினி-ஏபி3சி4எஸ், எஸ்.சர்மினி-4பி3சிஎஸ், கே.அனித்தா-3பி3சி3எஸ், பி.பிரசாந்தி-பி4சி3எஸ், பி.விதுசன்-5சி4எஸ். (இ)

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீரிழிவு கழகம் நடத்தும் நீரிழிவு நோயாளரை இனங்காணும் இலவச மருத்துவ முகாம் இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் அச்சுவேலி பேருந்து நிலைய முன்றலில் இடம்பெறும். இந்நிகழ்வில் இரத்த அமுத்தம், உடல் திணிவு சுட்டெண் போன்றவையும் பரிசீலிக்க முடியும். (இ)

# விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் "சிறந்த நூற்பரிசுப் போட்டி-2017" வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள "கலை இலக்கிய நாடக மன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி", "முதலமைச்சர் விருது-2018", "இளம் கலைஞர் ஊக்குவிப்பு பரிசு-2018" என்பவற்றுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவற்றுக்கான முடிவுத்திகதி 20.04.2018 ஆகும்.

இவற்றுக்கான விண்ணப்படிவங்களினையும் மேலதிக விபரங்களினையும் எமது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (இ)



யாழ்.செய்திகள்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்களின் சித்திரைப் புத்தாண்டு, பொங்கல் நிகழ்வும், பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகர் சேர்.பொன்.இராமநாதனின் பிறந்த நாள் நிகழ்வும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள இராமநாதன் மண்டப முன்றலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சேர்.பொன்.இராமநாதனின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி செய்து, பொங்கல் இடம்பெற்றதுடன் கைவிசேஷமும் வழங்கப்பட்டது.

# மகிந்தானந்தவுக்குப் பிணை



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவை நேற்று பிணையில் விடுவிக்குமாறு கோட்டை நீதவான் லங்கா ஜெயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

பிணை நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாமையால் நேற்று முன்தினம் விளக்கமறியலில் வைக்கப்பட்ட மகிந்தானந்தவுக்கு நேற்றுப்பிணை வழங்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு விளையாட்டுத்துறை அமைச்சராக இவர் பதவி வகித்த காலத்தில் கரம்போர்டுகளை கொள்வனவு செய்து, 39 மில்லியன் நிதியை அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் இவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காக முன்னாள் அமைச்சர் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையான போதே நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தார். நேற்று முன்தினம் அவரது வெளிநாட்டுப் பயணங்களுக்கும் நீதவான் தடைவிதித்ததுடன், அவரது கடவுச்சீட்டை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

எனினும் நீதிமன்ற பிணை நிபந்தனைகளை நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே ஒப்புக்கொள்ள மறுத்ததால், அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எவ்வித பேதங்களுமின்றி அபிவிருத்திப் பணிகள்

## கரவெட்டி தவிசாளர் உறுதியளிப்பு



(கரணவாய்)

எவ்விதமான பேதங்களும் இன்றி கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்போம் என கரவெட்டிப் பிரதேச சபையின் தவிசாளர் தங்கவேலாயுதம் ஐங்கரன் தெரிவித்தார்.

கரவெட்டிப் பிரதேச சபையின் கன்னி அமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சபையின் தவிசாளர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கரவெட்டி பிரதேச சபையினைப் பொறுத்தவரையில் எவ்விதமான கட்சி, சாதி, சமயம், பிரதேச வேறுபாடுகள் இன்றி அபிவிருத்தியை முன்னெடுப்போம்.

ஒவ்வொரு உறுப்பினர்களின் முன்மொழிவுகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (இ-60)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

# பிரதி சபாநாயகர் பதவிக்கு ஐ.தே.கட்சியின் உறுப்பினர்

(கொழும்பு)

வெற்றிடமாகியுள்ள பிரதி சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரொருவர் நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெயரும் குறித்த பதவிக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லையென்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த நாடாளுமன்றக் குழு கலந்துரையாடலின் போது, இது தொடர்பில் கலந்துரையாட பின்வரிசை உறுப்பினர்கள் தயாராகவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளமையால் ஏற்பட்ட வெற்றிடமானது நாடாளுமன்றத்தின் இரண்டாம் அமர்வுகளின் போது, நிரப்பப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் TV உதிரிப் பாக விற்பனை நிலையத்திற்கு கீழ்க் காணும் வெற்றிடங்கள் உள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும்.

Manager-40,000/- வரை
Bill Clark-25,000- வரை
Store Keeper-25,000/- வரை
Accountant-30,000/- வரை
உதவியாளர்கள்-20,000/- வரை
உதவி Technicians-25,000/- வரை

தங்குமிடம் உணவு வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். 077 771 0785

Satstech Engineers Pvt (Ltd)
Colombo-13

# கலைஞர்களுக்கான ஊக்குவிப்பு பரிசு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வரும் "இளங்கலைஞர்களுக்கான ஊக்குவிப்புப் பரிசு 2018" இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நாற்பது வயதிற்குட்பட்ட துறைசார் கலைஞர்கள் எதிர்வரும் 2018.04.20 ஆம் திகதிக்கு முன்னர் வலி.தென்மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ)

## விற்பனைக்கு

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி சந்தைக்கு அருகாமையில் 3 அறை வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. [3868]

தொடர்புகளுக்கு:
077 062 3444

## மேலாளர் / எக்கவுண்டன் தேவை

யாழில் இயங்கிவரும் டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் TV உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு பொறுப்பாக செயற்படக் கூடிய கணனி அறிவுள்ள பெண் அல்லது ஓய்வு பெற்ற ஆண் ஒருவர் தேவை. பொறுப்பாக செயற்படக் கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

தொடர்பு: 077 771 0785

## ரிதுபன் மோட்டோர்ஸ்
## Rithubhan Motors



மோட்டார் வாகன
உதிரிப்பாகங்கள் விற்பனை
நிலையம் திறப்பு விழா

இல.71. பலாலி றோட், இலுப்பையடி சந்தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எமது வியாபார நிலையம், 18.04.2018 புதன்கிழமை காலை 9.00 மணியளவில் மங்களகரமாக திறந்து வைக்கப்படவுள்ளது. வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். சகலவிதமான மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள், பற்றறி வகைகள், சகலவிதமான ஒயில் வகைகள், ரயர் ரீயூப் வகைகள், தலைக் கவசங்கள் போன்றவற்றை மிக மலிவான விலைகளில் எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும்.




(3644)

Rithubhan Motors, No.71, Palaly Rd,Illuppaiyady Junction, Jaffna.
T.P: 076 764 8025/076 680 1484. rithubhanmotors@qamil.com

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 32 செவ் 12 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்
தொ.இ: B/8475

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:பொறியியலாளர்/கனடா
தொ.இ: B/8477

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 32
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
தொ.இ: B/8480

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்(தனியார்)
தொ.இ: B/8482

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: IT/பொறியியலாளர்
தொ.இ: G/7618

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அனுசம்
தகைமை/தொழில்: தாதி கனடா
தொ.இ: G/7619

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 30
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில்
தொ.இ: G/7625

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அனுசம்
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: G/7628

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# நீரேந்து பிரதேசம், கரையோரப் பகுதி நிலங்களை கையகப்படுத்திய நபர்களுக்கு எச்சரிக்கை கடிதங்கள்

## வவுனிக்குள நீர்ப்பாசன திணைக்களத் தகவல்படி

(மல்லாவி )

வவுனிக்குளத்தின் பிரதான நீர்ப்பாசனக் கால்வாய்களுக்குட்பட்ட குளங்களினது நீர் ஏந்து பிரதேச நிலங்களையும் மற்றும் பாலியாற்றினது கரையோரப் பகுதி நிலங்களையும் சட்டவிரோதமான முறையில் கையகப்படுத்தி வைத்திருக்கும் நபர்களுக்கு அந்த நிலங்களை உடனடியாகக் கைவிட்டுச் செல்லுமாறு எச்சரிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டு வருவதுடன் நீர் ஏந்து பிரதேசத்தின் நிலங்களுக்கும் அடையாள எல்லைக் கற்களும் நடப்பட்டு வருவதாக வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனிக்குளத்தின் வலது கரை நீர்ப்பாசனக் கால்வாய் நீர் செல்லும் வழியில் உள்ள கறுப்பி குளம் மற்றும் பணியாரக்குளம் ஆகியவற்றின் நீர் ஏந்து நிலங்களையும் இடது கரை பிரதான கால்வாயின் நீர் செல்லும் வழியில் உள்ள குமரிகுளம், பாண்டியன் குளம், கரும்புள்ளியான் குளம், பூவரசங்குளம், கொம்பறுத்த குளம், விநாயகபுரம் சில்வா குளம் ஆகியவற்றின் நீர் ஏந்து பிரதேசத்தின் நிலங்களையும் சிலர் சட்டவிரோதமான முறையில் கையகப்படுத்தி வைத்திருக்கும் நிலையில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் எச்சரிக்கையையும் மீறி மண் கொண்டு நிரவி தோட்டம் மற்றும் வீடுகளை அமைத்து வருகின்றனர். இதே போன்று, வவுனிக் குளத்திற்கு நீர் வழங்குவதுடன் மேலதிக நீரை வெளியேற்றும் பிரதான ஆறு பாலியாறு ஆகும்.



இந்த ஆற்றின்கரையோரங்கள் அடர்ந்த காட்டு மரங்களைக் கொண்டு மண்ணரிப்பு ஏற்படாதவாறு பாதுகாக்கப்பட்டு வரும் நிலையில், சில சமூக விரோதிகள் ஆற்றின் கரையோரங்களைக் கைப்பற்றி காட்டு மரங்களை வெட்டி எடுத்து செல்வதுடன், நிலங்களை கையகப்படுத்தி தோட்டச் செய்கையில் ஈடுபட்டுள்ளமையால் பாலியாற்று கரையோர பகுதியில் மண்ணரிப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சட்டவிரோதமான செயல்களினால் விவசாயிகளின் வயல் நிலங்களுக்கு நீர் கொண்டு செல்ல முடியாது இருப்பதுடன், கிராம மக்களின் குடிநீர்க்கிணறுகளின் நீர் மட்டமும் குறைவடைந்து வரண்டு வருவதுடன், ஆற்றுப் பகுதியில் இயற்கைச் சூழல் பாதிப்புடன், மண்ணரிப்பும் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, குளங்களின் நீர் ஏந்தும் நிலப்பரப்பை எல்லைப்படுத்தியும் பாலியாற்றின் கரையோரங்களை எல்லைப்படுத்தியும் அடையாள எல்லைக் கற்கள் நடப்பட்டு வருவதுடன், சட்டவிரோதமான முறையில் பாலியாற்று கரையோரங்களை கைப்பற்றி வேலி அமைத்துள்ளவற்றை அகற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பாரதி நகர் கிராமத்தின் ஊடாகச் செல்லும் பாலியாற்று கரையோரங்களை அரசியல் செல்வாக்குடன் தனி நபர் ஒருவர் கைப்பற்றி வேலியிட்டு தோட்டச் செய்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் அவர் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த வேலிகளையும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அதிகாரிகள் பிடுங்கி உழவு இயந்திரங்களில் ஏற்றிச் சென்றுள்ளதாகவும் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




# கண்டாவளை பதில் பிரதேச செயலாளராக ஜெயராணி பரமோதயன் நியமனம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பதில் பிரதேச செயலாளராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ஜெயராணி பரமோதயன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளைப்பிரதேச செயலாளராக கடமையாற்றிய கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்த நிலையில் குறித்த பிரதேச செயலாளர் வெற்றிடம் நிரப்பப்படாத நிலையில் காணப்பட்டது.

இந்நிலையில் தற்போது பச்சிலைப்பள்ளிப்பிரதேச செயலாளராகப் பணியாற்றி வரும் திருமதி ஜெயராணி பரமோதயன் கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (2-315)

# மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச சபைகளின் தவிசாளர், உப-தவிசாளர் தெரிவுகள் இன்று

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர், உபதவிசாளர் தெரிவுகள் இன்று புதன் கிழமை நடைபெறவுள்ளன.

13 உறுப்பினர்களைக் கொண்ட மாந்தை கிழக்கு. பிரதேச சபையில் எந்தக்கட்சிகளும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு 6 உறுப்பினர்களையும் ஐக்கிய தேசிக்கட்சி 4 உறுப்பினர்களையும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி ஒரு உறுப்பினரையும் சுதந்திரக்கட்சி இரண்டு உறுப்பினர்களையும் கொண்டுள்ள நிலையில் எந்தக்கட்சியும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலையில் ஐக்கிய தேசியக்கட்சி கூட்டாக இணைந்து ஆட்சியமைக்கவுள்ளதாகவும் இதில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் இரண்டு உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கவிருப்பதாகவும் மேற்படி கட்சி சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-315)

# முதியோர்களுக்கு ஆன்மீக சுற்றுலா

(பூநகரி)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் ஆன்மீகச் சுற்றுலா ஒன்றை பூநகரி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த முதியோருக்கு நாளை வியாழக்கிழமை ஏற்பாடு செய்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கன்னியா வெந்நீரூற்று, திருக்கோணேஸ்வரம், சிறீபத்திரகாளி அம்பாள் கோவில் ஆகிய திருத்தலங்களுக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

முதியோர்களது உள சமூக மேம்பாடு கருதி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் இதுபோன்ற நிகழ்வுகளை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஏனைய மாவட்ட சமூக சேவைகள் அலுவலகங்களும் இதுபோன்ற ஆன்மீகச் சுற்றுலாவை தொடர்ச்சியாக ஏற்பாடு செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (2)

# ஊற்றுக் குளத்தை புனரமைத்து வயல் காணிகளை மக்களுக்கு பயிர்ச்செய்கைக்கு வழங்க வேண்டும்

## சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்படும் என சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் சேதமடைந்த நிலையில் காணப்படும் ஊற்றுக்குளத்தினை புனரமைத்து அதற்குட்பட்ட வயல் காணிகளை அந்தப் பகுதி மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஊற்றுப்புலம் கிராமத்தில் தற்போது 450 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

குறித்த கிராமத்தில் வாழும் பெருமளவான விவசாயக் குடும்பங்களுக்கு விவசாயச் செய்கைகளுக்கான காணிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் குறித்த கிராமத்தில் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

ஊற்றுப்புலம் கிராமத்தில் வனவளதிணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் சேதமடைந்த நிலையில் காணப்படும் ஊற்றுக்குளத்தை புனரமைத்து அதன் கீழுள்ள சுமார் 100 ஏக்கர் வரையான வயல் நிலங்களை வனவளத் திணைக்களத்திடமிருந்து விடுவித்து அந்த மக்களுக்கு பயிர்ச்செய்கைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் உரிய திணைக்களங்கள் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு கடிதங்களையும் அனுப்பவுள்ளதாகவும்தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த குளம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் ஊற்றுப்புலம் கிராமத்தில் கூடுதலான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த குளத்தை புனரமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

கடந்த 2002ஆம் ஆண்டில் குளம் புனரமைக்கப்பட்டு மீளவும் உடைப்பெடுத்துள்ளது.அதன் பின்னர் புனரமைக்கப்படவில்லை.

கடந்த வருடம் மேற்படி கிராம மக்கள் அரச அதிகாரிகளிடம் விடுத்த கோரிக்கைகளுக்குஅமைவாகஅதனை புனரமைக்க வேண்டிய தேவையின் அடிப்படையில் குளதனதச் சென்று பார்வையிட்டதாகவும் இரண்டு ஆறுகள் இந்தக் குளத்தின் ஊடாக செல்கின்றன.

அதனால் குளம் உடைப்பெடுத்துள்ளது. அதனை திருத்துவதன் மூலம் நீரைத் தேக்கக்கூடியதாக இருக்கும். அதனை புனரமைப்பதற்கு முற்பது மில்லியன் ரூபாவிற்கு மதிப்பீடுகள் செய்யப்பட்டு கடந்த ஆண்டில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சுக்கு கடந்த வருடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதற்கான நிதி கிடைக்கவில்லை. அதேபோல இவ்வருடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும், ஒரு இடர்பாடு காணப்படுகின்றது. அதாவது காட்டுப்பிரதேசத்தில் இருப்பதனால் குளத்தினையும் அதற்குட்பட்ட வயல் நிலங்களும் வனவளத்திணைக்களத்தின் கீழ் இருப்பதனால் இதனைவிடுவிக்க வேண்டும் எனவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார்(2-315)

# வாழ்வோம் வளம் பெறுவோம் பதினாறாம் கட்டம் உள்ளீர்ப்பு

(முல்லைத்தீவு)

வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்படும் வாழ்வோம் வளம் பெறுவோம்எனும் செயற்றிட்டத்தின் பதினாறாம் கட்டமானது அண்மையில் அவரது மக்கள் தொடர்பகத்தில் நடைபெற்றது.

புலம்பெயர் அன்பர்களின் பங்களிப்பில் முன்னெடுக்கப்படும் குறித்த செயற்றிட்டத்தின் பதினாறாம் கட்டத்தில் தாயகத்தைச் சேர்ந்த பதினொரு குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

குறுங்கால வாழ்வுடைமை ஊக்குவிப்பை நோக்காகக் கொண்டு நாளாந்த உணவுத் தேவைக்கு இடர்படும் குடும்பங்களுக்கான ஒத்துழைப்பாக வாழ்வோம் வளம் பெறுவோம் எனும் செயற்றிட்டமானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

புலம்பெயர்ந்து வாழும் அன்பரின் பணப்பங்களிப்பில் நடைபெற்று முடிந்த பதினாறாம் கட்டத்துடன், இதுவரையில் ஐந்நூற்று எழுபத்தெட்டு குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

செயற்றிட்டத்தின் பதினாறாம் கட்டத்தில் பதினொரு குடும்பங்களுக்கு 200 கிலோ அரிசி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# நீர் வற்றியமையால் 4 குளங்களின்கீழ் 53 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

## துணுக்காய், பாண்டியன்குளம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவிப்பு

(மல்லாவி )

துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய கமநல சேவை நிலையங்களிற்குட்பட்ட 76 சிறிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் சுமார் 3 ஆயிரத்து 900 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டு வரும் நிலையில் நடப்பாண்டில் குளங்களில் நீர் வற்றிப் போயுள்ளதால் சிறுபோக நெற்செய்கையாக 4 குளங்களின் கீழ் 53 ஏக்கரில் மட்டுமே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துணுக்காய், பாண்டியன்குளம் கமநல சேவை நிலையங்களின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கடந்தாண்டு தொடக்கம் நடப்பாண்டு முற்பகுதி வரையிலான காலத்தில் கால நிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக போதிய மழைவீழ்ச்சியின்மையால் நீர்ப்பாசனக் குளாங்களிற்கு நீர்வரத்து குறைவடைந்தமையால் கடந்த காலபோகம் மற்றும் நடப்பாண்டுக்குரிய சிறுபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய்கமநல சேவை நிலையத்தின் கீழ் 15 நீர்ப்பாசன குளங்கள் உள்ள நிலையில் உயிலங்குளம் கிராமத்தில் உள்ள மணற் குளத்தில் மட்டும் 11 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை, பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 61 நீர்ப்பாசன குளாங்கள் உள்ள நிலையில், பாலைப்பாணி குளத்தின் கீழ் 12 ஏக்கரிலும், கொம்பறுத்த குளத்தின் கீழ் 15 ஏக்கரிலும், வடகாடு குளத்தின் கீழ் 12 ஏக்கரிலும், அம்பாள்புரம் வண்டிக்கட்டுக் குளத்தின் கீழ் 5 ஏக்கரிலுமாக மொத்தம் 4 குளங்களின் கீழ் 42 ஏக்கரில் மட்டுமே நெல் பயிரிட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக கமநல சேவை நிலையங்களிற்குட்பட்ட 76 நீர்ப்பாசனக் குளங்களில் 5 குளங்களில் மட்டும் 53 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ளமையால் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் சுமார் 8 ஆயிரத்து 300 குடும்பங்கள் நிர்க்கதியான நிலையிலுள்ளதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (2-15)

## தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிய

## போட்டிகளுக்கான பரிசளிப்பும் பூங்கதிர் சஞ்சிகை வெளியீடும்

(பூநகரி)

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிய பூநகரி பிரதேச சபையின் பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவும் பூங்கதிர்-5 ஆவது சஞ்சிகை வெளியீடும் நேற்று முற்பகல் 10 மணியளவில் பூநகரி பிரதேச செயலக பொது நூலக மண்டபத்தில் பிரதேச சபை தவிசாளர் அ.ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்நிழ்விற்கு பிரதம விருந்தினர் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் த.பிரபாகரன், பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஷ்னேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

வரவேற்புரையை தொடர்ந்து பூநகரி கோட்ட பாடசாலைகளில் இருபது கட்டுரை, கவிதை, பேச்சு ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள், கேடயங்கள் வழங்கப்பட்டன.

பூங்கதிர் 5ஆவது சஞ்சிகையின் ஆய்வுரையை இணுவையூர் இனியன் ச.அன்ரன் போல் ஆற்றினார்.

பூங்கதிர் முதற் பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் இருந்து பிரதம விருந்தினர் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து தமிழ் அறிவோம் எனும் போட்டி நிகழ்வு நடைபெற்று பரிசில் வழங்கப்பட்டது. (2-84)

## வீதி விளக்குகள் பொருத்தி வைப்பு

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஒழுங்குபடுத்தலில் புலம்பெயர் தமிழர் ஒருவரின் நிதிப்பங்களிப்பில் பளை பிரதேசத்தின் அரசர்கேணி கிராமத்திற்கு செல்லும் பிரதான பாதைக்கு வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

குறித்த புலம்பெயர் அன்பரால் அறுபது ஆயிரம் ரூபாய் பெறுமதியான விளக்குகள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இந் நடவடிக்கையை பளை பிரதேச சபை தவிசாளர் சுரேன், பிரதேச சபை உறுப்பினர் துச்சோதனன் ஆகியோர் நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளனர். (2)




## ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலையில் இயங்கும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் போதிய ஆளணி வசதிகளின்றி இயங்கி வருவதனால் உரிய சேவைகளை மக்களுக்கு வழங்கமுடியாதநிலை காணப்படுவதாக மேற்படி திணைத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் இயங்கி வரும் அரச திணைக்களங்களில் தொடர்ந்தும் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலையில் காணப்படுவதனால் இங்கு சேவைபெறும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மாந்தை கிழக்கு பிரதேச கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் தொடர்ந்தும் ஆளணிப் பற்றாக்குறையுடன் இயங்கி வருவதனால் மக்கள் சேவை பெறுவதில் சிரமங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேற்படி திணைக்களம் மூன்று கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதும், இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை. இதேவேளை திணைக்களத்தில் மூன்று தொழிலாளிகள் கடமையாற்ற வேண்டிய நிலையில் இரண்டுபேர் மட்டுமே கடமையாற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளதுடன், அலுவலக கடமை நேரம் அல்லாத ஏனைய நேரங்களில் அலுவலக திறப்புக்களை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டியுள்ளது.

இதனால் மேலதிக நேரங்களில் மக்களுக்கான தமது சேவைகளை வழங்கமுடியாதுள்ளதாகவும் மேற்படி திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## அளம்பில் துயிலுமில்லக்காணியை மீட்பதற்கு செயற்பாட்டுக்குழு அமைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் படையினர் நிலை கொண்டுள்ள துயிலுமில்ல காணியை மீட்பதற்காக பிரதேச மக்கள் செயற்பாட்டுக் குழு ஒன்றினை அமைத்துள்ளார்கள்.

அளம்பில் பகுதியில் 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் தங்கள் பிள்ளைகளின் சடலங்கள் புதைக்கப்பட்ட காணியில் படையினர் நிலை கொண்டுள்ளார்கள்.

இதனை படையினருக்கு வழங்கவேண்டாம். கடந்த மார்ச்மாதம் 26 ஆம் திகதி பிரதேச மக்கள் கையெழுத்திட்ட கோரிக்கை மனு ஒன்றினை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளார்கள்.

இந்நிலையில் குறித்த காணியை மீட்பதற்காக பிரதேச மக்கள் செயற்பாட்டுக் குழு ஒன்றினை அமைத்து அதன் ஊடாக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, குறித்த காணியில் படையினர் நிலை கொண்டுள்ளதுடன் காணி தனிநபருக்குரிய காணி என்றும் அந்த காணியை படையினருக்கு விற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தக்காணியை புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் அனைவரின் உதவிகொண்டும் மீட்டு குறித்த பகுதியில் இவ்வாண்டு நவம்பர் மாதம் உயிரிழந்த எங்கள் பிள்ளைகளை நினைவிற்கொள்ள வழிசமைக்கவேண்டும் என்றும் செயற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இந்த காணியை மீட்பதற்கான சட்ட நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாகவும் இதற்கு அனைத்து தமிழ்மக்களும் உதவி செய்யவேண்டும் என்றும் கோரியுள்ளார்கள். (2-281)

## ஆனந்த சுதாகரன் விடுவிக்கப்படவில்லை இந்நிலையில் எமது நிலை என்ன?

### அருட்சகோதரிகளிடம் காணாமற்போனோரின் உறவுகள் கேள்வி



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை அருட்சகோதரிகள் சந்தித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்களை மீட்பதற்காக முல்லைத்தீவில் கடந்த வருடம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன் கூடாரம் அமைத்து ஆரம்பித்த போராட்டம் இரண்டு சித்திரைப் புத்தாண்டுகளை வீதியில் கொண்டாடும் நிலையில் உறவினர்களின் போராட்டம் 404 ஆவது நாளாக நேற்று முன்தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் கொழும்பில் இருந்து அருட்சகோதரிகள் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவுக்கு வருகைதந்து உறவுகளை சந்தித்துப் பேசியுள்ளனர்.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்ட உற வினர்களின் அமைப்பின் தலைவி கருத்துத் தெரிவிக்கையில்.

அரசியல் கைதியாக இருக்கின்ற ஆனந்த சுதாகரனை விடுதலை செய்வதாக அப்பிள்ளைகளுக்கு உறுதியளித்த ஜனாதிபதி அவரை விடுதலை செய்யவில்லை. புத்தாண்டுக்கு விடுதலை செய்வதாக தெரிவித்தும் அது நடைபெறவில்லை. இவ்வாறான நிலையில் எமது நிலை என்ன என கேள்வி எழுப்பினார். (2.281)

## பகிரங்க ஏலவிற்பனை

(மன்னார்)

மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட சவல், கோடரி, மண்வெட்டி, லொறி வாகனம் (இரும்பு உபயோகத்திற்கு) என்பன பகிரங்க ஏல விற்பனையில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. குறித்த பகிரங்க ஏல விற்பனையில் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவை பணமாகவே செலுத்த வேண்டும் காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏலத்தில் பொருட்களை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய ஆள் அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும் என பதிவாளர் கேட்டுள்ளார். (2)

# விளம்பி வருட இராசி பலன்கள்

## 14.04.2018-13.04.2019



விளம்பி வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் லாப ஸ்தானத்தில் செவ்வாயோடு இணைந்து சஞ்சரிக்கிறார். தன லாபாதிபதியான குரு பகவான் வருடத் தொடக்கத்தில் வக்ரம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் புதன் - சந்திரன் சேர்க்கை பெற்றிருக்கிறார்கள். பஞ்சம அஷ்டமாதிபதி புதனுடன் 6இற்கு அதிபதியான சந்திரன் இருப்பதால் விபரீத இராஜயோக அடிப்படையில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படும். 12இல் கேதுவும், 6இல் ராகுவும் சஞ்சரிக்கிறார்கள். வெற்றிகள் ஸ்தானமான 3ஆம் இடத்தில் சூரிய-சுக்ர சேர்க்கை இருக்கிறது. இந்த ஆண்டு கிரக நிலைகளை உங்களின் சுய ஜாதகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து பலன் அறிந்து, அதற்கான பரிகாரங்களைச் செய்வது நன்மைகளை வழங்கும்.

சித்திரை மாதப்பிறப்பு சனிக்கிழமையில் நிகழ்கிறது. சனி உங்கள் இராசிநாதனாகவும் விரயாதிபதியாகவும் இருக்கிறார். அவரது ஆதிக்க நாளில் ஆண்டு பிறப்பது யோகம்தான். 'மந்தன் செய்வதைப் போல மகேஸ்வரன் கூடச் செய்ய மாட்டார்' என்பது பழமொழி. எனவே சனி பகவான் இந்தப் புத்தாண்டில் நல்ல பலன்களை அள்ளி வழங்குவார். 12இல் கேதுவும், 6இல் ராகுவும் இருப்பதால் அதற்குரிய பரிகாரங்களையும், குலதெய்வ வழிபாட்டையும், ஜென்ம நட்சத்திரம் அன்று அனுமன் வழிபாட்டையும் மேற்கொண்டால் நன்மைகள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

### குரு பார்வை பலன்!

ஆண்டின் தொடக்கத்தில் குரு பகவான் உங்கள் இராசிக்கு 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் ஒளிமயமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுப்பார். உறவினர்களும், நண்பர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவுவர். கடன் சுமை குறைய எதிர்காலத்தை இனிமையாக்கிக்கொள்ள நீங்கள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெறும். குரு உங்கள் இராசியைப் பார்ப்பதோடு 3,5 ஆகிய இடங்களையும் பார்த்து புனிதப்படுத்துகிறார்.

குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். இதுவரை உடல்நலம் குன்றிப் படுத்த படுக்கையில் இருந்தவர்கள் குணமாகி, பம்பரமாகச் சுழன்று பணிபுரிவார்கள். நினைத்ததைச் சாதிக்கும் நேரம் இது. குடும்ப ஒற்றுமை பலப்படும். விலகிய சொந்தங்கள் விரும்பி வந்து இணைவர். கலக்கங்கள் அகலும். கடமையில் கண்ணும், கருத்துமாக இருப்பீர்கள்.

3ஆம் இடத்து குரு பார்வையால், சகோதர ஒற்றுமை பலப்படும். வழக்குகள் சாதகமாக முடியும். மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர். எடுத்த முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். வீண் பழிகளும், அவப் பெயர்களும் விலகும். விரோதிகள் அடிபணிவர். உயர்பதவியில் உள்ள அதிகாரிகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். யோகங்கள் வந்து கொண்டேயிருக்கும்.

குருவின் பார்வை 5ஆம் இடத்தில் பதிவதால் பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பிள்ளைகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். வாரிசுகளின் முன்னேற்றம் வளர்ச்சிக்குரியதாக இருக்கும். தடைப்பட்ட காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். பணத் தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். கடல் தாண்டி வரும் செய்தி மகிழ்ச்சி தரும். இங்ஙனம் நற்பலன்களை வழங்கும் குருவை நாடிச் சென்று வழிபட்டு வருவது நல்லது. வியாழக்கிழமைகளில் விரதமிருந்து குருவை வழிபட்டால், வியக்கும் விதத்தில் வாழ்க்கை அமையும்.

## பண்பால் உயர்வு வரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

### செவ்வாய் - சனி சேர்க்கையும், பார்வையும்!

14.4.2018 முதல் 29.4.2018 வரை தனுசு இராசியில் சனி- செவ்வாய் சேர்க்கை ஏற்படுகிறது. 20.3.2019 முதல் 13.4.2019 வரை செவ்வாய் சனியைப் பார்க்கும் அமைப்பு உள்ளது. இக்காலம் உங்களுக்கு ஓர் இனிய காலமாகவே அமையும். சனி உங்கள் இராசிநாதன் என்பதால், கெடுதல் செய்ய மாட்டார். செவ்வாய் உங்கள் வெற்றிகளின் ஸ்தானாதிபதி. எனவே அவரும் உங்களுக்கு கெடுதல் செய்யமாட்டார். இரண்டு முரண்பாடான கிரகங்கள் இணைவதால் ஒரு சில சமயங்களில் விரயங்கள் ஏற்படலாம். குடும்பச் செலவுகளைக் கட்டுப்படுத்தி அவற்றை சுபவிரயமாக்கிக் கொள்ளலாம். கட்டடம் கட்டும் பணி, சுப நிகழ்ச்சி நடத்துவது, உபயோகமுள்ள பொருட்களை வாங்குவது என செலவுகளைச் செய்யலாம்.

### விருச்சிகத்தில் குரு!

விளம்பி வருடத்தின் புரட்டாசி மாதம் 18ஆம் திகதி (4.10.2018) வியாழக்கிழமை அன்று, குருபகவான் விருச்சிக இராசிக்கு பெயர்ச்சியாகிறார். வியாழனுக்குரிய நட்சத்திரமான விசாகம் 4ஆம் பாதத்தில் குரு விருச்சிகத்திற்கு வருகிறார். உங்கள் இராசிக்கு 10இல் வரும் குருவால் பதவிமாற்றம், ஊர்மாற்றம், உத்தியோக மாற்றம், வீடுமாற்றம், இடமாற்றம் வரலாம். வரும் மாற்றங்களில் ஏதாவது ஒரு மாற்றமாவது ஏற்றுக் கொள்ளும் விதத்தில் அமையும். இருப்பினும் குருவின் பார்வை பதியும் இடத்தைப் பொறுத்துப் பலன்களை அறிந்துகொள்ளலாம்.

10ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே அந்த இடங்கள் அனைத்தும் புனிதமடைகின்றன. வாக்கு, தனம், குடும்பம், தாய், வாகனம், வீடு, ஆரோக்கியம், உத்தியோகம், ஆவணம், எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றிற்குரிய ஆதிபத்யங்களைக் குறிக்கும் அந்த மூன்று இடங்களும் இனி முறையாக நற்பலன்களை வழங்கப் போகிறது.

இரண்டாம் இடத்தில் பதியும் குருவின் பார்வையால், இல்லத்தில் ஒற்றுமை பலப்படும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட எடுத்த முயற்சி வெற்றிபெறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய சந்தோசத் தகவல் வந்துசேரும்.

குருவின் பார்வை 4ஆம் இடத்தில் பதிவதால் அசையாச் சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங்களைக்கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும்யோகம்உருவாகும். தேகநலன் சீராகும். தெளிந்த சிந்தனையோடு செயற்படுவீர்கள். பணி சார்ந்த பயணமாக வெளிநாடு செல்லும் சூழ்நிலை உருவாகும். பிள்ளைகளின் கல்விக்காக எடுத்த முயற்சிகைகூடும்.




6ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் உடன் பணிபுரிபவர்களின் உபத்திரவங்கள் மாறும். உங்கள் திறமை பளிச்சிடும். மேலதிகாரிகள் நீங்கள் விரும்பிய சலுகைகளைச் செய்து கொடுப்பர். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வசதிகள் பெருகும். உத்தியோக மாற்றங்களுக்காக முயற்சி செய்தவர்களுக்கு நல்ல விதத்தில் முடியும். சம்பள உயர்வுடன் கூடிய தகவல் வந்து சேரும். எதிரிகள் விலகுவர். பஞ்சாயத்துகள் சாதகமாக முடியும்.

### ராகு-கேது பெயர்ச்சி!

13.2.2019இல் மிதுன இராசியில் ராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். ராகு-கேதுக்கள் சுய பலமற்ற கிரகங்கள் என்றாலும், இருக்கும் இடத்திற்கு ஏற்ப வலிமையோடு செயற்பட்டு வாழ்க்கைப் பாதையை மாற்றியமைக்கும் கிரகங்களாகும். அந்த அடிப்படையில் பஞ்சம ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது பல நல்ல வாய்ப்புகளை வழங்கப் போகிறது. புத்திர விருத்தி இல்லையே என்று ஏங்குபவர்கள், நாகசாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்றநாளில் அனுகூலமான ஸ்தலங்களில் செய்தால் பிள்ளைச் செல்வம் வீட்டில் துள்ளி விளையாடும்.

11இல் கேது இருப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். பாராட்டும், புகழும் கூடும். வெளிநாட்டு யோகம் வெற்றிகரமாக அமையும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். அரசு வழி ஒத்துழைப்பு உண்டு. பெரிய திட்டங்களைத் தீட்டி வெற்றி காண்பீர்கள்.

### வளர்ச்சிக்குரிய வழிபாடு!

சனிக்கிழமை தோறும் சனி பகவானை வழிபடுவதோடு, திருமாலுக்குரிய நாமங்களை எழுதி வருவது நல்லது. நாமக்கல் ஆஞ்சநேயரை வழிபட்டு நன்மைகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

### குரு மற்றும் சனி வக்ர காலங்கள்!

குருவின் வக்ர காலத்தில் பண நெருக்கடி அதிகரிக்கும். பற்றாக்குறை ஏற்படும். மனதில் நினைத்ததை செய்ய முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். உறவினர்கள் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. குடும்பப் பிரச்சினைகள் எது வந்தாலும் அதை விஸ்வரூபம் எடுக்கவிடாமல் பார்த்துக் கொள்வது, குடும்பத்தின் வளர்ச்சிக்கு வித்திடும்.

சனியின் வக்ரகாலத்தில் சஞ்சலங்கள் அதிகரிக்கும். தடுமாற்றங்கள் கூடும். பக்கபலமாக இருப்பவர்கள் பகையாக மாறலாம். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். பிறரை நம்பி எந்த காரியத்திலும் ஈடுபட வேண்டாம். வீண்பழிக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. வீடுமாற்றங்களும், இடமாற்றங்களும் திருப்தி தராது. குரு மற்றும் சனியின் வழிபாட்டை முறையாக மேற்கொள்ள வேண்டிய நேரமிது.

### மகர இராசியில் பிறந்த பெண்களுக்கு!

இந்த விளம்பி வருடத்தில் உங்களுக்கு வருமானம் திருப்திகரமாக அமையும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். இனத்தார் பகை மாறும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். தாய்வழி ஆதரவு திருப்திகரமாக இருக்கும். சனி-செவ்வாய் சேர்க்கை இருப்பதால் உங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயரதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். தடைப்பட்ட பதவி உயர்வுகள் வந்து சேரலாம். சம்பளப் பாக்கிகளும் கிடைக்கும். பௌர்ணமி தோறும் கிரிவலம் வருவதன் மூலம் வாழ்க்கையில் முன்னேற்றம் கூடும். பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும் பெருமை சேர்ப்பீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. வளர்ச்சிக்கு உறுதுணையாக அருகில் உள்ளவர்கள் உதவுவார்கள். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு சிலருக்கு சுயதொழில் செய்யும் யோகம் கிட்டும்.

(தொடரும்)

# அதிபரை மண்டியிட வைத்த ஊவா மாகாண முதலமைச்சருக்கு மீண்டும் கல்வியமைச்சுப் பதவி

(கொழும்பு)

ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு மாகாண கல்வி அமைச்சுப் பதவி மீண்டும் வழங்கப்பட்டமைக்கு கடுமையான எதிர்ப்பு தெரிவிப்பதாக ஊவா மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

பதுளை தமிழ் மகளிர் கல்லூரியின் அதிபருக்கு அவமரியாதை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஊவா மாகாண முதலமைச்சரிடம் இருந்து மாகாண கல்வி அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தொடர்பில் பல மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகள் தற்போதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் மாகாண கல்வி அமைச்சுப் பதவியை மீண்டும் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு வழங்கியமையானது மிகவும் பிரச்சினைக்குரிய விடயம் என்று ஜே.வி.பியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார். (இ-7)



## போர்த்தேங்காய் உடைத்தல் போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் பாரம்பரிய கலையான போர்த் தேங்காய் உடைத்தல் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மிருசுவில் ஒட்டுவெளி சிராவில் பிள்ளையார் ஆலய முன்றலில் இடம்பெறும். இப்போட்டியில் தனியாகவோ குழுக்களாகவோ பங்கு கொள்ள விரும்புவோர் 20.04.2018இற்கு முன்னர் செயலாளர் சிராவில் பிள்ளையார் பரிபாலன சபை ஒட்டுவெளி மிருசுவில் என்ற முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும். மேலதிக தகவல்களுக்கு 077 968 9119 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ)

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பதிப்புறை ஸ்ரீ சக்கராழ்வார் சுவாமி திருக்கோவில் சம்புரோஷண அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். 21ஆம் திகதி சனிக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்தல் இடம்பெறும். (இ)

# உளவளத்துணை டிப்ளோமாதாரிகளும் நியமனத்தில் உள்வாங்கப்பட வேண்டும்

## கல்வியமைச்சிடம் கோரிக்கை

(கொழும்பு)

உளவள ஆசிரியர்களுக்கான ஆட்சேர்ப்பில் பட்டதாரிகள் மாத்திரமன்றி உளவளத்துணை டிப்ளோமாதாரிகளும் உள்வாங்கப்பட வேண்டுமென இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளதாக சங்கத்தின் தலைவர் ஏ.பி கமர்டீன் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது,

உளவள ஆலோசனையாளர், உளவள ஆலோசனை உதவியாளர் என்ற உளவளத்துறை சார்ந்த பதவி நியமனங்களுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்படும்போது உளவளத்துணையில் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ள உளவளத்துணை டிப்ளோமாதாரிகளையும் உள்வாங்குவதற்கான நியமனங்களை முன்வைத்து பலமுறை எமது சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இருப்பினும், இக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

இலங்கையின் சனத்தொகையில் 2.3 வீதமானோர் உளப் பிரச்சினையுடன் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று நாட்டில் நிகழுகின்ற வன்செயல்கள், துஷ்பிரயோக நடவடிக்கைகள் மற்றும் தற்கொலைகள் போன்ற சமூக பிரச்சினைகளில் உளப் பாதிப்புக்களும் குறித்த வகிபங்கினை வகிக்கிறது.

மாணவர்களின் ஒழுக்க மற்ற நடத்தைகளிலும் உளப் பிரச்சினைகள் கணிசமான பங்கினை செலுத்துகின்றன. இவ்வாறான நிலையில் குறித்த நபர்களுக்கு தொழில் வாண்மை உளவளத்துணையாளர்களின் உதவி இன்றியமையாததாகவுள்ளது.

இவ்வாறு பல்வேறு மட்டங்களில் பல்வேறு தரப்பினருக்கு உளவள ஆலோசனை வழங்க வேண்டிய தேவை தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இவற்றைக் கருத்திற்கொண்டு சமூக சேவைகள் அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு, சுகாதார அமைச்சு என்பவற்றினால் பல்வேறு அரச நிறுவனங்களில் உளவள ஆலோசகர்களும் உளவள உதவியாளர்களும் என பல்வேறு நியமனங்கள் உளவளத்துறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், பாடசாலைகளில் உளவள ஆசிரியர்களை நியமிப்பதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை கல்வி அமைச்சு முன்னெடுக்கவுள்ளதாக அறிய முடிகிறது.

அதனால், அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் உளவளத்துணையில் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்து தொழில் வாய்ப்பின்றியுள்ள டிப்ளோமாதாரிகளின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, உளவள ஆலோசகர் மற்றும் உளவள உதவியாளர் நியமனங்களுக்காக பட்டதாரிகளை மாத்திரமின்றி டிப்ளோமாதாரிகளையும் இணைத்துக்கொள்ளுமாறு கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மேலும் சில அமைச்சர்கள் எதிரணியில் அமர்வார்கள்

## யாப்பா தகவல்



(கொழும்பு)

அமைச்சர் பதவிகளில் இருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 16 பேர் எதிர்க்கட்சி வரிசையில் அமரும் தினத்தில் தற்போது அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவி வகித்து வரும் மேலும் சிலர் எதிரணியில் அமர்வார்கள் என முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து விலகிய அனைவரும் கட்டாயம் எதிர்வரும் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் எதிரணியில் அமர்வோம். பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாத சிலரும் எம்முடன் இணைந்து கொள்வார்கள்.

ஜனாதிபதி நாடு திரும்பியதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூடி அரசாங்கத்தில் இருந்து விலக உத்தியோகபூர்வமான அனுமதியை வழங்கும் எனவும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார். (இ-7)

# 2020ஆம் ஆண்டுவரை ஐக்கிய தேசிய முன்னணி அரசு

## ஐ.தே.க. நம்பிக்கை

(கொழும்பு)

அரசியலமைப்பின் படி ஐக்கிய தேசிய முன்னணிக்கு 2020 ஆம் ஆண்டு வரையில் அரசாங்கத்தை கொண்டு செல்ல முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் அமைச்சர் வஜிர அபேவர்த்தன காலியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைக் கூறியுள்ளார்.

அரசியலமைப்பின் படி பாராளுமன்றத்தில் அதிக மான உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் கட்சி ஐக்கிய தேசிய முன்னணி ஆகும்.



என்னதான் இருந்தாலும், அரசாங்கத்தை அமைக்கும் அதிகாரம் ஐக்கிய தேசிய முன்னணியிடமே உள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்லும் முழுமையான சக்தி இக்கட்சியிடம் உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள சம்பந்தன் தயார்

(கொழும்பு)

எதிர்க் கட்சி தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வரப்போவதாக அறிவித்துள்ள நிலையில், இரா. சம்பந்தன் கூட்டு எதிர்க்கட்சிக்கு சவால் விடுத்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி கொண்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள தாம் தயாராக இருப்பதாக இரா. சம்பந்தன் சவால் விடுத்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர் இதனைத் தெரிவித்தார்.



"நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கின்றது. சாதாரணமாக எதிர்க்கட்சி தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுவதில்லை.

அவ்வாறு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தால் அதற்கு முகம்கொடுக்கத் தயார்" என இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கைக்கு சந்தர்ப்பம்

(கொழும்பு)

காசநோயை கட்டுப்படுத்துவதன் ஊடாக தென்ஆசிய நாடுகளில் சுகாதார நிலையில் இலங்கை இரண்டாவது இடத்தை பிடிக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய காசநோய் கட்டுப்பாட்டு மற்றும் சுவாசநோய் பற்றிய அமைப்பின் கொழும்பு மாவட்ட அதிகாரி லக்மால் ரத்நாயக்க இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

2035ஆம் ஆண்டாகும் போது காசநோயை முழுமையாக இலங்கையில் இருந்து கட்டுப்படுத்துவதே தமது அமைப்பின் நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், கடந்த சில வருடங்களில் காசநோயாளர்களின் பதிவு குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாரதம்

## ஜெயலலிதா மரண விவகாரம்
# அப்பலோவில் அம்மாவை நான் பார்க்கவில்லை - ஓ.பி.எஸ்.



(சென்னை)

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோது ஜெயலலிதாவை நான் பார்க்கவே இல்லை என்று துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் ஏற்கனவே சொன்ன கருத்தை மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஜெயலலிதா அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சையில்இருந்த போது அவரை யார் யாரெல்லாம் பார்த்தார்கள் என்பது இன்னும் சர்ச்சையாகவே உள்ளது.

முன்னாள் தலைமைச் செயலாளர் இராம்மோகன ராவ் விசாரணை ஆணையத்தில் கூறும்போது, 'அப்பலோ வைத்தியசாலையில் ஜெயலலிதா உடல்நிலை தேறி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய போது ஓ.பன்னீர் செல்வம் உடன் இருந்தார்' என்று கூறியுள்ளார்.

ஆனால் ஓ.பன்னீர் செல்வம், ஜெயலலிதாவை நான் வைத்தியசாலையில் ஒரு நாள் கூட பார்க்கவில்லை என்று திரும்பத் திரும்ப கூறி வருகிறார்.

அந்த கால கட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்த பிறகு ஜெயலலிதா சமாதிக்கு சென்று தியானம் செய்தார்.

அப்போது நிருபர்களிடம் அவர் கூறும்போது, ஜெயலலிதாவை நான் ஒரு முறை கூட பார்க்கவில்லை. எனது மனைவி கூட அம்மாவை பார்த்தீர்களா? என்று தினமும் கேட்பார். எனக்கு பொய் சொல்ல மனம் வராது என்பதால் ஜெயலலிதாவை பார்க்கவில்லை என்று தெரிவித்தேன் என்றார்.

இப்போது நீதிபதி ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தில் வாக்குமூலம் அளித்தவர்களிடம் சசிகலா தரப்பு சட்டத்தரணி ராஜா செந்தூர் பாண்டியன் குறுக்கு விசாரணை நடத்தி வருகிறார்.

இதில் நேற்று இளவரசி மகள் கிருஷ்ணப்பிரியா, மகன் விவேக், அரசு வைத்தியர்கள் சுதா சேஷையன், சுவாமிநாதன், ஜெயலலிதாவின் செயலாளர் வெங்கட ரமணன், போயஸ்கார்டனில் உள்ள சமையல்காரர் ராஜம்மாள் ஆகியோர் நீதிபதி ஆறுமுகசாமி முன்னிலையில் ஆஜரானார்கள். இவர்களிடமும் சசிகலா சட்டத்தரணி ராஜா செந்தூர் பாண்டியன் குறுக்கு விசாரணை நடத்தினார்.

இந்த நிலையில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது ஜெயலலிதா பற்றி ஏற்கனவே சொன்ன கருத்தை மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளார்.

அப்பலோ வைத்தியசாலையில் ஜெயலலிதா அனுமதிக்கப்பட்ட நாள் முதல் அவர் உயிரோடு இருந்தவரை நான் பார்க்கவே இல்லை என்று கூறியிருக்கிறார். (7)

# கர்நாடக காங்கிரஸ் எம்.எல்.ஏ. வீட்டில் சோதனை நடவடிக்கை
## வருமான வரித்துறையினர் அதிரடி

(பெங்களூர்)


கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் எம்.எல்.ஏ. வீட்டில் நேற்று வருமான வரித்துறையினர் நடத்திய சோதனையில் அரசியல் நோக்கம் உள்ளதாக சித்தராமையா குற்றம்சாட்டியுள்ளார்.

கர்நாடக மாநில சட்டசபையில் உள்ள 242 தொகுதிகளில் மே மாதம் 12 ஆம் திகதி தேர்தல் நடக்கவுள்ளது.

ஆளும் காங்கிரஸ் கட்சி ஆட்சியை தக்கவைத்துக் கொள்ளவும், பா.ஜ.க ஆட்சியை பிடிக்கவும் கடும் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. பா.ஜ.க. இரு கட்டங்களாக 154 வேட்பாளர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. நேற்று முன்தினம் மாலை 218 பெயர்கள் கொண்ட வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் கட்சியும் வெளியிட்டது.

இந்த பட்டியலில் தற்போது அனேகல் தொகுதி எம்.எல். ஏவாக இருக்கும் சிவண்ணா என்பவரின் பெயரும் இடம் பெற்றுள்ளது.

இதற்கிடையில், நேற்று அதிகாலை எம்எல்ஏ. சிவண்ணாவின் வீட்டிற்கு சென்ற வருமான வரித்துறையினர் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.



அருகாமையில் உள்ள இரு வீடுகளிலும் சோதனை நடத்திய அதிகாரிகள் அவரது வரவு-செலவு கணக்குகள் தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்தனர்.

இந் நிலையில், மைசூர் மாவட்டத்தில் தேர்தல் பிரசாரம் செய்துவரும் கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா இந்த சோதனைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

விரைவில் தேர்தல் நடைபெறவுள்ள வேளையில் காங்கிரஸ் கட்சிக்கு அவப் பெயரை உண்டாக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (7)

# சிரியா மீது விமானத் தாக்குதல்களை நடத்தும் பிரிட்டனின் தீர்மானத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

சிரியா மீது விமான தாக்குதல்களை முன்னெடுக்கும் பிரித்தானியாவின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, நூற்றுக்கணக்கான போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விமான தாக்குதல் குறித்து நாடாளுமன்றம் அவசரமாகக் கூட்டப்பட்டு விவாதிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறைந்தபட்சம் நாடாளுமன்றத்தில் விவாதிக்காது பிரித்தானியாவால் எவ்வித தாக்குதல்களையும் முன்னெடுக்க முடியாது என போர்நிறுத்த கூட்டணி உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்ட இதேவேளை, ஒரு நாடு தாக்கப்படாத வரை அவர்கள் மற்றொரு சர்வதேச நாட்டின் மீது தாக்குதல் நடத்துவதற்கான உரிமை இல்லை என ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் குறிப்பிட்டார். (7)

# ஈரானில் பேருந்து வி
# இந்திய சிறுமி பலி; 19 பேர்

(டில்லி)

ஈரான் நாட்டில் புனித யாத்திரை மேற்கொண்ட இந்தியர்கள் சென்ற பேருந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 14 வயது சிறுமி உயிரிழந்ததாக மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியா, ஈராக், ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் இஸ்லாமியர்களின் யாத்திரைத் தலமாக போற்றப்படும் பல்வேறு நினைவு சின்னங்கள் அமைந்துள்ளன. அவற்றை தரிசிப்பதற்காக இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து யாத்திரிகர்கள் சென்று வருகின்றனர்.

அவ்வகையில், ஈரான் நாட்டில் புனித யாத்திரை மேற்கொண்ட இந்தியர்கள் சென்ற பேருந்து நேற்று முன்தினம் இரவு விபத்துக்குள்ளான சம்பவத்தில் 14 வயது சிறுமி உயிரிழந்ததாகவும், 19 பேர் காயமடைந்ததாகவும் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நேற்று தெரிவித்துள்ளார்.

ஈரான் நாட்டின் தலைநகரான டெஹ்ரானில் இருந்து தென்மேற்கே சுமார் 125 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கோம் நகரில் இஸ்லாமியர்களில் ஷியா பிரிவினரால் எட்டாவது இமாமாக போற்றி கொண்டாடப்படும் இமாம் அலி இப்ன் முஸாரிடா என்பவரது சகோதரியின் நினைவிடம் அமைந்துள்ளது.

இந்த நினைவிடத்தை தரிசிக்க இந்தியாவில் இருந்து சென்ற 20 பேரை கொண்ட குழுவினர் சென்ற ஒரு பேருந்து நேற்று முன்தினம் இரவு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் குல்சும் பாத்திமா என்னும் 14 வயது சிறுமியை நாம் இழந்து விட்டோம் என்பது ஈரானில் உள்ள இந்திய தூதரகம் வாயிலாக

## சுஷ்மா தகவல்



# ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து வி
# 40 எம்.எல்.ஏக்களும் இராஜி

## ஜெகன் மோகன் ரெட்

(ஐதராபாத்)

ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து விவகாரத்தில் வை. எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் 40 எம்.எல்.ஏக்களையும்இராஜினாமா செய்யவைக்க ஜெகன்மோகன் ரெட்டி ஆலோசித்து வருகிறார்.

ஆந்திராவில் இருந்து தெலுங்கானா மாநிலம் பிரிக்கப்பட்டதால்வருவாய் இழப்பை ஈடு செய்ய, ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டது.

சிறப்பு அந்தஸ்து வழங்க, முதலில் சம்மதித்த மத்திய அரசு, பிறகு அதற்கு மறுத்து விட்டது.

சுமார் 30 தடவை முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு டில்லி சென்று பேசியும் சிறப்பு அந்தஸ்து வழங்க மத்திய அரசு மறுத்தது. இதனால் கடும் அதிருப்தியடைந்த சந்திரபாபு நாயுடு, பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகினார்.

அடுத்த ஆண்டு (2019) ஆந்திர சட்டசபைக்கு தேர்தல் வரவுள்ள நிலையில் மத்திய அரசை எதிர்த்து அவர் போராட்டங்களை தீவிரப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் ஆந்திராவில் சந்திரபாபு நாயுடுவின்



தெலுங்கு தேசம் கட்சிக்கு கடும் போட்டியாளராகத் திகழும் வை.எஸ்.ஆர். காங்கிரஸ்தலைவர் ஜெகன் மோகன் ரெட்டியும் சிறப்பு அந்தஸ்து கோரி பல்வேறு போராட்டங்கள் நடத்திவருகிறார்.

மத்திய அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக அவர் சமீபத்தில் தனது 9 எம்.பிக்களையும் இராஜினாமா செய்ய வைத்தார். இதைத் தொடர்ந்து தற்போது அவர் சிறப்பு அந்தஸ்தை வலியுறுத்தி பாத யாத்திரையை மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் சிறப்பு அந்தஸ்து விவகாரத்தில் மக்கள் ஆதரவைப் பெற மேலும் அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட ஜெகன்மோகன் ரெட்டி திட்டமிட்டுள்ளார்.

அதன் ஒரு பகுதியாக வை.எஸ். ஆர். காங்கிரஸ் கட்சியின் 40 எம்.எல்.

# அமெரிக்க சிை
# கைதிகள் ஏழு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் தெற்கு கரோலினாவில் உள்ள சிறையில் கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட கலவரத்தில் 7 கைதிகள் கொல்லப்பட்டனர். இதில் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவில் தெற்கு கரோலினாவில் லீசி என்ற இடத்தில் சிறைச்சாலை உள்ளது. அங்கு ஏராளமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இதனால் அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சிறையில் உள்ள



கைதிகள் 2 பிரிவுகளாகி ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டனர். இதனால் அங்கு கலவரம் ஏற்பட்டது. அப்போது சிறையில் குறைந்த அளவே காவலர்கள் இருந்தனர்.

அவர்கள் கலவரத்தை அடக்க தீவிர முயற்சி மேற்கொண்டனர். இருந்தும்

# வெளிநாடு



## விபத்து
## பர் காயம்



தெரிய வந்துள்ளது.

இதில் காயமடைந்த 19 பேரில் 18 பேர் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. ஒருவர் மட்டும் தீவிர சிகிச்சை பகுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு தேவையான உதவிகளை செய்ய இந்திய தூதரக அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (7)

## து விவகாரம்
## ராஜினாமா
## ரட்டி திட்டம்

ஏக்களையும் இராஜினாமா செய்ய வைக்க ஆலோசித்து வருகிறார்.

பொதுத் தேர்தல் நடத்த ஓராண்டுக்கு குறைவான கால அவகாசம் இருந்தால் தேர்தல் ஆணையம் இடைத் தேர்தலை நடத்தாது. இந்த விதியை தங்களுக்கு சாதகமாக்கி கொள்ள ஜெகன்மோகன் ரெட்டி திட்டமிட்டுள்ளார்.

அதன்படி அடுத்த மாதம் இறுதியில் அல்லது ஜூன் மாதம் தனது கட்சி எம்.எல்.ஏக்கள் 40 பேரையும் ராஜினாமா செய்ய வைக்கவுள்ளார். இதன் மூலம் ஆந்திர மக்களின் மனதில் இடம் பிடிக்க முடியும் என்று எதிர்பார்க்கிறார்.

மேலும் சிறப்பு அந்தஸ்து கோரி மேற்கொண்டுள்ள பாதயாத்திரையை மேலும் சில மாதங்களுக்கு நீட்டிக்கவும் திட்டமிட்டுள்ளார். ஜெகன் மோகன் ரெட்டியின் இந்த அதிரடிகள் சந்திரபாபு நாயுடுவுக்கு சவாலாக மாறியுள்ளது. (7)

## தான்சானியாவில் கடும் மழை வெள்ளத்தில் சிக்கி 9 பேர் பலி



(டார் ஏஸ் சலாம்)

தான்சானியா நாட்டின் டார் ஏஸ் சலாம் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 9 பேர் பலியாகியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தான்சானியா நாட்டின் தலைநகரமான டார் ஏஸ் சலாம் பகுதியில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அந்த நகரில் உள்ள வீடுகளிலும், வீதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இந்த வெள்ளத்தில் சிக்கி இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பாக மீட்புப்படை அதிகாரிகள் கூறுகையில், கடந்த மூன்று நாட்களாக பெய்த கனமழையில் நகரில் உள்ள பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. இந்த வெள்ளத்தில் சிக்கி இதுவரை 9 பேர் பலியாகினர். மேலும் பலர் வீடுகளின் மேற்கூரையில் தங்கியுள்ளனர்.

நகரில் உள்ள முக்கிய வீதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் பேருந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டு உள்ளது. மேலும் மழை தொடரும் என்பதால் பொது மக்கள் பத்திரமாக மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளனர்.

மே மாதம் வரை டார் ஏஸ் சலாம் பகுதியில் பலத்த மழை பெய்யும் என அந்நாட்டு வானிலை மையம் ஏற்கனவே தகவல் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. (7)

## இரசாயன ஆயுத தாக்குதல் குறித்து சர்வதேச நீதி விசாரணை வேண்டும்

### அரபு நாடுகள் அமைப்பு வலியுறுத்து



(கெய்ரோ)

சிரியா நாட்டு மக்கள் மீது இரசாயன ஆயுத தாக்குதல் நடத்தப்பட்டது தொடர்பாக சர்வதேச அளவிலான சுதந்திரமான நீதி விசாரணை தேவை என சவுதி அரேபியா தலைமையிலான அரபு நாடுகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.


சிரியாவில் இராணுவத்துக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 7 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு போர் நடந்து வருகிறது. ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் இராணுவத்துக்கு ஆதரவாக ரஷ்யாவும், ஈரானும் கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றன. மேலும் சிரியாவின் ஒரு பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். பயங்கரவாதிகளை குறி வைத்து அமெரிக்க கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள டூமா நகரில் கடந்த வாரம் இரசாயன ஆயுத தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஏராளமான குழந்தைகள் உட்பட 70இற்கும் மேற்பட்டோர் பரிதாபமாக பலியாகினர். இதற்கு சவுதி அரேபியா தலைமையிலான அரபு நாடுகள் அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதுபற்றி அரபு நாடுகள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில், 'சிரியா நாட்டு மக்கள் மீது இரசாயன ஆயுத தாக்குதல் நடத்தப்பட்டதை வன்மையாக கண்டிக்கிறோம். இது தொடர்பாக சர்வதேச அளவிலான சுதந்திரமான நீதி விசாரணை தேவை. இந்த தாக்குதலுக்கு காரணமானவர்கள் கண்டறியப்பட்டு அவர்கள் மீது சர்வதேச சட்ட விதிமுறைகளின்படி கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். மற்ற நாடுகளின் விவகாரங்களில் ஈரான் தலையிடுவதையும் கண்டிக்கிறோம். இரசாயன ஆயுத தாக்குதல் நடத்தப்பட்டதற்கு பதிலடியாக அமெரிக்க கூட்டுப் படைகள் நடத்திய தாக்குதலை ஆதரிக்கிறோம்' என்றும் கூறப்பட்டு உள்ளது. (7)

# ஜனாதிபதியாகப் பதவி வகிக்க தகுதியற்றவர் டொனால்ட் ட்ரம்ப்

## ஜேம்ஸ் காமே குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகிக்க டொனால்ட் ட்ரம்ப் தகுதி இல்லாதவர் என அவரால் பணி நீக்கம் செய்யப்பட்ட உளவுத்துறை இயக்குநர் குற்றம்சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் தேசிய உளவுத்துறை (எப்.பி.ஐ.) இயக்குநராக பணியாற்றியவர் ஜேம்ஸ் காமே. அமெரிக்க முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் அலுவலக இரகசியம் தொடர்பான முக்கிய கடிதங்களை அதிகாரபூர்வ அலுவலக மின்னஞ்சல் மூலம் கையாளாமல் தனது தனிப்பட்ட ஈமெயில் முகவரி வாயிலாக பரிமாறி வந்ததாக முன்னர் குற்றச்சாட்டு எழுந்தது.

இதனால் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப்பை எதிர்த்து போட்டியிட்ட ஹிலாரி மிக குறுகிய வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவ நேர்ந்தது. இந்த குற்றச்சாட்டு தொடர்பாக அமெரிக்காவின் தேசிய உளவுத்துறை விசாரிக்க தவறிவிட்டதாக தேர்தல் பிரசாரத்தின் போது ட்ரம்ப் கூறிவந்த நிலையில் தேர்தலுக்கு 11 நாள் முன்னதாக இதுதொடர்பான விசாரணைக்கு ஜேம்ஸ் காமே உத்தரவிட்டார்.

பின்னர், தேர்தலில் வெற்றிபெற்ற டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்றதும் கடந்த 2017 ஆம் ஆண்டு மே மாதம் ஜேம்ஸ் காமேவை எப்.பி.ஐ. இயக்குநர் பதவியில் இருந்து பணிநீக்கம் செய்து உத்தரவிட்டார்.

இதற்கிடையில், ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு அண்மையில் முழு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. அந்த பரிசோதனைகளின் முடிவில் அவர் நல்ல ஆரோக்கியத்துடனும், உளவியல் ரீதியாக தெளிவான மனநிலையில் இருப்பதாகவும் அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஹிலாரி கிளிண்டனின் ஈமெயில் பரிமாற்றம் தொடர்பான விசாரணை மிக மோசமான முறையில் நடைபெற்றதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை குற்றம்சாட்டியிருந்த ட்ரம்ப், தனது டுவிட்டர் பக்கத்தில் முன்னாள் எப்.பி.ஐ. இயக்குநர் ஜேம்ஸ் காமேவை வசைமாரி பொழிந்திருந்தார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகிக்க டொனால்ட் ட்ரம்ப் தகுதி இல்லாதவர் என அவரால் பணி நீக்கம் செய்யப்பட்ட உளவுத்துறை இயக்குநர் ஜேம்ஸ் காமே குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக, அமெரிக்காவின் பிரபல ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்த ஜேம்ஸ் காமே, 'ட்ரம்ப் மருத்துவ ரீதியாக இந்நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் தகுதி உடையவர் தானா? அல்லது, அவர் ஞாபகமறதி நோயின் ஆரம்பக்கட்டத்தில் இருக்கிறாரா?' என்னும் சர்ச்சைக்குள் போக நான் விரும்பவில்லை.

அவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவி வகிக்க மருத்துவ ரீதியாக தகுதியற்றவர் என நான் கருதவில்லை.

ஆனால், தார்மீக ரீதியாக நமது நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிக்க அவருக்கு தகுதி இல்லை.

நமது நாட்டின் மரியாதை மற்றும் அடிப்படை சித்தாந்தங்களுக்கு ஜனாதிபதி மதிப்பளிக்க வேண்டும். மிக முக்கியமாக உண்மையானவராக இருக்க வேண்டும். ட்ரம்ப்பால் இதை எல்லாம் கடைப்பிடிக்க இயலாது' என குறிப்பிட்டுள்ளார். (7)

## சிறையில் கலவரம்
## ழ பேர் படுகொலை



கலவரத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. கைதிகள் ஏற்கனவே தாங்கள் மறைத்து வைத்திருந்த கத்தியால் சரமாரியாகக் குத்தி தாக்குதல் நடத்தினர்.

இக்கலவரத்தில் சிறைக் கைதிகள் 7 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர். அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கலவரத்திற்கான காரணம் தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடத்தப்படுகிறது.

அமெரிக்க சிறைகளில் கைதிகளுக்கு இடையே இத்தகைய கொடூரமான வன்முறை தாக்குதல்கள் நடைபெறுவதில்லை. எனவே இக் கலவரம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (7)

# பாராளுமன்றம் மே 8வரை ஒத்திவைப்பு

# ஜனாதிபதியின் தன்னிச்சையான செயற்பாட்டின் உச்சக்கட்டமே

# ஜே.வி.பி.எம்.பிக்கள் விசனம்

(கொழும்பு)

பாராளுமன்ற கூட்டத்தொடர் மே மாதம் 8 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை ஜனாதிபதியின் தன்னிச்சையான செயற்பாட்டின் உச்சக்கட்டமாகவே காணப்படுகின்றது. ஜனாதிபதி தனது சிறப்பு அரசியல் அதிகாரங்களைக் கொண்டு பாராளுமன்றத்தை ஒத்தி வைத்தாலும் அதற்கான சரியான காரணங்களை குறிப்பிடுவதும் அவரது பொறுப்பாகும் என்று ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் விஜித ஹேரத் ஆகியோர் தெரிவித்தனர்.



நாளை 19 ஆம் திகதி இடம்பெறவிருந்த பாராளுமன்ற கூட்டத்தொடர் எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

சுனில் ஹந்துன்நெத்தி மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதியின் விசேட அதிகாரங்களை பயன்படுத்தி பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரை ஒத்திவைக்கும் போது அதற்கான காரணத்தினையும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்பதும் அவரது பொறுப்பாகவே காணப்படுகின்றது.

ஆனால் ஜனாதிபதி தனது விருப்பத்தின் பேரில் செயற்பட்டுள்ளதுடன், அவரது சார்பில் செயற்படும் நிர்வாகிகளும் தான்தோன்றித்தனமாகவே செயற்படுகின்றனர்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றிருந்தாலும் தேசிய அரசாங்கம் பாரிய விளைவுகளை எதிர்கொண்டுள்ளது. தேசிய அரசாங்கத்தில் இருந்து 16 உறுப்பினர்கள் வெளியேறியுள்ளமை கட்சிகளின் பலவீனத்தன்மையினை வெளிப்படுத்துகின்றது.

தேசிய அரசாங்கம் பாரிய நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ள வேளையில் ஜனாதிபதி பாராளுமன்றத்தினை ஒத்திவைத்துள்ளமை அரசியல் கட்சிகளின் மத்தியில் பல்வேறுபட்ட மாறுபட்ட கருத்துக்களை தோற்றுவித்துள்ளது.

ஜனாதிபதி தனது விசேட அதிகாரங்களை பயன்படுத்தும்போது அதற்கான காரணங்களை குறிப்பிடுவதும் அவரது பொறுப்பாக காணப்படுகின்றது. தமது கட்சியில் காணப்படும் குறைபாடுகளை சீர்செய்வதற்கான கால அவகாசத்தினை ஏற்படுத்தவே பாராளுமன்றத்தினை ஒத்தி வைத்துள்ளார் என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.

தேசிய அரசாங்கத்தை விட்டு வெளியேறிய 16 உறுப்பினர்களின் அரசியல் இருப்பு நிலை வியாழக்கிழமை வெளிப்படவிருந்தது. அவர்கள் கூட்டு எதிரணியினருடன் ஒன்றிணைந்து எதிர்க்கட்சியாக செயற்படுவார்களா, அல்லது தனித்து செயற்படுவார்களா என்பதும் ஜனாதிபதியின் விசேட அதிகாரத்தின் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை தீர்த்துக்கொள்ளும் நோக்கத்திலே ஜனாதிபதி பாராளுமன்ற அமர்வை பிற்படுத்தினார்.


ஜனாதிபதியின் நடவடிக்கையானது வன்மையாக கண்டிக்கத்தக்கதுடன் பிழையான முன்னுதாரணமாகும். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பம் காரணமாக கூட்டு அரசாங்கம் தொடர்ந்து செல்ல முடியாது.

அவர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையின் பிரதி பலனாகவே பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையும் கொண்டுவரப்பட்டது. தற்போது பாராளுமன்ற அமர்வும் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

சித்திரை புத்தாண்டுக்குப் பின்னர் பாராளுமன்றம் எதிர்வரும் 19ஆம் திகதி மீண்டும் கூடும் என்றே பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தி மே மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார் என் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு பல்கலைக் குழு இலங்கையில்



(கொழும்பு)

பாகிஸ்தான் தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் 21 பேர் அடங்கிய குழுவொன்று, மேஜர் ஜெனரல் பியாஸ் உசைன் ஷா தலைமையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் வெளிநாட்டு சுற்றுலாவின் ஒரு பகுதியாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இவர்கள், நாளை 19ஆம் திகதிவரை இங்கு தங்கியிருப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பல்கலைக்கழகத்தில் தேசிய பாதுகாப்பு மற்றும் யுத்தம் தொடர்பில் பயிலும், பாகிஸ்தான் பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகள், சவுதி அரேபியா மற்றும் சீனாவைச் சேர்ந்த சிவில் சேவை அதிகாரிகள் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழு இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்திற்கு விஜயம் மேற்கொண்டதாக தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை-பாகிஸ்தானுக்கு இடையிலான இருநாட்டு உறவுகள் குறித்து, குறித்த குழுவிற்கு, இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் டாக்டர் சாஹிட் அஹமட் ஹஸ்மட்டியால் விளக்கமளிக்கப்பட்டதோடு, இந்த குழு இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் பாதுகாப்புத்துறையின் முக்கிய அதிகாரிகளை சந்திக்கும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பதில் சொல்ல வேண்டிய கடமை!

நம் பாதுகாப்பிலும்பராமரிப்பிலும் நிர்வாகத்திலும் கண்காணிப்பிலும் இருக்கும் எல்லா விடயங்களிலும் நமக்கு முழுப்பொறுப்போ அல்லது ஓரளவேனும் பொறுப்போ உண்டு. இதைத் தவிர்ப்பதோ இதிலிருந்து தப்பிப்பதோ கடினம்.

ஆனால் "இவற்றில் உள்ள அதிகாரத்திற்கும் சௌகரியங்களை அனுபவிப்பதற்கும் எனக்குச் சம்பந்தம் உண்டே தவிர நடக்கும் எந்தத் தவறுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை" என்கிற மனநிலைதான் பலருக்கும் இருக்கிறது.

ஒரு பள்ளியில் ஒரு மாணவன் இறந்து விடுகிறான், ஒரு காரில் ஒரு பொருள் காணாமல் போய்விடுகிறது, ஒரு வீட்டில் ஒரு பொருளைத் தேடோ தேடு என்று தேடுகிறார்கள்.

பாடசாலை அதிபரும், அந்த வாகன ஓட்டுநரும், அந்தக் குடும்பத்தலைவியும் எனக்கும் அதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டுவிட முடியாது. நானா கொன்றேன்? நானா திருடினேன்? நான் ஏன் தேடித் தரவேண்டும்? என்றெல்லாம் கேள்வி கேட்டு இவர்கள் தப்பிவிட முடியாது.

ஒரு சிறைக் கைதி தப்பியதற்காகப் பல அதிகாரிகள் தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்படுகிறார்கள். நாங்களா தப்பிக்க வைத்தோம்? என்று அதிகாரிகள் கேள்வி கேட்டு எப்படி இவர்கள் தப்பிக்க முடியாதோ அப்படித்தான் இதுவும்.

எந்த ஒரு பொறுப்பும் நன்மை, தீமைகளை உள்ளடக்கியதாகத்தான் இருக்கும். ஒரு குதிரைக்குக் கொள்ளு மட்டும் தேவை; கடிவாளம் வேண்டாம் என்றால் அதை ஏற்க முடியாது.

நம் எல்லைக்கு உட்பட்ட ஒரு விடயத்தில் நடந்த தவறில் நாம் நேரடியாகச் சம்பந்தப்படாவிட்டாலும் மறைமுகமாகவோ நம்மையும் அறியாமலோ சம்பந்தப்படிருப்போம்.

ஒரு விடயத்தில் குற்றச்சாட்டுக்கு ஆளாவோம் என்று தெரிந்தால் உடனே நம் ஆழ்மனதில் புதைந்து கிடைக்கும் சுயநலம் நம்மை எப்படித் தப்பிக்க வைக்கலாம் என்றுதான் முதலில் யோசிக்கிறது. ஆனால் இந்த நினைப்புத்தான் நம்மை எக்கச்சமாக மாட்ட வைக்கப்போகிறது என்பது அப்போது அதற்குத் தெரிவது இல்லை.

தற்காப்பு, சுயநலம் இவற்றை முன்னிலைப்படுத்திக் கொண்டு பதில் சொல்ல வேண்டிய சந்தர்ப்பங்களைத் தட்டிக் கழித்து வெற்றியடைந்துவிட்டாலோ, அல்லது சாதுரியமாகப் பேசித் தப்பிவிட்டாலோ அதற்காக நாம் பின்னால் மார்த்தட்டிக் கொள்ளும்படி இராது. மாறாக நாம் என்ன தவறு வேண்டுமானாலும் செய்துவிட்டு தப்பிவிட முடியும் என்கிற நம்பிக்கை ஏற்பட்டுவிடும். இது மிக ஆபத்தானது.

மாறாக நடந்த தவறுக்கு நானும் ஒரு காரணம் என்று வலிய முன்வந்து பெருந்தன்மை காட்டினால் நம்மை அந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றச் சம்பந்தப்பட்டவர்களே முன்வருவார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

சேவல் கூவும், பேடு : ..............................................................

05. கீழே தரப்பட்ட வெற்றிடத்தில் பொருத்தமான சொல்லை எழுதி, பழமொழியை பூரணப்படுத்துக.

........................................................ நெஞ்சு குறுகுறுக்கும்

06. கீழேதரப்பட்ட சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன : ..............................

07. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. பிரச்சினைகள் வரும்வேளை அவற்றிற்குத் தைரியமாக முகங் கொடுத்தல் வேண்டும். தடித்த எழுத்தில் உள்ள மரபுத்தொடரின் கருத்து ........................ (சண்டையிடல் / எதிர்கொள்ளல்) என்ப தாகும்.

2. மகனின் சாதனையைக் கேள்வியுற்ற தாய் உச்சிகுளிர்ந்தாள். உச்சி குளிர்ந்தாள் என்பதன் பொருள் ........................ (பாராட்டினான் / மிக மகிழ்ந்தாள்) என்பதாகும்.

3. புறாக்கள் பறந்தன. இங்கு பறந்தன என்பது ........................ (இறந்தகால ஒருமை / இறந்தகாலப் பன்மை) வினைமுற்று ஆகும்.

08. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

கந்தையானாலும் சகக்கியுடு - என்னும்
கற்பனை போற்றி நடப்பாய், அம்மா!
..................................................................................
சுத்தத்தின் நன்மை சிறிதோ? அம்மா?

09. கீழேதரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

கல்லைச் சிற்பி கண்டனன்
கண்ணைக் கவரும் சிற்பமாய்க்
கல்லை மாற்றி அமைத்தனன்
கண்ட மக்கள் போற்றினர்

சிற்பியை மக்கள் ஏன் போற்றினர்? : ......................................

10. பின்வரும் வாக்கியத்தின் செயற்படுபொருளை எழுதுக?

நீதிபதி குற்றவாளியைத் தண்டித்தார் : ......................................

11. 1. கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக?

**Airport :** ......................................

2. கீழே தரப்பட்டுள்ள படத்துக்குப் பொருத்தமான ஆங்கில பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக?



: ........................................

12. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோட்டிடுக.

1. What .............................. (is / are) they?
2. I ...................................... (want / wants) to play

13. பின்வரும் வாக்கியம் ஆங்கிலத்தில் சொல்லப்படும் விதத்தில் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

இது உங்களுடையதா? ..............................................

14. பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

வந்துரா : ....................................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

நான் குளிக்கட்டுமா : ..................................................


16. மாலை நேரம் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியது. மனங்கவரும் பல காட்சி களை அந்நேரத்தில் காணமுடியும். "அழகான மாலை நேரம்" என்ற தலைப் பில் மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற் களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

- ........................................................................
  ........................................................................
- ........................................................................
  ........................................................................
- ........................................................................
  ........................................................................

- *தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடையை எழுதுக.*

17. பின்வரும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.


**5710, 7010, 1075, 7510** : ..........................................

18. 


அடைப்பினுள் உள்ள குற்றுக்களின் எண்ணிக் கையை உரோமன் எண்ணில் எழுதுக.

: ..........................................

19. 2003 என்னும் எண்ணை எண் சட்டத்தில் குறித்துக்காட்டுக.




20. **00 : 15** இங்கு காட்டப்பட்டுள்ள நேரத்தைச் சாதாரண கடிகார நேரமாகத் தருக.

21. 

இவ்வுரு எட்டு சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அதில் ஒரு பகுதி நிழற்றப்பட்டுள்ளது.

அதில் 3/4 ஐ நிழற்ற வேண்டு மெனின், உருவிலுள்ள இன் னும் எத்தனை பகுதிகள் நிழற்றப்பட வேண்டும்?

: ..........................................

22. 723 புத்தகங்களை 7 பேர்களிடையே சமமாகப் பங்கிடும் போது எஞ்சும் புத்தகங்கள் எத்தனை? : ..........................................

23. அடைப்பினுள் உள்ள பின்னங்களில் 2/3 இன் சமவலுப் பின்னங்களைத் தெரிவு செய்து எழுதுக.

$\frac{4}{8}$ $\frac{8}{12}$ $\frac{4}{6}$ $\frac{4}{9}$

: ..........................................


24. **3kg 750 g** தேயிலையில் இருந்து எத்தனை **250 kg** தேயிலைப் பைக் கற்றுக்களைச் செய்ய முடியும்? : ..........................................

25. பாடசாலை கலைந்து பேருந்து தரிப்பிடத்திற்கு பி.ப 1.35 இற்கு வந்து சேர்ந்த மோகனுக்கு 20 நிமிடங்கள் கழித்தே வீடு செல்வதற்கான பேருந்து கிடைத் தது. மோகன் பேருந்தில் 25 நிமிடங்கள் பயணம் செய்து வீடுவந்து சேர்ந்தான். அவன் வீடு வந்து சேர்ந்த நேரம் இருப்பத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத் தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக? ..........................................

26. அடைப்பினுள் உள்ள எண்களில்


1025 839 959 273

1. எந்த இரு எண்களின் கூட்டுத்தொகை 1298 ஆகும்? : ..........................
2. எந்த இரு எண்களின் வித்தியாசம் 686 ஆகும்? : ..........................

27. 

இவ்வுருவில் உள்ள

1. செங்கோணங்கள் எத்தனை? : ..........................................
2. செங்கோணத்திலும் குறைந்த கோணங் கள் எத்தனை? : ..........................

28. 

1. உருவில் காணப்படும் திண்மத்தின் பெயர் யாது? : ..........................................
2. இத்திண்ம உருவில் காணப்படும் செவ்வக வடிவ முகங்கள் எத்தனை? : ..........................................

29. **1 kg** அரிசியின் விலை ரூ. **120** ஆகும். **1 kg** பருப்பு ரூ. **190** ஆகும்.


1. கோபி, **1kg 250g** அரிசியும் **500g** பருப்பும் வாங்கினான். அவன் கடைக் காரருக்குக் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?

..........................................

2. இதற்காக கோபி ரூ. **500** பணத்தைக் கடைக்காரருக்குக் கொடுக்கும் போது அவனுக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

..........................................

30. 40 பிள்ளைகளைக் கொண்ட வகுப்பொன்றில் 5 நாட்களாகப் பாடசாலைக்கு வருகை தந்த பிள்ளைகளின் தொகையை வகை குறிப்பதற்கு இந்த வரைபு வரையப்பட்டுள்ளது.




1. திங்கட்கிழமை பாடசாலைக்கு வருகைதராத பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

..........................................

2. சம தொகையான மாணவர்கள் வருகைதந்த இரண்டு நாட்களும் எவை?

..........................................

● **31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.**

31. வீட்டில் இயற்கையாகக் காணப்படும் பிராணிகள்?
1. நாய், எறும்பு 2. பல்லி, கோழி 3. எலி, எறும்பு 4. பூனை, நாய்

32. வருடத்தின் ஒரு குறித்த காலத்தில் மாத்திரம் பூக்கும் தாவரம்?
1. கொன்றை 2. தென்னை 3. கமுகு 4. வாழை

33. இலங்கைக்கே உரிய தாவரம் அல்லாதது?
1. குங்குலியமரம் 2. பெரும்பிரம்பு 3. தேயிலை 4. சீண்டுக்கொடி

34. உணவாகப் பயன்படும் வித்து வகைகள்?
1. நெல், பாசிப்பயறு 2. கத்தரி, சோளம்
3. வெள்ளரி, பாகல் 4. வட்டுக்கத்தரி, பப்பாசி

35. வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தும் காய்?
1. பயற்றை 2. புடோல் 3. அவரை 4. வெண்டி

36. ஆந்தை, தேவாங்கு என்பன இரவைக் கழிப்பது.
1. நீர் நிலைகளில் 2. கட்டடங்களில்
3. மலைகளில் 4. மரங்களில்

37. மண்ணில் சேரும் மரக்கட்டைகள், தடிகள், குச்சிகள் என்பனவற்றை உக்கலடையச் செய்வது?
1. கறையான் 2. நத்தை 3. எலி 4. ஈரப்பான்

38. குட்டியீன்று பாலூட்டுவது.
1. அணில் 2. தவளை 3. முதலை 4. ஓணான்

39. தேசியக் கொடியில் காணப்படும் நிறங்கள்?
1. சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம்
2. கபிலம், கறுப்பு, பச்சை, செம்மஞ்சள்
3. செம்மஞ்சள், பச்சை, மஞ்சள், சிவப்பு
4. சிவப்பு, செம்மஞ்சள், நீலம், கறுப்பு

40. சுதந்திர இலங்கையின் முதற் பிரதமர்?
1. சேர்.டி.பி.ஜயதிலக 2. எப்.ஆர்.சேனநாயக
3. டீ.பி.சேனாநாயக 4. டீ.எஸ்.சேனநாயக

41. இலங்கையில் சுதந்திரப் போராட்டத்தின் பிரதானதளபதியாக இருந்தவர்களில் ஒருவரும் ஆங்கிலேயரால் மலாக்காவிற்கு நாடுகடத்தப்பட்டவருமான வீரர் யார்?
1. மொனறாவில கப்பட்டிப்பொல திசாவை
2. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
3. கொங்காலேகொட பண்டா
4. வண எஸ். மஹிந்த

42. கத்தரி, தக்காளி, வெண்டி போன்ற பயிர்களில் அதிகம் சேதத்தை ஏற்படுத்துவது?
1. தண்டுகோதி 2. தும்பி 3. மீலிமூட்டைப்பூச்சி 4. கபிலநிறத்தத்தி

43. நீரில் மிதக்கும் பொருள்கள் மாத்திரம் உள்ள விடை?
1. செப்பு நாணயம், செங்கல் 2. பென்சில், இறப்பர்பந்து
3. இறப்பர்பந்து, செங்கல்துண்டு 4. பென்சில், செப்பு நாணயம்

44. காந்தம் பற்றிய பிழையான கூற்று?
1. காந்தம் அலுமினியத்தைக் கவர்வதில்லை
2. திசையறி கருவியில் காந்தம் பயன்படுத்தப்படுகிறது
3. காந்தக் கோல்கள் இரண்டின் ஒத்தமுனைகள் ஒன்றை ஒன்று கவரும்
4. சரிமத்தியில் நூலில் கட்டித், தொங்கச் செய்து, சுயமாக அசையவிடப்பட்ட காந்தக் கோல் வடக்குத் தெற்காக ஓய்வுக்கு வரும்.


45. உடலை நோயிலிருந்து பாதுகாக்கும் போசணை மிகுந்த உணவு?
1. சோறு 2. பலாக்காய் 3. பசளிக்கீரை 4. இறைச்சி

46. செங்கண்மாரி நோய் ஏற்படுவது?
1. நுளம்பு குத்துவதால்
2. விசர்நாய் கடிப்பதால்
3. அசுத்த நீரைப் பருகுவதால்
4. ஈக்கள் மொய்த்த உணவை உண்பதால்

47. அநுராதபுரம் பற்றிய கூற்றுக்களில் பிழையானது?
1. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனித நகரம்
2. பண்டைய இலங்கையின் முதலாவது தலைநகரம்
3. வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள நகரம்
4. பராக்கிரம சமுத்திரம் காணப்படும் நகரம்

48. நீரில் இட்டவுடன் நீரை ஊதா நிறமாக மாற்றுவது?
1. சர்க்கரை 2. தேயிலை
3. வினாகிரி 4. கொண்டிஸ்தூள்

49. கூடுதலான குண்டூசிகளைக் கவரத்தக்க மின் காந்தம் எது?




1 2 3 4

50. இலங்கைக்கு வடக்கே அமைந்திருக்கும் நாடு?
1. மலேசியா 2. சோமாலியா 3. அவுஸ்திரேலியா 4. இந்தியா

51. பின்வரும் எப்பொருளை வீட்டில் உள்ளோர் அனைவரும் பொதுவாகப் பயன்படுத்துவர்?
1. பற்தூரிகை 2. கைக்குட்டை 3. தொலைபேசி 4. தலையணை

52. இரவு வானில் காணமுடியாதது?
1. வானவில் 2. எரிகற்கள் 3. நட்சத்திரங்கள் 4. உடுக்கோலம்

53. 

உருவில் உள்ள உடுக் கோலத்திற்கு வழங்கும் பெயர்?
1. பெருங்கரடி 2. வேட்டைக்காரன்
3. தேள் 4. பெருநாய்

54. தாவரங்களை நடுவதற்கு ஒழுங்கு செய்யும் பயிர்ச் சாடிகளின் அடியில் இடப்பட வேண்டியது?
1. இறுக்கமான மண்கலவை 2. உக்கிய இலைகள்
3. செங்கல் துண்டுகள் 4. பசளை

55. பின்வருவனவற்றுள் வித்து முளைக்கக் கூடிய சந்தர்ப்பம்?
1. உலர்ந்த சோதனைக் குழாயினுள் இட்டு சாதாரண அறையில் வைக்கப்பட்ட வித்து.
2. சோதனைக் குழாயின் அடியில், ஈரமான பஞ்சின் மீது இடப்பட்டு சாதாரண அறையில் வைக்கப்பட்ட வித்து.
3. கொதிநீரில் அவித்தபின் சோதனைக் குழாயில் இட்டு சாதாரண அறையில் வைக்கப்பட்ட வித்து.
4. சோதனைக் குழாயில் இட்டு குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்ட வித்து

56. நிறக் கடதாசிகளைக் கிழித்து ஒட்டி ஆக்கப்படும் சித்திரம்?
1. அச்சுப்பதித்தல் 2. பெத்திக்
3. பாவுரூபம் 4. கொலாஜ்

57. 

படத்தில் காணப்படும் உபகரணத்தைப் பயன்படுத்துவதன் மூலம்?
1. மழை பெய்யப்போவதை முன்கூட்டியே அறியலாம்.
2. மழைவீழ்ச்சியின் அளவை அளக்கலாம்
3. வானிலை பற்றி எதிர்வு கூறலாம்
4. எங்கு மழை பெய்கிறது என்பதை அறியலாம்.

58. மரக்கறிகளின் போசணை அழிவடையாமல் சமைக்கத்தக்க முறை?
1. மரக்கறிகளை வெட்டியபின் கழுவுதல்
2. மரக்கறிகளைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டுதல்
3. மரக்கறிகளைக் குறைந்த வெப்பநிலையில் குறுகிய நேரம் அவித்தல்
4. மரக்கறிகளைக் கூடிய வெப்பத்தில் கூடிய நேரம் அவித்தல்

59. பூவிதழ்களால் சூழப்பட்டு கையில் வாளுடன் நிற்கும் சிங்கம் தேசியக் கொடியில் உள்ளது. இதனால் குறிக்கப்படுவது?
1. நாட்டையும் கட்டுப்பாடான நாட்டு மக்களையும் 2. நிலைத்திருத்தலை
3. தன்னிறைவை 4. தார்மீகத்தை

60. இயற்கை அனர்த்தம் ஒன்று ஏற்படுகின்ற நேரத்தில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டியது.
1. எமது பணத்தைப் பாதுகாக்க
2. எமது வீட்டைப் பாதுகாக்க
3. எமது உயிரைப் பாதுகாக்க
4. எமது பொருள் பண்டங்களைப் பாதுகாக்க

# காட்டு யானை தாக்கி இளைஞன் உயிரிழப்பு

(கொழும்பு)

புத்தளம்-அநுராதபுரம் வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் ஒருவர் காட்டு யானையால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த சம்பவம் மீ ஓயாவிற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் துவிச்சக்கரவண்டியில் அவ்வீதியால் பயணித்த போது காட்டு யானை ஒன்று வீதியின் குறுக்கே நின்றதாகவும், இருள் வேளை என்பதால் யானை நின்றது குறித்த நபருக்குத் தெரியவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனால் யானையின் அண்மையில் குறித்த நபர் சென்றபோது அவரை குறித்த யானை மோசமாகத் தாக்கியுள்ளது. இதனால் அந்த நபர். படுகாயமடைந்த நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் அவர் கருவலகஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயது இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். (இ-7)

# கல்வியியல் கல்லூரிகளுக்கு மே மாதம் புதிய மாணவர்கள்

(கொழும்பு)

கல்வியியல் கல்லூரிகளுக்கான புதிய மாணவர்கள் எதிர்வரும் மே மாதம் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி ஆணையாளர் கே.என்.எச்.பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நிறைவு பெற்றுள்ளன. இம்முறை கல்வியியல் கல்லூரிகளுக்கு நான்காயிரத்து 745 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆரம்ப நிலை மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடங்களுக்காக இம்முறையும் கூடுதலான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தரம்-1 இல் மாணவர்கள் சேர்ப்பு; பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தல்

## கல்வியமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

தரம் 1 இல் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான தகவல்களை தொடர்ந்தும் ஒழுக்கவிதி முறையுடன் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற முன்னேற்ற மதிப்பீட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இந்த விடயங்களை தெரிவித்தார்.


2019 ஆம் ஆண்டு தரம் 1 இல் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான சுற்றறிக்கை குறித்தும் நடைமுறைகள் தொடர்பிலும் இதன் போது விரைவான முறையில் கலந்துரையாடப்பட்டது.

புள்ளிகள் வழங்கும் நடைமுறை மற்றும் தெரிவு செய்யப்படும் மாணவர் வதிவிடம் குறித்த தகவல்களை சமர்ப்பிப்பதில் பிரச்சினைகள் ஏற்படாத வகையில் பிள்ளைகளின் தகைமைகள் தொடர்பிலான தகவல்களை பகிரங்கப்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்துமாறும் அமைச்சர் இதன்போது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

தரம்1இல் மாணவர்களை உள்வாங்கும் பொழுது இடம்பெறும் ஊழல் மற்றும் முறைகேடுகளை தடுப்பதே இதன் நோக்கமாகும். போலியாக தயாரிக்கப்படும் ஆவணங்களை பயன்படுத்தி மாணவர்களை பாடசலைக்கு சேர்த்துக் கொள்வதற்காக பெற்றோர் முயற்சிப்பதன் காரணமாக தகுதிகளை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை தரம் 1 இல் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பான சுற்றுநிருபத்தில் சில மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# அதி சொகுசு பேருந்து தீக்கிரை



(ஏறாவூர்)

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் புணாணை 118ஆவது மைல் கல்லுக்கு அருகாமையில் அதிசொகுசு பேருந்து ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலநறுவை - மன்னம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த சாமர மதுசங்க புஸ்பகுமார என்பவருக்குச் சொந்தமான சொகுசு பேருந்துக்கே தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்த பேருந்து கல்முனைக்குச் சென்று அங்கிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு கொழும்புக்கு செல்வதற்காக கல்முனை நோக்கி பயணித்த போதே இச்சம்பவம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து பேருந்து நடத்துநர் தெரிவிக்கையில்,

"நானும் பேருந்து உரிமையாளரும் சாரதியுமான சாமர மதுசங்க புஸ்பகுமார என்பவரும் கல்முனைக்கு சென்று கொண்டிருந்த போது புணாணை பிரதேசத்தில் வைத்து பேருந்துக்கு ஒருவர் கல்லால் எறிந்தார்.

இதனை அவதானித்த சாரதி பேருந்தை வீதியோரமாக நிறுத்திய போது பேருந்துக்கு அருகில் வந்த நால்வர் என்னைத் தாக்கி விட்டு பேருந்தை பெற்றோல் ஊற்றி தீயிட்டு விட்டு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்று விட்டனர்" என்று தெரிவித்தார். (இ-7)

# கிழக்கில் தொல்பொருள் பாதுகாப்பு நடவடிக்கைகள்

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் பணிப்புரைக்கமைய, தீகவாபி சயித்தியத்தை புனரமைக்கும் பணிகளை தொல்பொருள் திணைக்களம் ஆரம்பிக்கவுள்ளது.

மக்களின் வழிபாட்டிற்கு உகந்தவாறு சயித்தியம் திருத்தி அமைக்கப்படும். புனரமைப்புப் பணிக்காக இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் செங்கற்கள் பயன்படுத்தப்படும் என்றும் இந்தப் பணிக்காக ஐந்து வருடங்கள் எடுக்கும் என்றும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பி.பி.மண்டாவெல தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1387

Search for people, places and things — Nagendram Home

## ஆனந்த்




## அஜய்




## அஸ்வர்




## ராகுலன்




## ராம்




## ராஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்கும் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# செல்வ வளம் பெருக்கும் அட்ஷய திருதியை



இந்துக்களின் இறைவழிபாட்டோடு தொடர்புடைய மங்கள கரமான நாட்களில் அட்ஷய திருதியை தினமும் சிறப்புறுகின்றது. அட்ஷ்யம் என்றால் வளருதல், குறைவில்லாது இருத்தல், நிறைதல், பெருகுதல் என பல பொருள் கொண்டு அமையப் பெறுகின்றது. வருடத்தின் சித்திரை மாத அமாவாசைக்கு அடுத்துவரும்மூன்றாவதுநாளான திருதியைத் திதியில் இம் மங்களகரமான நாள் அமைவுறுகின்றது.

செல்வத்தின் அதிபதியாக விளங்குபவள் மகாலட்சுமி. அந்த மகாலட்சுமிக்கு அடுத்த நிலையில் செல்வங்களைப் பாதுகாக்கும் பொறுப்பினைப் பெற்றவன் குபேரன். இராவணனின் சகோதரனான இக் குபேரன் சிவபெருமானைக் குறித்து தவம் புரிந்து எம்பெருமான் திருவருளால் சங்கநிதி, பதுமநிதி எனும் இரு நிலைகளை அடைந்து மகாலட்சுமிக்கு துணையாக செல்வங்களை அளிக்கும் பேற்றினைப் பெற்றுக் கொண்டது இன்றைய நாளிலேயாகும். ஆகவே தான் இன்றையதினம் லட்சுமி குபேரனை வழிபாடியற்றி வருவது வழக்கமாகவுள்ளது.

இன்றைய அட்ஷய திருதியை நன்னாளில் பல சிறப்புக்கள் இழையோடியுள்ளன. மகா விஷ்ணுவின் அவதார அம்சமாக பரசுராமர் பூமியில் அவதாரம் செய்த நாள் இன்றாகும். மேலும் பகீரதனின் கடும் முயற்சியால் புனித கங்கை தேவலோகத்தில் இருந்து பூமிக்கு வந்தடைந்ததும், வேத வியாசர் துணை கொண்டு விநாயகர் மகாபாரத காவியத்தை எழுதியமையும், சூரிய பகவானிடம் இருந்து பாண்டவர்களில் மூத்தவன் தருமன் அட்ஷய பாத்திரம் பெற்றதுவும், காசியில் அன்னபூரணித் தாய் தன் அண்ணன்திருமாலின்துணைகொண்டு எம் பெருமான் சிவனது பிச்சைப் பாத்திரம் (திருவோடு) உணவு அளித்து அவர் சாபம் தீர்த்துக் கொண்ட நாளும் இன்றேயாகும். இவ்வாறு சிறப்பான அம்சங்கள் இன்றைய நாளிலேயே நடைபெற்றன என நம் புராணங்கள் விதித்துரைக்கின்றன.

குசேலர் தன் குடும்ப வறுமை போக்க தன் நண்பன் கண்ணபிரானைக் காணச் சென்று கண்ணன் அருளால் நீங்காத செல்வம் பெற்றுக் கொண்ட நாள் இன்றாகும். தன் வாழ்வில் மிகுந்த வறுமையை அடைந்த குசேலர் ஒரு முறை துவாரகையில் ஆட்சி புரியும் தன் நண்பனாகிய கண்ணனைச் சந்திக்கச் செல்கிறான். அப்போது கண்ணனுக்காக அன்புடன் சிறிதளவு அவலையும் எடுத்துச் சென்றான். கண்ணனிடம் விருப்புடன் குசேலன் கொண்டு சென்ற அவலில் ஒரு பிடி உண்டார். அக் கணமே கண்ணன் திருவருளால் குசேலர் பெரும் செல்வந்தனாக, செல்வ வளம் படைத்தவனாக மாறினான். இத்தகு சிறப்பு நிகழ்வு நடைபெற்றது இன்றேயாகும்.

இன்றைய அட்ஷய திருதியை நாளானது மங்களகரமான எந்தப் பொருள் வாங்கினாலும் நம் இல்லத்தில் செல்வ வளம் பெருகும் என்பது நம்பிக்கை. பொதுவாக தங்கம் வாங்குவது மட்டுமே சிறப்பினைத் தரும் எனும் கருத்து தவறானதாகும். எல்லோராலும் தங்கம் வாங்க முடியாதே? அவ்வாறு தங்கம் வாங்க முடியாதவர்கள் நம் அன்றாட தேவைகளுக்குரிய அரிசி, மஞ்சள், உப்பு, தானியங்கள், பூஜைப் பொருட்கள், சக்கரை, குங்குமம் முதலிய பொருட்களை எளிதாக இந்நாளில் வாங்குவது நன்மை பயக்கும். எந்தப் பொருள் வாங்கினாலும் அது நன்மையைக் கொடுக்கும் என்பதே உண்மை.

மேலும் இன்றைய நாளில் புதிய கணக்கினை ஆரம்பித்தல், புதிதாக வியாபாரம் தொடங்குதல், கல்வி நடவடிக்கைகள் ஆரம்பித்தல், தான தருமம் செய்தல், உறவினர் வீடுகளுக்குச் சென்று உறவினைப் பலப்படுத்தல் போன்ற நற்காரியங்களிலும் நாம் ஈடுபட வேண்டும். இவை தவிர இந்நாளில் ஏழை எளியவர்க்கு அன்ன தானம் வழங்குவதால் எம் வாழ்வில் நன்மைகள் வந்து சேரும். இல்லாதவர்களுக்கு நம்மிடம் இருப்பதில் சிறிதளவை கொடுப்பதால் அது எமக்கு பலனைத் தந்திடும்.

நாம் எவ்வளவு பணம் கொடுத்து ஆடம்பரமாகப் பொருள் வாங்கினாலும், அதில் கிடைக்காத மனத் திருப்தியும் நன்மையும் எதுவும் இல்லாதவர்களுக்கு நம்மிடம் இருப்பதில் சிறிதளவினைக் கொடுப்பதிலே கிடைத்திடும்.

இத்தகு சிறப்புடைய இந்நாளில் இறை வழிபாடு செய்வது மிகவும் சிறப்புடையதாகும். குறிப்பாக மகாலட்சுமி செல்வத்தின் அதிபதியாக விளங்குவதால் மகாலட்சுமியை இந்நாளில் வழிபட வேண்டும். இதனால் நம் வீட்டில் கடாட்சம் கிடைக்கப் பெறும்.

அத்துடன் குபேரனையும் நினைத்து வழிபாடியற்றுதல் சிறப்புடையதாகும்.

ஆகவே இத்தகு சிறப்புக்கள் இழையோடுகின்ற அட்ஷய திருதியை நன்னாளில் ஆலயம் சென்று இறைவழிபாடியற்றி ஏழை, எளியவர்களுக்கு தான தர்மம் அளித்து, நல் எண்ணங்களை நம் மனதில் நினைத்து சுபகாரியங்களை இனிதே தொடங்கி வாழ்வில் சகல ஐஸ்வர்யங்களும் பெற்று நிறைவான வாழ்வு பெறுவோம்.

-இரா.நிஷாந்தன்-
இராமநாதபுரம்.

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 24

**பரமசாமி பஞ்சாட்சரம்**

### மானசரோவர் ஏரியின் விபரம்

மானசரோவர் ஏரி கயிலை மலைப் பகுதியிலுள்ள நல்ல தூய நீரைக் கொண்ட புனித ஏரியாகும். இந்த ஏரிக்கு இந்துக்கள் சென்று வருவதை மிகப் பெரும் புண்ணியமாகக் கருதி வருகிறார்கள். மானசரோவர் ஏரி சுமார் 100மீ. ஆழமும், 410 சதுரக் கி.மீ. பரப்பும், 110கி.மீ. சுற்றளவும் கொண்டது. இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 4590 மீ. உயரத்தில் உள்ள ஏரி. உலகிலேயே அதி உயரத்திலுள்ள மிகப் பெரிய நல்ல நீர் ஏரி என்ற பெருமையை இந்த ஏரி தக்கவைத்துள்ளது.

கயிலாய மலையிலுள்ள பனி உருகிக் கற்களின் ஊடாக வந்து இந்த ஏரியை அடைகின்றது. ஆகவே இந்த நீர் புனித சுத்தமான தெளிந்த நீராகக் காணப்படுகிறது. மானசரோவர் ஏரிக்கு மிகவும் அருகில் இரவணன் ஏரி இருக்கின்றது. இந்த இரு ஏரிகளைச் சுற்றி நாலாபக்கமும் மலைகள் இருக்கின்றன. இவ்விரு ஏரிகளின் நீர் ஒருபோதும் நிரம்பி வழிவதில்லை. ஆனால் இந்தப் பெரிய ஏரிகளின் நீர் மலை அடியிலிருந்து ஊற்று நீராகத் தொடர்ந்து வெளியே வந்து கொண்டிருக்கின்றது. இந்த ஊற்று நீரோடு ஆரம்பிக்கும் நதிகள் தான் பிரம்ம புத்திரா, சட்லெஜ்சு, காகரா (கர்னாலி), சிந்து என்னும் மிகப் பெரிய, நீளமான ஜீவ நதிகளாகும்.



### மானசரோவர் ஏரியும் சக்தி பீடமும்

ஆதிபராசக்தி, பிரமாவின் புத்திரரான தக்சனின் மகளாகப் பிறந்து தாட்சாயினி என்னும் பெயருடன் வாழ்ந்து சிவனைத் திருமணம் செய்து கொண்டார். தக்சன் தான் செய்த பெரிய யாகத்திற்கு வந்த சிவனுக்கு மதிப்புக் கொடுக்கவில்லை.

இதனால் தாட்சாயினி தனது தந்தை மீது கோபமடைந்து தன்னை மாய்த்துக்கொள்ளத் தீர்மானித்து யாகத்திலே பாய்ந்து விட்டார். இதை அறிந்த சிவன் தாட்சாயினியின் உடலை யாகத்திலிருந்து தூக்கித் தலையில் வைத்துச் சிவதாண்டவம் ஆனார்.

அவ்வேளையிலே தெறித்த சக்தியின் எரிந்த பாகங்கள்; 51 இடங்களில் விழுந்தன. சக்தியின் வலது முன்னங்கை மானசரோவர் ஏரியில் விழுந்ததாக ஆதி சங்கரருடைய சக்தி பீடத் தோத்திரத்தில், குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் "தாட்சாயினி-மானசரோவர் தியாகபீடம்" என்று இந்த ஏரி விளங்குகிறது.

தாட்சாயினியின் உடலில் இருந்து பிரிந்த ஆதி பராசக்தி பின் கௌரியாகப் பிறந்து, திருமணத்தின் பின் பார்வதியென அழைக்கப்படுவதால், இந்த ஏரியைப் பார்வதி அம்மன் ஏரி என்று அழைக்கின்றார்கள். கயிலை சிவ சொரூபம் என்றால் மானசரோவர் பார்வதியின் சொரூபம் என்பர்.

### மானசரோவர் ஏரியும் கிரிவலமும்

மானசரோவர் ஏரியைக் கிரிவலம் வருவதற்கு ஒரு விசேட பேருந்தை எங்களுக்கு ஒழுங்கு செய்து தந்தார்கள். மானசரோவரின் பாதுகாப்புக் காரணமாக நாங்கள் பிரயாணம் செய்த பேருந்துகளை கிரிவலத்திற்கு அனுமதிக்கவில்லை. மானசரோவர் ஏரியின் கரையோரப்பாதை இப்போது திருத்தி அமைக்கப்பட்டு வாகனங்கள் செல்லக்கூடியதாக இருக்கின்றது. 104கி.மீ. தூரத்தைக் கொண்ட இப்பாதையின் இடையிடையே கற்பாதைகளும் காணப்பட்டன. இக் கிரிவலம் செல்லும் பாதை தற்போது ஆச்சிரமங்களுக்கும் புத்த கோவில்களுக்கும் செல்வதற்குரிய பாதையாகப் பாவிக்கப்படுகின்றன. கயிலாயப் பரிக்கிரமா போல மானசரோவர் பரிக்கிரமாவும் முக்கியமானது. இதைக் கால் நடையாகவும் அல்லது வாகனத்தின் மூலமாகவும் வலம் வருவார்கள்.

பிற்பகலில் மானசரோவர் ஏரியின் வடபகுதியில் சுகு அல்லது ஜெய்தியில் இருந்து கயிலை மலையின் திவ்விய தோற்றத்தைக் காண முடியும். அங்கு தரிசனம் செய்யும் போது கயிலை நாதரின் தெற்கு முகத் தரிசனம் பிரகாசமாகத் தெரியும்.

எங்கள் உதவியாளர்கள் மானசரோவர் ஏரியின் வடபகுதியிலுள்ள சுகு என்னும் இடத்தில் பேருந்தை நிறுத்தி விட்டு எங்களை ஏரியில் நீராடும் படி சொன்னார்கள்.

(தொடரும்)

# ஜனாதிபதி நாடு திரும்பியதும் புதிய கூட்டு உடன்பாடு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பிய பின்னர், ஐ.தே.கவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில், புதிய கூட்டு உடன்பாடு ஒன்று கையெழுத்திடப்படவுள்ளது.

கொமன்வெல்த் உச்சி மாநாட்டில் பங்கேற்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன லண்டன் சென்றுள்ளார். எதிர்வரும் 22ஆம் திகதி அவர் நாடு திரும்பவுள்ளார்.

அதன் பின்னர், கூட்டு அரசாங்கம் தொடர்பான புதிய உடன்பாடு, இரண்டு கட்சிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்படும் என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு"இரண்டு கட்சிகளும் இணைந்து முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கியதாக இந்த உடன்பாடு அமையும்.

கடந்த காலத்தில் ஏற்பட்டது போன்ற சிக்கல்கள் ஏற்பட்டாத வகையில் புதிய வழிகாட்டு முறைகளையும் இந்த உடன்பாடு கொண்டிருக்கும்.

புதிய உடன்பாட்டைத் தயாரிக்கும் நடவடிக்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் சரத் அமுனுகம தலைமையிலான குழு ஈடுபட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)




# இலங்கையில் அமெரிக்கத் தரைப்படையின் உயர்மட்டக்குழு





(கொழும்பு)

அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் தரைப் படையை (US Land Forces) சேர்ந்த 17 அதிகாரிகளைக் கொண்ட குழு இலங்கை வந்துள்ளது. தரைப்படைகள் பசுபிக் திட்ட அமர்வுகளில் பங்கேற்கவே இந்தக் குழு கொழும்பு வந்துள்ளது.

இந்தக் குழுவுக்கு, அமெரிக்க இராணுவ பசுபிக் கட்டளை பீடத்தின் வடக்குப் பகுதி பிரதி கட்டளை தளபதியான அவுஸ்திரேலிய இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ரோஜர் ஜே நோபிள் தலைமை வகிக்கிறார்.

மேஜர் ஜெனரல் ரோஜர் ஜே நோபிள் மற்றும் மூன்று அதிகாரிகள் நேற்று முன்தினம் இராணுவத் தலைமையகத்தில், இராணுவத் தலைமை அதிகாரி டம்பத் பெர்னாண்டோவைச் சந்தித்து கலந்துரையாடினர்.

அதையடுத்து, பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த பூர்வாங்க கலந்துரையாடலில், அமெரிக்க தரைப்படைக் குழுவினர் பங்கேற்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட மேஜர் ஜெனரல் ரோஜர், நிபுணத்துவ ஆற்றல் தொடர்பாகவும், அமெரிக்க பங்காளர் ஐந்தாண்டு திட்டம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புடன் தொடர்புடைய இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களுக்கு தீர்வு காண்பது குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்று கூறினார்.


அத்துடன், பரஸ்பர நலன் மற்றும் கரிசனைக்குரிய பிராந்திய மற்றும் ஏனைய விவகாரங்கள் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை இராணுவத்தரப்பில் மேஜர் ஜெனரல்கள் டம்பத் பெர்னாண்டோ, தனஞ்சித்கருணாரத்ன, அருண வன்னியாராச்சி, மேர்வின் பெரேரா மற்றும் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். (இ-7)

# பேருந்துடன் மோதிய ஆட்டோ திடீரென தீப்பற்றி எரிந்தது

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயம்





(கொழும்பு)

பேருந்து ஒன்றும் ஆட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டமையால் தீப்பற்றிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து அம்பாந்தோட்டை நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்றும், அம்பாந்தோட்டையில் இருந்த வந்த ஆட்டோ ஒன்றும் மோதியமையால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திடீரென ஏற்பட்ட இந்த தீ விபத்தினால் ஆட்டோவில் பயணித்த 4 பேர் தீக்காயமடைந்து அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திஸ்ஸ - மாத்தறை பிரதான வீதியின் அம்பலந்தோட்டை சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.


விபத்துக்குள்ளான ஆட்டோ முழுமையாக தீப் பற்றி அழிந்துள்ளது. இந்தச் சம்பவத்தினால் பேருந்துக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ள போதிலும் பேருந்தில் பயணித்தவர்கள் காயமின்றி தப்பியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் அவர்களின் இரண்டு பிள்ளைகளாவர்.

சம்பவத்தை பார்த்த மக்களில் பலர் விபத்துக்குள்ளானவர்களின் உயிரைக் காப்பாற்றாமல் தங்கள் கையடக்க தொலைபேசிகளில் படம் மற்றும் காணொலிகளை எடுத்துள்ளனர்.

தொலைபேசி மோகத்தில் மனிதாபிமானம் மரணித்துள்ளதாக பலரும் சமூக வலைத்தளங்களில் தமது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளனர். (இ-7)

# கனடாவின் தொடர் கொலையாளியால் மற்றுமொரு இலங்கையரும் கொலை



(டொரண்டோ)

கனடாவின் தொடர்கொலையாளியான ப்ரூஸ் மெக் ஆர்தரினால் கொலை செய்யப்பட்ட மற்றுமொரு இலங்கையர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஏற்கனவே அவர் ஸ்கந்தராஜா நவரட்ணம் என்ற இலங்கையர் உள்ளிட்ட எட்டு பேரை கொலை செய்தமைக்காக கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவின் டொரண்டோவைச் சேர்ந்த மெக்ஆர்த்தர், தாம் கொலை செய்கின்றவர்களை விவசாய காணிகளில் புதைத்துவந்தமையும் தெரியவந்துள்ளது.

அவரால் கொலை செய்யப்பட்ட மற்றுமொரு இலங்கையர், கிருஷ்ண குமார் கனகரட்ணம் என்ற 37 வயதான நபர் என்று நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

உருக்குலைந்திருந்த அவரது சடலம், சர்வதேச முகவர் அமைப்பு ஒன்றின் உதவியுடன் அடையாளம் காணப்பட்டதாக புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர் 2010ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து கனடாவிற்கு இடம்பெயர்ந்திருப்பதாகவும், 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் - டிசெம்பர் மாதங்களுக்கு இடையில் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் கனடாவின் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)



வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே யாழ்ப்பாணம் முஹம்மதியா ஜும்மா மஸ்ஜித்திற்கு நேற்று விஜயம் செய்து ஆசிபெற்றார். இதன்போது யாழ்.எழுத்தாளர் "தேசாபிமானி" அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால்(ஜே.பி), முஹம்மதியா ஜும்மா மஸ்ஜித் தலைவர் மெக்ஸா மூீன் ஆகியோர் ஆளுநருக்கு பொன்னாடை அணிவித்தனர். யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் ரிபாஹிர், நிலாம், முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர் மற்றும் சுபியான் மௌலவி, மஹ்மூத் மௌலவி, ஜமால் சரபுல் அனாம், சுனீஸ், நசீர், மிஸ்னூன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## தற்காலத்து நற்சீரகத்தின் பயன்



நமது வீட்டு சமையலறையிலே சீரகத்திற்கு தனி ஆதிக்கம் உண்டு. சீரகம் உணவு வகைகளின் ருசிப் பெறுமை ஒரு பங்கு என்றால் இதன் மருத்துவ சிறப்பு பல மடங்கு ஆகும். சீரகம் என்ற சொல்லை பகுத்துப் பார்க்கும் போது "சீர்+அகம்" என்ற இரண்டு தனிச் சொற்கள் கிடைக்கின்றன.

இதன் முழுப்பொருள் நமது அகமாகிய குடற்பகுதியை ஒழுங்குபடுத்தும் தன்மை சீரகத்திற்கு உண்டு. தொல்காப்பியர். காலத்திற்கு முன்னரே சீரகம் நம் மக்கள் மத்தியில் பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இது மட்டுமன்றி மிகப் பழங்காலத்திலிருந்தே உலகம் முழுவதிலும் அறிந்து உணரப்பட்ட ஒன்றாகவும் இருக்கின்றது. எகிப்து நாட்டு பண்டைய மருத்துவச் செடிகளிலேயே சீரகம் இடம்பெறுகிறது.

சீரகத்தின் தொன்மைய சிறப்பு எத்தகையதாக இருப்பினும் நமது தேசத்தில் சீரகம் இன்றைய அளவும் அதிகளவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனாலும் சீரகத்தின் தாயகம் "பெர்ஷயா" என தாவரவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். உணவுக்கு நல்ல மணமூட்டும் சீரகத்தின் சுவை சற்று கசப்பு இயல்பு கொண்டதாக உள்ளது. ஜீரண சக்திக்கு அத்தியாவசியமானதாக சீரகம் திகழ்வதால் "போசண குடாரி" எனவும் அழைக்கப்படுகிறது. பித்தமெனும் மந்திரியை பின்னப்படுத்தியவன் சத்துருவையுந்துறந்து சாதித்து - மத்தனெனும் ராசனையு மீவென்று நண்பனைப் பலப்படுத்தி போசனகு டாரிசெயும் போர்" இது பித்தம் எனும் தீக்குற்றத்தை தன்னிலைப்படுத்தி வயிற்றி மந்தத்தை போக்கி பசியை உண்டாக்கி உணவை செரிக்கச் செய்யும். வாந்தி யருசிகுன்மம் வாய்நோய்பீ விகாமிரைப் பேற்றிருமல் கல்லடைபடபி லஞெசனமுட் - சேர்ந்தகம்மல் ஆசனகு டாரியெனும் அந்தக் கிரகனியும் போசனகு டாரியுண்ணப்போம். வாயுவொடு நாசிநோய் வன்பித் தஞ்சேராது காயம் நெகிழாது கண்குளிருந்- தூயமலரிக் காரளகப் பெணமயிலே கைகண்ட தித்தனையுஞ் சீரகத்தை நீதினமுந்தின். சீரகத்தினால் அழல் தீரும். வயிற்று வலி,வாய்நோய்,இருமல்,கல்லடைப்பு, குருதிக் கழிச்சல், ஆஸ்துமா, வாத நோய்கள் தீரும். உணவு சைவமாக இருந்தாலும், அசைவமாக இருந்தாலும் சீரகத்தின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

அசைவ உணவில் இறைச்சி போன்றவற்றை சீரணிப்பதற்கு சீரகம் பேருதவி புரிகிறது.மேல் நாடுகளில் சீரகத்தை விட ஓமத்தை சமையலிலும் மருந்து தயாரிப்பிலும் அதிகமாக பயன்படுத்துகிறார்கள். ஆனால் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஓமம்,சீரகம் இரண்டையுமே பயன்படுத்துகின்றோம்.

உடல் வளர்ச்சிக்கும், உடல் நலத்திற்கும் தேவையான எல்லாவிதமான ஊட்டச் சத்துக்களும் தகுந்த அளவில் சீரகத்தில் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக புரதச்சத்து, தாது உப்புக்கள், விற்றமின்கள் சீரகத்தில் மிகத் தாராளமான அளவில் பொதிந்துள்ளன. 100 கிராம் சீரகத்தில் புரதச்சத்து 18.7 சதவிகிதமும் காபோவைதரேற்று 36.6 சதவிகிதமும், கொழுப்புச் சத்து 15 சதவிகிதமும், நார்ப் பொருள்15 சதவிகிதமும், நீர் 11.9 சதவிகிதமும், இரும்புச்சத்து 31 சதவிகிதமும், உள்ளன. 100 கிராம் சீரகத்தில் உயிர்ச்சத்து 3 மில்லி கிராம் அளவு உள்ளது. சீரகத்தின் சிறப்பான மருத்துவக்குணம் உடல் செரிமானத்திற்கு அதிகம் உதவுவது தான். தவிர அஜீரணம் காரணமாக ஏற்படுகின்ற எல்லா விதமான குறைபாடுகளையும் அகற்றுகின்றது. கர்ப்ப காலத் தொடக்கத்தில் பெண்களுக்கு ஏற்படும் வாந்திக்கு சீரகத்துடன் எலுமிச்சம் பழச்சாறு சேர்த்துக் கொடுக்க வாந்தி நிற்கும்.கர்ப்பிணிப் பெண்களிற்கு பிரசவ காலத்தில் பிரசவவலி ஏற்படும் போது சீரகத்தைக் கொண்டு கசாயம் (குடிநீர்) காய்ச்சிக் கொடுக்க வலி குறைவதுடன் விரைவில் சுகப்பிரசவம் அமையும். பிரசவத்திற்கு பின்பு தாய்க்கு தாய்ப்பால் நன்றாகச் சுரக்க சீரகமும்,மிளகும் சேர்த்து பக்குவம் செய்த ரசத்தை அடிக்கடி சேர்த்து கொடுக்க வேண்டும். சீரகத்தை கழுவி உலர்த்தி இடித்துப் பொடியாக்கி வைத்துக் கொண்டு 15-25 கிராம் வரை காலை, மாலை தேனில் குழைத்துக் கொடுக்க அஜீரண பேதி, குடல்புண் பித்த வாயு தீரும். எலுமிச்சம் சாறு, இஞ்சி சாறு ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் சீரகத்தை பல தடவை ஊறவைத்து எடுத்து உலர்த்தியெடுத்து சூரணமாக இடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.1 தேக்கரண்டியளவு காலை, மாலை பசும்பாலில் கலந்து உட்கொள்ள மூலக்கடுப்பு, பித்த கோளாறுகள், கண்ணெரிச்சல், சீதபேதி ஆகியன நீங்கும். சீரகத்தை சுத்தம் பார்த்து 175 கிராம் அளவிற்கு எடுத்துக் கொள்ளவும்.இதனை எலுமிச்சம் பழச்சாற்றில் 2 மணி நேரம் ஊறவைத்து எடுத்து உலர்த்திக்கொள்ள வேண்டும்.

இந்த சூரணத்துடன் ஏலம், திப்பிலி, மலைவேம்பு, நெல்லிவற்றல், நெற்பொரி, வில்வப்பூத்தோல் ஆகியவற்றின் சூரணத்தை ஒவ்வொன்றும் 100 கிராம் சேர்த்து ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். கலக்கப்பட்ட பொடிக்கு சம அளவு சீனி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

50-100 கிராம் வரை காலை, மாலை தேனில் கலந்து கொடுக்க வயிற்றுப் புண், நெஞ்செரிவு, உடல் எரிச்சல் முற்றாக குணமாகும். சீரகத்தை கரிசலாங்காணிக் கீரைச் சாற்றில் ஊறவைத்து உலர்த்தி பொடித்து 10-20 கிராம் அளவு எடுத்து வெள்ளாட்டு பாலில் கொடுக்க காமாலை நீங்கும். இளம் பெண்ணிற்கு ஏற்படும் வெள்ளை படுதலிற்கு 25 கிராம் சீரகச் சூரணத்துடன் 25 கிராம் சீனி சேர்த்து ஒரு நாளைக்கு ஒரு தடவையாக 40 நாட்கள் உட்கொள்ள முழு குணம் தெரியும். சீரகத்தை நீர் விட்டு கொதிக்க வைத்து வடித்து மிதமான வெப்பத்தோடு 100 மில்லிக்கு குறையாமல் இரவில் அருந்த நிம்மதியான தூக்கம் அமையும். எண்ணெய் குளியல் பழக்கம் உள்ளவர்கள் எண்ணெய் குளியல் செய்யும் போது நல்லெண்ணெயுடன் சீரகம்,மிளகு,ஒரு பல் பூண்டு சேர்த்துக் காய்ச்சி குளிப்பது சிறந்த பலனைத் தரும்.உடல் வலி,நரம்பு தளர்ச்சி, குறிப்பாக கண் எரிச்சல் நீங்கி உடல் உறுப்புக்கு புத்துணார்ச்சி உண்டாகும். சீரகம், மயில் இறகு இரண்டையும் சம அளவு எடுத்து சாம்பலாக்கி ஒரு கிராம் தூளை தேனில் குழைத்து சாப்பிட்டால் விக்கல் வாந்தி தீரும். சீரகத்தை கரும்புச் சாற்றில் ஊறவைத்து காய வைத்து பொடி செய்து தினமும் அதிகாலையில் அரை தேக்கரண்டி அளவிற்கு சாப்பிட்டு வந்தால் இளநரை மறையும். சீரகம், பெருஞ்சீரகம், வாய்விளங்கம், ரோஜாப்பூ, அனைத்தையும் ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும்.

இதில் காலை, மாலை இரு வேளையும். 5 கிராம் அளவிற்கு சாப்பிட்டு வந்தால் உடல் பருமன் குணமாகும். இருமலுக்கு 100 கிராம் சீரகத்தை லேசாக வறுத்து எடுத்து அம்மியில் வைத்து பொடியாக்கி அத்துடன் கற்கண்டு தூளையும் கலந்து வைத்துக் கொண்டு காலை, மாலை இருவேளையும் கொஞ்சம் எடுத்து சாப்பிட்டுவிட்டு வெந்நீர் அருந்த வேண்டும். இதனால் இருமல் குணமாகும். சீரகத்தின் தாவரவியற் பெயர்-Cuminum Cyminum குடும்பம்- Umbelliferae ஆங்கிலப் பெயர்-Cumin, சிங் களப் பெயர்-Suduru. ஓராண்டு வாழக்கூடிய செடியாகும். மளமளப்பான தண்டு 30செ.மீ. வரை வளரக்கூடியது. வாசனையுடைய செடியாகும். சற்று வெளிப்பச்சை நிறமுடையது. சில வகைச் சீரகத்தில் மெல்லிய உரோமங்கள் காணப்படுகின்றன. சில இனங்களில் இதனைக் காணமுடிவதில்லை. ஒழுங்கான, இருபாலான, பூக்கள் ரோஸ் வண்ணம் அல்லது வெள்ளை நிறமுடைய பூக்கள்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கண்ணாகம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 | 40 | 45 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 100 | 90 | 80 | 75 | 100 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 40 | 50 | 60 | 45 | 60 | 40 |
| தக்காளி | 30 | 30 | 20 | 40 | 20 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 50 | 30 | 40 | 40 |
| கோவா | 20 | 50 | 40 | 50 | 45 | 50 | 70 |
| கரட் | 120 | 100 | 120 | 100 | 80 | 200 | 80 |
| பூசணி | 30 | 30 | 50 | 50 | 30 | 40 | 50 |
| புடோல் | 50 | 60 | 90 | 60 | 35 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 40 | 30 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 160 | 180 | 150 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 70 | 60 | 50 | 80 | 120 |
| பாகற்காய் | 100 | 140 | 180 | 100 | 80 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 80 | 60 | 40 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 100 | — | 50 | — | 60 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 60 | 20 | 60 | 100 |
| லீக்ஸ் | 180 | 200 | 200 | 180 | 110 | 200 | 120 |
| பீற்றூட் | 30 | 20 | 40 | 40 | 30 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 60 | 40 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 360 | 200 | 150 | 240 | 400 |
| போஞ்சி | 100 | 250 | 130 | 120 | 40 | 160 | 100 |
| கத்தரிதம்புள்ளை | 40 | 30 | 50 | — | — | 70 | 60 |
| கீரை-1பிடி | 40 | 20 | 30 | 30 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 250 | 200 | 250 | 240 | 200 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 90 | 90 | 30-60 | 60-75 | 80 |
| இராசவள்ளி | 200 | 160 | — | 140 | — | 160 | 140 |
| வெங்காயப்பூ | 140 | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 120 | 80 | — | 30 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 45 | 40 | 30 | 40 | 10 | 30 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | — | — | — | 80 | -- |

## எச்சரிக்கையை மீறியதால் 24 வயது யுவதி உயிரிழப்பு

(கொழும்பு)

கினிகத்தேன யடிபேரிய பிரதேசத்தில் களனி கங்கையில் நீராடச் சென்ற யுவதியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கண்டியில் இருந்து குடும்பத்துடன் சுற்றுலா சென்றிருந்த 24 வயது பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் குறித்த யுவதி நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

பின்னர் , குடும்ப உறுப்பி னர்கள் மற்றும் பிரதேசவா சிகள் இணைந்து காணா மல் போன யுவதியை தேடி யுள்ள நிலையில் , நீரில் மூழ்கிய இடத்தில் இருந்து சிறு தூரத்தில் அவரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவர்கள் நீராடிய இடத்தில் அபாயக ரமானது என்ற அறிவிப்பு பலகையும் பொருத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## தமிழ் மக்களுக்கே பெருமை

(ஏறாவூர்)

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை மைத்திரிபால சிறிசேன கொண்டு வருவார் என்ற நம்பிக்கையில், அவரை ஜனாதிபதியாகக் கொண்டு வந்த பெருமை தமிழ் பேசும் மக்களுக்கே உள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் தெரிவித்தார்.

வாழைச்சேனை - கிண்ணையடி மில்லர் விளையாட்டுக் கழகத்தின் சித்திரை புத்தாண்டு விளை யாட்டு விழா நேற்று மாலை நடைபெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக் கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## சு.கவில் அமைச்சுப் பதவிகளை துறந்தவர்களின் முடிவு இன்று

(கொழும்பு)

தமது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் இன்று இரவு நடைபெறவுள்ள கூட்டத்தில் தீர்மானிக்கப்படுமென, அமைச்சுப் பதவி களிலிருந்து விலகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 16 உறுப்பினர்களின் அணி தெரிவித்துள்ளது.

எனவே அதுவரை தமது அணியினர் ஊடகங்கள் முன்பாக அமைதியாக இருப்பதாக லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன மற்றும் எஸ்.பி. திஸாநாயக்க ஆகியோர் அறிவுறுத்தியுள்ளனர். (இ-7)

நீ யாருக்கு விழுந்து விழுந்து உதவி செய்தாயோ அவனே உன்னை துரோக வாள் கொண்டு வெட்டுவான். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறியது சனநாயக தமிழரசுக் கட்சி

## கொள்கை பின்பற்றப்படாமையால் வெளியேறுவதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் அறிவிப்பு

(மன்னார்)

கொள்கை பின்பற்றப்படாமையால் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து நாம் வெளியேறுகின்றோம் என அக்கட்சியின் அங்கத்துவக்கட்சிகளில் ஒன்றான சனநாயக தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் சனநாயக தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் வி.எஸ்.சிவகரன் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கொள்கையில்லை. சனநாயகத் தன்மை இல்லை. சர்வாதிகாரம் காணப்படுகின்றது.

எந்த விதமான நிபந்தனையும் இல்லாமல் அரசாங்கத்துடன் சரணாகதி அரசியல் நடத்துகிறார்கள்.

மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வில்லை எனும் அடுக்கடுக்கான பல்வேறு விதமான குற்றச் சாட்டுடன் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி தமிழ்தேசிய விடுதலை கூட்டமைப்பை ஏற்படுத்தி தமிழர் விடுதலை கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் ஐந்து கட்சிகள் இணைந்து ஒப்பந்தத்தின் அடிப்படையில் போட்டியிட்டோம்.

உள்ளூராட்சி மன்றங்களில் எவருக்கும் ஆதரவு வழங்குவதில்லை எனும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு மாறாக வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எப் நடந்து கொண்டது அரசியல் அநாகரிகம். கொள்கையில்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டு வைக்கிறது என குற்றஞ்சாட்டி விட்டு அதே வேலையை எம்மால் செய்ய முடியுமா? பதவி பெறுவதுதான் முக்கியம் என்றால் எதற்காக இந்த கூட்டில் நாம் தொடர வேண்டும்.

கொள்கையில்லாத தமிழ்த் தேசிய நீக்கத்தை ஏற்படுத்தும் நோக்கிலான கூட்டில் நாம் தொடர விரும்பவில்லை என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வவுனியாவில் பொது எதிரியாகிய தேசிய கட்சிகளுடன் கைகோர்த்தமையை வன்மையாக கண்டிக்கின்றோம்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போக்கை கொள்கையற்ற பதவி ஒருபோதும் சமப்படுத்தப்போவது இல்லை. பதவி பெறுவது விடுதலை அரசியலுக்கு அறமும் இல்லை. அரசியலில் எந்த சந்தர்ப்பத்திலும் ஆதாய சூதாடியாக நாம் இருக்க விரும்பவில்லை என்பதில் திடமான கொள்கையில் பயணிப்பவர்கள் நாம்.

ஆகவே இவ்வாறான பதவி, சுகபோகங்களுடன் கூட்டிணைந்தமைக்காக மக்களிடம் மன்னிப்பு கோருகின்றோம்,

காலம் இவர்களுக்கு தகுந்த பதில் வழங்கும் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை என சனநாயக தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் வி.எஸ்.சிவகரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-4)

# தசரதனின் இறப்புக்கு ஒரு கூனிதான் காரணம்

தசரதச் சக்கரவர்த்தி தன் மூத்த மகன் இராமனுக்கு பட்டாபிஷேகம் செய்யத் தீர்மானிக்கின்றார்.

தான் ஆரோக்கியமாக இருக்கும்போதே தன் மகனிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனை தசரதனிடம் இருந்துள்ளது என்பதும் இதனூடு தெளிவாகிறது.

பட்டாபிஷேகத்துக்கான அத்தனை ஏற்பாடுகளும் நடந்தாயிற்று.

அயோத்தி மாநகர மக்கள் ஆனந்தக் களிப்புடன் பட்டாபிஷேகத்தைக் காண்பதற்காக காத்திருக்கின்றனர்.

என்னே கொடுமை! கைகேயின் தோழி மந்தரை எனும் கூனி தன் சூழ்ச்சியை ஆரம்பிக்கின்றாள்.

பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்யப்பட வேண்டும் எனத் தசரதனிடம் கேட்குமாறு கைகேயியைத் தூண்டுகின்றாள்.

இராமன் மீது அளவு கடந்த அன்பு கொண்ட கைகேயி கூனியின் உபதேசத்தால் மனம் மாறி, இராமனைக் காடாளும்படியும் பரதனை நாடாளும்படியும் உத்தரவிடுமாறு தசரதனிடம் வரமாக வேண்டுகின்றார்.

ஏலவே கொடுத்த இரண்டு வரங்களையும் நிறைவேற்றுவதற்காக இராமன் 14 ஆண்டுகள் காடாளவும் பரதன் நாடாளும்படியும் உத்தரவிடுகின்றார் தசரதன்.

தந்தையின் உத்தரவை கைகேயி வாயிலாக கேட்ட இராமன்; சீதை, இலட்சுமணன் ஆகியோருடன் காடேகிறார்.

பட்டாபிஷேகம் நடக்க இருந்த இராமன் தன் மனையாளுடன் காடு சென்றார் என்ற செய்தி அறிந்த தசரதனின் உயிர் பிரிந்து போகிறது.

என்ன செய்வது இராமனை பெற்ற தந்தை; கோசலை, சுமத்திரை ஆகிய நன்மாதரை மனைவியாகக் கொண்ட கணவன்;

தீங்கறியா நாட்டு மக்கள்; வசிட்டர் உள்ளிட்ட பிரம்மரிஷிகளின் வாசம் என எல்லாம் இருந்த அந்த அரண்மனையில்தான் கூனியும் இருந்தாள்.

எல்லோரையும் நல்லவர்களாகப் பார்த்த தசரதருக்கு கூனியின் கபடத்தனம் தெரியாமல் போயிற்று.

இங்குதான் இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். அதில் ஒன்று நல்லவர்களை அறிவதுபோல தீயவர்களையும் அறிந்திருப்பது அவசியம்.

மற்றையது தீயவர்களை, அண்டல் போடுபவர்களை, கோள் கொண்டு வருபவர்களை வைத்திருந்தால் அதனால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும் என்பதுடன் நல்லவர்களை இழந்தால் தன்னையும் இழக்க நேரிடும் என்பதாகும்.

ஆக, தசரதனின் இறப்பு என்ற நிகழ்வில் இருந்து மேற்போந்த இரண்டு விடயங்களை யும் நாம் உணர்ந்து கொள்வதுதான் புத்தி சாலித்தனமாகும்.

# அம்பாந்தோட்டை துறைமுகம் குறித்து எவரும் ஊகங்கள் வெளியிடத் தேவையில்லை

## சீன வெளிவிவகார அமைச்சர்

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா இராணுவ நோக்கங்களிற்காக பயன்படுத்தும் என எவரும் ஊகங்களை வெளியிட வேண்டியதில்லையென சீனா தெரிவித்துள்ளது.

இதனை சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹூவாசுனிங் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாட்டில் அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் இராணுவத்தளமாக மாறுமா என்ற கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையும் சீனாவும் பரஸ்பர நன்மை மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் துறைமுகத்திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுக திட்டம் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என தெரிவித்துள்ள அவர், இந்தத் திட்டம் சிறப்பான விதத்தில் முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்வது குறித்து இரு நாடுகளும் உறுதியாக உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் பாதுகாப்பு நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படலாம் என்பது குறித்து ஊகங்களை சிலர் வெளியிட வேணடிய தேவையில்லை எனவும அவர் தெரிவித்துள்ளார். (ம)

# முச்சக்கரவண்டியில் செல்லும் பயணிகளுக்கு டிக்கெட் வழங்கல், மீற்றர் பொருத்தும் சட்டம்

## ஏப்ரல் 20ஆம் திகதி முதல் அமுல்

(கொழும்பு)

முச்சக்கர வண்டியில் செல்லும் பயணிகளுக்கு டிக்கெட் வழங்கும் விதத்தில் மீற்றர் பொருத்தும் சட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக தெருப் போக்குவரத்து தொடர்பான தேசிய சபையின் தலைவர் டாக்டர் சிசிர கோதாகொட தெரிவித்துள்ளார்.

பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் இந்தச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சந்தையில் இத்தகைய மீற்றர்களை பெற்றுக் கொள்வதில் காணப்படும் சிரமங்களைத் தவிர்ப்பதற்காக சட்டத்தை உடன் அமுல்படுத்தாமல் 6 மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டது. இந்த கால அவகாசம் ஏப்ரல் 01ஆம் திகதியுடன் நிறைவடைவதாகவும் ஏப்ரல் 20 ஆம் திகதி முதலே அமுலுக்கு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

முச்சக்கர வண்டியில் பயணிக்கும் பயணிகளின் முறைப்பாடுகளை கருத்தில் கொண்டு இந்த சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளதாகவும் டாக்டர் சிசிர கோதாகொட மேலும் கூறியுள்ளார். (ம)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

# இளமையிலேயே ஆன்மீகம்



✦ மனிதனின் மனம் கடுகுப்பொட்டலம் போன்றது. அந்தப் பொட்டலம் கிழிந்து கடுகு நாலாபுறங்களிலும் ஓடிவிட்டால் அதை ஒன்றுசேர்ப்பது சிரமம். அதுபோல, மனம் உலக விடயங்களில் சிதறத் தொடங்கினால் அதைக் குவித்து ஒருமுகப்படுத்துவது சுலபமானதல்ல.

✦ சூரிய உதயத்திற்கு முன்னரே பணிகளைத் தொடங்கினால், அன்றைய பணிகள் யாவும் நன்றாக நடைபெறும். அதுபோல, சிறுவயதிலேயே ஆன்மிக விஷயங்களைத் தெரிந்து கொண்டால் அது முதுமை வரை துணைநிற்கும்.

✦ கடவுளைத் தேடுபவன் கடவுளை அடைகிறான். செல்வத்தையும், செல்வந்தர்களையும் நாடுபவன் அவற்றையே அடைகிறான். வாழ்வில் எதை விரும்பி நாடுகிறார்களோ அதையே அடைவார்கள்.


✦ ஒளியை உணர்பவன் இருளையும் உணர்கிறான். பாவத்தைப் பற்றித் தெரிந்தவனுக்குப் புண்ணியமும் இன்னதென்று தெரிந்திருக்கும். குணத்தைப் பற்றி அறிந்தவன், குற்றத்தைப் பற்றியும் அறிந்திருப்பான்.

✦ பழங்கள் நிறைந்த மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளையும். அதுபோல நீங்கள் பெருமை மிக்கவராக வாழவேண்டுமானால் அடக்கமும் பொறுமையும் தேவை.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மணிவரை யாழ்.பிரதேசத்தில மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலை விளான், வீமன்காமம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து நானாட்டான் வரை, அறுகுக்குன்று, முருங்கனிலிருந்து முள்ளிக் குளம் வரை, சிலாவத்துறை கடற்படைமுகாம், முள்ளிக்குளம் கடற்படைமுகாம், செம் மண் தீவு நெற்களஞ்சியம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**மணிவிழா என்பது என்ன?**

மணிவிழா ஆணுக்கு அறுபது வயது முடிந்து அறுபத்தொன்று வயது தொடங்கும் போது நிகழ்த்துவது ஆகும்.

**பவள விழா என்பது என்ன?**

பவள விழா என்பது ஆணுக்கு எழுபது வயது முடிந்து எழுபத்து ஒன்று வயது தொடங்கும் போது நிகழ்த்துவது ஆகும்.

**முத்துவிழா என்பது என்ன?**

முத்துவிழா என்பது ஆணுக்கு எண்பது வயது முடிந்து எண்பத்து ஒன்று வயது தொடங்கும் போது நிகழ்த்துவது ஆகும்.

(தொடரும்)

# விறுவிறுப்பானது இறுதியாட்டம் நேதாஜி அணி சம்பியன்

சிவநாதன் நிமலன் ஞாபகார்த்த உதைபந்து சம்பியனாகியது நேதாஜி அணி. சிவநாதன் நிமலன் ஞாபகார்த்தமாக ரேவடி விளையாட்டுக் கழகமானது வல்வைக்குட்பட்ட கழகங்களிடையே அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத்தொடரை நடத்தி வந்தது.

அந்த வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நேதாஜி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ரேவடி விளையாட்டுக் கழகம் மோதியது.



மிகவும் விறுவிறுப்பான இப்போட்டியில் முதல்பாதியாட்டத்தில் நேதாஜி அணியானது 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியாட்டத்தில் ரேவடி அணி மிக வேகமாக விளையாடியது. அதற்கேற்ப ஆட்டம் முடிய ஒரு சில நிமிடங்களே உள்ள நிலையில் கிடைத்த தண்ட உதை வாய்ப்பை கோலாக மாற்ற தவறியமையால் போட்டியை நேதாஜி அணியானது 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.

இச் சுற்றுத் தொடரின் தொடர் ஆட்ட நாயகனாக ரேவடி விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த சீலனும், சிறந்த பின்கள வீரராக அதே அணியைச்சேர்ந்த ராஜ், சிறந்த கோல்காப்பாளராக நேதாஜி அணியைச்சேர்ந்த அஜந்தனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் போட்டியின் ஆட்டநாயகனாக நேதாஜி அணியின் கோபி தெரிவு செய்யப்பட்டார். (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# கரப்பந்தாட்ட, துடுப்பாட்ட சுற்றுப்போட்டிகள்

யாழ்ப்பாணம் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்துக் கிரிக்கெட் மற்றும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிரிக்கெட் போட்டியில் அணிக்கு ஏழுபேர் 5 பந்துப் பரிமாற்றங்களையும் கரப்பந்தாட்டப்போட்டியில் ஓவர்-செட்டப் முறையிலும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் 077 632 7598, 077 215 1709, 077 797 8868, 077 456 4591, 077 822 0953 மற்றும் 077 772 2218 என்ற இலக்கங்களுடன்தொடர்புகொண்டுதங்கள்பதிவுகளை மேற்கொள்ளலாம்.

* * * * *

யூ.கே விளையாட்டுக் கழகம் நடத்தும் சுதாகரன் வெற்றிக்கிண்ணம்-2018 மாபெரும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடர் ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

எனவே இக்கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் 077 1459679, 077 7728344 என்னும் தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்கள்பதிவுகளை மேற்கொள்ளலாம். (க)

# நடப்பு ஐ.பி.எல் தொடர் அதிக சிக்சர் விளாசிய வீரர்கள்


கடந்த 7ஆம் திகதி தொடங்கிய ஐ.பி.எல் இருபது-20 தொடரில் இதுவரை அதிக சிக்சர்கள் அடித்த வீரர்கள் யார் என்ற பட்டியல் வெளியாகியுள்ளது.

பரபரப்பாக நடந்து கொண்டிருக்கும் ஐ.பி.எல் தொடரில் ஒவ்வொரு அணியும் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தி வருகின்றன.

ஐ.பி.எல் தொடர் ஆரம்பித்து 10 நாட்கள் முடிந்துள்ள நிலையில், இதுவரை அதிக சிக்சர்கள் விளாசிய வீரர்கள் விபரம்,

1. ஆந்த்ரே ரஸல் (கொல்கத்தா அணி) - 19 சிக்சர்கள்(3 ஆட்டம்)
2. சஞ்சு சாம்சன் (ராஜஸ்தான் அணி) - 12 சிக்சர்கள்(4 ஆட்டம்)
3. டிவில்லியர்ஸ் (பெங்களூர் அணி) - 10 சிக்சர்கள்(4 ஆட்டம்)
4. கே.எல்.ராகுல் (பஞ்சாப் அணி) - 8 சிக்சர்கள்(3 ஆட்டம்)
5. பிராவோ (சென்னை அணி) - 8 சிக்சர்கள்(3 ஆட்டம்) (க)

# ஐ.பி.எல் வரலாற்றில் நரேன் படைத்த சாதனை



ஐ.பி.எல் கிரிக்கெட்டில் 100 விக்கெட் வீழ்த்திய முதல் வெளிநாட்டு சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனையை, கொல்கத்தா அணி வீரர் சுனில் நரேன் படைத்துள்ளார்.

ஐ.பி.எல்.இல் டில்லி அணிக்கு எதிரான போட்டியில், கொல்கத்தா அணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரேன் 3 விக்கெட்டுகள் கைப்பற்றினார்.

இதன்மூலம், அவர் ஐ.பி.எல் தொடரில் 100 விக்கெட் என்ற மைல்கல்லை கடந்தார். மேலும், 100 விக்கெட் கைப்பற்றிய முதல் வெளிநாட்டு சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார்.

சுனில் நரேன் இதுவரை 86 போட்டிகளில் 102 விக்கெட்டுகள் வீழ்த்தியிருக்கிறார். இதில் 6 முறை 4 விக்கெட்டுகளும், ஒரு முறை 5 விக்கெட்டுகளும் கைப்பற்றியுள்ளார்.

மொத்தமாக 336 ஓவர்கள் வீசி, 2113 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்துள்ள நரேனின் சராசரி 6.28 ஆகும். பாகிஸ்தான் கிரிக்கெட் லீக் போட்டியில் சுனில் நரேன் விளையாடிய போது, அவரது பந்துவீச்சில் சந்தேகம் எழுந்தது தொடர்பாக புகார் அளிக்கப்பட்டது.

ஆனால், அவருக்கு தடை ஏதும் விதிக்கப்படாமல் எச்சரிக்கை மட்டும் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க)

# விளையாட்டுக்கு வயது முக்கியமல்ல திறமைதான் முக்கியம் பிராவோ

விளையாட்டில் வயது முக்கியமில்லை திறமை தான் முக்கியம் என்பதை கெய்ல் மற்றும் டோனி நிரூபித்துவிட்டதாக பிராவோ கூறியுள்ளார். பஞ்சாப்-சென்னை அணிகளுக்கிடையேயான போட்டியில் கிண்டல் செய்யப்பட்டு வந்து இரண்டு வீரர்கள் தங்களுடைய அதிரடி மூலம் பதிலடி கொடுத்தனர்.

அதில் முதலாவது வீரர் தான் கிறிஸ் கெய்ல். இந்த ஆண்டு ஐபிஎல் ஏலத்தில் கெய்லை எந்த அணியும் எடுக்க முன்வரவில்லை. அதன் பின் கடைசி கட்ட ஏலத்தின் போது பஞ்சாப் அணி அவரை எடுத்தது.

கெய்லின் ஆட்டம் முன்பு போல் இல்லை, அவருக்கும் வயது 38 ஆகிவிட்டது. இனி அவருடைய அதிரடியை பார்க்க முடியாது என்று பலரும் கூறி வந்தனர்.

இதே போன்று சென்னை அணியில் பெரும்பாலான வீரர்கள் 30 வயதை கடந்தவர்களே இருந்ததால், சென்னை அணியையும் பலரும் கிண்டல் செய்தனர்.

அதிலும் குறிப்பாக 36 வயதான டோனி எப்படி பினிஷிங் செய்து கொடுப்பார் என்று எல்லாம் கிண்டல் செய்தனர். இதற்கு எல்லாம் பதிலடி கொடுக்கும் வகையில், கெய்ல் 33 பந்துகளுக்கு 63 ஓட்டங்கள் எடுத்தார். அதில் 7 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கும்.

நான் மட்டும் என்ன சும்மாவா என்பது போல் டோனி இரண்டாவது துடுப்பாட்டத்தின் போது 44 பந்துக்கு 79 ஓட்டங்கள் குவித்தார். இப்போட்டியில் சென்னை தோல்வியை சந்தித்தது.

இந்நிலையில் சென்னை அணி வீரர் டேவைன் பிராவோ தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில், கெய்ல் மற்றும் டோனியின் வயதைப் பற்றி பலரும் கூறி கிண்டல் செய்து வந்தனர்.

ஆனால் முடிந்த போட்டியில் அதிரடி ஆட்டத்தை காட்டியதே அந்த இரண்டு வீரர்கள் தான், விளையாட்டில் வயது முக்கியமில்லை திறமை தான் முக்கியம் என்று குறிப்பிட்டுள்ளார். (க)



வல்வை வருத்தப்படாத வாலிபர் சங்கம் வல்வைக்குட்பட்ட கழகங்களிற்கிடையே அணிக்கு 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியினை நடாத்தி வருகின்றது. நடைபெற்ற ஆட்டத்தில் சைனிங்ஸ் அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதியது... ஆட்டமுடிவில் 3:0என்ற கோல் கணக்கில் சைனிங்ஸ் அணி வெற்றி பெற்றது.சைனிங்ஸ் அணி சார்பாக பிரசாந் 2, தீபன் 1 கோல்களை போட்டனர்.

# கொலை முயற்சி; சமிக்கு அழைப்பு



இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீரர்களில் ஒருவர் முகமதுசமி. முகமதுசமி மீது அவரது மனைவி பொலிஸில் புகார் அளித்தார். சமி அவரது சகோதரர், உறவினர்கள் என அனைவரும் சேர்ந்து தன்னை கொடுமைப்படுத்தியதாகவும், கொலை செய்ய முயற்சிப்பதாகவும் புகாரில் தெரிவித்து இருந்தார்.

அத்தோடு சமிக்கு பல பெண்களுடன் தொடர்பு இருந்ததாகவும் ஹசின் ஜகான் குற்றம் சாட்டினார்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டு அனைத்தையும் அவர் மறுத்து இருந்தார். மனைவி மனநலம் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், தான் யாருடனும் சேர்ந்து சூதாட்டத்தில் ஈடுபடவில்லை என்றும் சமி தெரிவித்தார்.

இதற்கிடையே மனைவி கொடுத்த புகாரின் அடிப்படையில் முகமதுசமி மீது கொல்கத்தாவில் உள்ள ஜாதவ்பூர் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கொலை முயற்சி, குடும்ப வன்முறை, குற்றசதி, காயப்படுத்துதல், பலாத்காரம் ஆகிய பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. அவரது குடும்ப உறுப்பினர்கள் 5 பேர்மீது வழக்கு பதிவாகி இருக்கிறது.

இந்த நிலையில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்காக கொல்கத்தா சென்ற முகமது சமியை விசாரணைக்கு ஆஜராகுமாறு பொலிஸார் மனு அனுப்பியுள்ளனர். (க)

## எதிர்வரும் 23ஆம் திகதி...

இதற்கு பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் அனுமதி கிடைத்தவுடன் முழுமையான அமைச்சரவை மாற்றம் நிகழுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## போலி நாணயங்களுடன்...

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று அன்றைய தினமே சந்தேக நபர்கள் தடயப் பொருட்களுடன் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து,

மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் வட்டக்கச்சி புதுக்காட்டுப் பகுதியில் 500 ரூபா போலி நாணயத்தாள் ஒன்றும் மற்றும் போலி நாணயத்தாள் அச்சிடப் பயன்படுத்திய மடிக்கணினி என்பனவற்றுடன் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபர்கள் மூவரும் வவுனியா, இராமநாதபுரம் வட்டக்கச்சி, ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஆர்.விமல குணரட்ணா தெரிவித்துள்ளார். (ம-15)

## நாடாளுமன்றத்தில்...

மன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் இடம்பெற்ற மத நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்தின் அமர்வுகளை ரத்து செய்து, மே மாதம் 8-ம் திகதி, புதிய நாடாளுமன்ற அமர்வை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி விடுத்திருந்தார்.

இது அவர் நாட்டில் இல்லாத காலப்பகுதியில் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெறும் என்ற அச்சத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் என்று மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதேநேரம், அவநம்பிக்கை பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதற்காக, தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் பிரதமருக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ், மேலும் காணிகள் விடுவிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த உடன்படிக்கையின் பின்னரே வலிகாமம் வடக்கில் 683 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டிருப்பதாக செய்தியாளர்கள் சிலர் மகிந்த ராஜபக்ஷவிடம் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த விடயங்கள் இத்தோடு நிறுத்தப்படாது என்றும் இன்னும் பல விடயங்கள் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## மதுபோதையில் வாகனம்...

விபத்து ஏற்படும் வகையிலும் முறைகேடாகவும் வாகனங்களை செலுத்திய 22 பேர் மற்றும் அதிக வேகத்துடன் வாகனத்தை செலுத்திய 166 பேருக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை , புதுவருட காலத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை அதிக வருமானத்தை ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஏப்ரல் 6ஆம் திகதி முதல் ஏப்ரல் 13ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 97 மில்லியன் ரூபாய் இலாபமாக கிடைக்கப்பெற்றுள்ளது.

2017ஆம் ஆண்டு இந்த காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்து சபை 85 மில்லியன் ரூபாய்களையே வருமானமாக ஈட்டியிருந்தது.

இதனிடையே, அதிவேக நெடுஞ்சாலைகள் ஊடாக கடந்த 11ஆம் திகதி அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக வீதி போக்குவரத்து அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் தெற்கு அதிவேக வீதி மற்றும் கட்டுநாயக்க அதிவேக வீதியின் ஊடாக சுமார் 3 கோடி ரூபாய் இலாபமாக ஈட்டப்பட்டுள்ளது. (ம)

## நீதிச்சேவை அதிகாரி...

க்கு நீதவான்களாக 15 சட்டத்தரணிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் நியமனத் திகதி வரும் மே முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

அத்துடன், நீதிச் சேவையின் முதலாம் தரத்துக்குரிய தொழில் நியாய சபையின் தலைவராக 4 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவிப்பை நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எச். எஸ்.சோமரத்ன வெளியிட்டுள்ளார்.

புதிதாக நியமனம் பெற்ற நீதிச்சேவைகள் அதிகாரிகள் 19 பேரில் தமிழர் ஒருவர்கூட தெரிவு செய்யப்படவில்லை. இந்த சேவைக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த சட்டத்தரணிகளும் தோற்றியிருந்தனர்.

முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த கொழும்பைச் சேர்ந்த ஹனிபா மொஹமட் ராபி என்பவர் மட்டும் நியமனம் பெற்றுள்ளார். ஏனைய 18 பேரும் பெரும்பாண்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(ம)

## வடக்கு, கிழக்கு...

தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோர் பணியகம் நிறுவப்பட்டுள்ளபோதிலும் அதன் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இன்னும் நிரந்தரக் கட்டடம் வழங்கப்படவில்லை.

எனினும், தற்காலிக அலுவலகமொன்றின் ஊடாக ஆரம்பகட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்பிரகாரம் அலுவலகத்துக்குப் பணியாளர்களை நியமிக்கும் செயற்பாடு இடம்பெற்றுவருகின்றது.

இதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இம்மாத இறுதிக்குள் அதிகாரிகள் தெரிவு நிறைவுபெறவுள்ளது. அதன்பின்னர் பணியகத்தின் தீவிர செயற்பாடு ஆரம்பமாகும்.

முதற்கட்டமாக காணாமல்போனவர்களின் உறவினர்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் நடவடிக்கை ஆரம்பமாகும்.

இதன் ஓர் அங்கமாகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பயணம் மேற்கொண்டு காணாமல்போனவர்களின் உறவினர்களைப் பணியகத்தின் உறுப்பினர்கள் நேரில் சந்திக்கவுள்ளனர். இதற்காக பொது அமர்வுகள் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரமே காணாமல்போனோர் பணியகம் அமைக்கப்பட்டது.

கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளும், மகிந்த அணியும் இதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டன. இதனால், கடும் இழுபறிக்கு மத்தியிலேயே சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி சட்டவரைபு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு சுமார் ஒன்றரை வருடத்துக்குப் பிறகே பணியகத்துக்கான தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களை கடந்த பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்தார்.

கடந்த காலத்தில் காணாமல்போனோர் தொடர்பில் விபரங்களை அறிந்துகொள்வதும், தகவல்களை உறவினர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதுமே இக்குழுவின் நோக்கமாகும்.

காணாமல்போனவர்கள் சம்பந்தமாக எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்தல் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை முன்வைத்தல், காணாமல்போனோர் மற்றும் அவர்களது உறவினர்களின் உரிமைகள் மற்றும் பற்றுதல்களைப் பாதுகாத்துக்கொள்ளல், அரச நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் மூலம் கண்டுபிடிப்பதற்கு முடியாமல்போன நபர்களின் விபரங்கள் அடங்கிய தரவுகளைத் திரட்டி மத்திய தரவு வலையமைப்பொன்றை ஏற்படுத்தி கோவைப்படுத்தல் போன்ற பணிகளை இக்குழு முன்னெடுக்கவுள்ளது.

2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பணியகம் அமைப்பதற்காகவும் அதன் செயற்பாடுகளுக்காகவும் 1.3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

மகிந்த ஆட்சிக்காலத்திலும் காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக மக்ஸ்வெல் பரணகம தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது.

மைத்திரி - ரணில் தலைமையிலான கூட்டாட்சியிலும் அந்தக் குழு செயற்பட்டு தமது இறுதி அறிக்கையை கையளித்தமை தெரிந்ததே. (ம)

## ஆரம்பிக்காவிட்டால்...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐ.தே.க-ஸ்ரீலசுக அக்கப்போர் எங்கள் பிரச்சினை அல்ல. நமது முன்னுரிமை பட்டியலில் முதலிடம் இனப்பிரச்சினை. புதிய அரசியலமைப்பு இல்லையென்றால், இனப்பிரச்சினைக்கு தீர்வில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வில்லையென்றால், பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் பதவி சும்மா ஒரு பக்க வாத்தியம்தான்.

புது அரசியலமைப்பு பணிகளை ஆரம்பிக்க முடியாவிட்டால், சம்பந்தன் இலங்கை பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் பதவியை ராஜினாமா செய்தல் நலம். அப்புறமும் அது தொடர்ந்தால் அது பக்க வாத்திய ஊதல்தான். ஈழத்தை கைவிட்டு ஒரே நாட்டு கொள்கையை சம்பந்தன் ஏற்றது சிங்கள தேசத்துக்கு முக்கியமில்லை போலும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி தமக்கு சார்பானவர்களையே தமிழர் அரசியலில் வைத்திருக்க விரும்புகின்றது என யாழ்ப்பாணத்தில் வைத்து அமைச்சர் மனோகணேசன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## பொதுநலவாய...

வணிக மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று பிரதான உரையாற்றவுள்ளார்.

நிலையான அபிவிருத்திக்கான இலக்கினை அடைவது தொடர்பில் இன்று இடம்பெறவுள்ள மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றவுள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி வரை பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு நடைபெறும் அதேவேளை இளைஞர், மகளிர் மற்றும் வர்த்தக மாநாடுகள் இடம்பெறவுள்ளன.

இந்த விஜயத்தின் போது அரச தலைவர்கள் பலரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்திக்கவுள்ளார்.

பொதுநலவாய விளையாட்டு மாநாட்டில் பங்கேற்கவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதன் பின்னர் பிரித்தானிய மகாராணியின் 92 ஆவது பிறந்த தின நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது

(கொழும்பு)

பொரளை சீவாலி வீதிக்கருகில் வைத்து ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் நேற்று பிற்பகல் வேளையில் மேல்மாகாண குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீவாலி வீதிக்கருகில் வைத்து ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் நேற்று பிற்பகல் மேல்மாகாண குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 69 வயதுடைய பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த ஆணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரை கைதுசெய்யும் வேளையில் அவரிடமிருந்து 2 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து குறித்த சந்தேகநபர் நேற்று மாளிகாவத்தை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் குறித்த சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல்மாகாண குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொள்கின்றனர். (ம)

# வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளை நேரில் சென்று பார்வையிட்ட கூட்டமைப்பினர்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட காணியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் அதன் பேச்சாளர் சுமந்திரன் ஆகியோர் நேற்று, விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு திடீர் விஜயம் செய்துள்ளனர்.

அங்கு சென்ற அவர்கள் காணிகளைப் பார்வையிட்டதுடன், மக்களின் குறைகளையும் கேட்டறிந்து கொண்டனர். காணிகளைப் பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வலிகாமம் வடக்கு பிரதேசம் ஒருபோதும் விடுவிக்கப்படமாட்டாது என சொல்லப்பட்ட பிரதேசம். ஆனால் இந்த ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு ஜனாதிபதியிடம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்தியதற்கு அமைவாக குறித்த பிரதேசம் விடுவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி பிரதேச மக்களை வெகு விரைவில் சந்தித்து அவர்களுக்கான வீடுகளை அமைத்தல், பொருளாதார உதவி போன்ற வேலைத் திட்டங்களுக்கான கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளோம். அதேவேளை இப்பகுதியை துப்புரவு செய்வதற்கான பணிகளையும் முன்னெடுக்கவுள்ளோம் என கூறினார். (ம)

## இந்திய அரசு நடவடிக்கை...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இந்தியாவின் நெல்லை மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

தென்காசி, குற்றாலம் பகுதிகளில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்ற முதல்வர், நேற்று காலை நெல்லை மாவட்டத்திற்கு சென்றார். அங்கு நெல்லையப்பர் கோவில் அர்ச்சகர் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாளையங்கோட்டையில் உள்ள அரச சித்த மருத்துவ கல்லூரிக்குச் சென்ற விக்னேஸ்வரனுக்கு மாணவிகள் வரவேற்பளித்தனர். பின்பு சித்தமருத்துவ கல்லூரியில் உள்ள அகத்தியர் கோவிலில் நடைபெற்ற பூஜையிலும் அவர் கலந்துகொண்டார்.

இதையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே வடக்கு முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழர்கள் உரிமையை மீட்டெடுக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவில் இலங்கை தமிழர்களை வைத்து அரசியல் செய்வது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளின் தற்போதைய நிலை குறித்து இந்திய அரசு ஆய்வு செய்ய வேண்டும். அவர்கள் வாழ்வு மேம்பட இன்னும் அதிகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய அரசு பல நன்மைகள் செய்தாலும் இன்னும் கூடுதல் உதவிகள் செய்யக் கூடிய வாய்ப்பு இந்திய அரசுக்குள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

**மணமகள் தேவை**

நியூசிலாந்து சிற்றிசன் வந்துள்ள மணமகனிற்கு மணமகள் தேவை

077 818 5978, 075 011 1122 (3660)

**நாள் வாடகைக்கார்**

மனுவல்கியர் 3000 மட்டும்
ஓட்டோகியர் 3500 மட்டும்
கிலோமீற்றர் கணக்கில்லை

(3661) 077 228 3675

**அண்ணா பொதிகள் சேவை**

976,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது

வெளிநாடு,உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

021 221 5656 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள். (C-2247)

யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**

UK - 550*/=Kg

கனடா-1050*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

தொடர்புகளுக்கு 0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-1982)

## வவு.வடக்கு,...

கூட்டமைப்பின் ச.தணிகாசலம் வவுனியா வடக்கு பிரதேச சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். சபையின் உப தலைவராக நா.யோகராஜா தெரிவு செய்யப்பட்டார்.

வவுனியா தெற்கு பிரதேச சபையின் ஆட்சியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. சபையின் தலைவர் பதவிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் து.நடராஜசிங்கமும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தம்பாப்பிள்ளை சிவராசாவும் போட்டியிட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட து.நடராஜசிங்கம் 14 வாக்குகளைப் பெற்று வவுனியா தெற்கு பிரதேச சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கே.மகேந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.(ம-250-28)

## ஒரு கோடியே 50...

நேற்றைய சந்தைப் பெறுமதி ஒன்றரைக் கோடி ரூபாய் என தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு ஆழியவளை கடற்பரப்பில் கரைவலை தொழில் செய்யும் மீனவருக்கே இவ்வாறு மீன்கள் அகப்பட்டன. இந்த மீன்கள் பாரை இனத்தை சேர்த்தவைகள் எனவும் அவற்றின் நேற்றைய சந்தை பெறுமதி ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாயுக்கும் அதிகமாகும்.

இதே வேளை நேற்றைய தினமே குறித்த மீனவரிடம் இருந்து 30 இலட்சம் ரூபாய்க்கு மீன்கள் கொள்வனவு செய்யப்பட்டுவிட்டன என்று தெரிவிக்கப்பட்டது.(ம-60)

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும் வடமாகாண சாரதி தெரிவு பரீட்சையை முன்னிட்டு இறுதித்தயார்ப்படுத்தல் வகுப்புக்கள்

நாள் கட்டணத்துடன்

19.04.2018 வியாழன் 10.00 A.M - 4.00 P.M

கோலாசிற்றி
234, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.
077 843 5224

FLC FRENCH LANGUAGE CENTRE

FRENCH வகுப்புக்கள்

V. ஜெகன் (Trained in France- 2007)

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட Diplomas.

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 21.04.18 சனி காலை 8 மணி.

181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் :23.04.18 மாலை 4 மணி

திருமணம் ஆகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன. (C-2242)

**பதவிக்கான தேடல்**

சர்வதேச ரீதியில் இயங்கிவரும் DNMC HOLDINGS இன் புதிய கிளைகளுக்கான பதவி வெற்றிடம்.

(மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு) இவ் இடங்களில் பணி ஆற்றுவதற்கு பணியாளர்கள் தேவையாக உள்ளனர்.

- O/L, A/L முடித்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
- O/L இல்லாதவர்களுக்கான விசேட பதவி வாய்ப்புக்களும் உள்ளன.
- வயதெல்லை 18-35 வரை.

(3662)

தொடர்புகளுக்கு : 077 848 5328 076 676 7620

**வேலைவாய்ப்புக்கள்**

| | | |
|---|---|---|
| டுபாய் ஓமான் | [illegible] | 150,000/- தொடக்கம் 192,000/- |
| கட்டார் | [illegible] Nissan [illegible] | 49,200/- தொடக்கம் 82,000/- |
| சவுதி அல்மராய் | [illegible] | 46,200/- தொடக்கம் 73,800/- |
| குவைத் | ஹோட்டல் பணியாளர்கள் Dish Washer/Steward | 46,350/- தொடக்கம் |
| குறிப்பு | பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம் | |

விபரங்களுக்கு 0777 324 004

SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS

TGL Trans Gulf (Pvt) Ltd.,

221 - 1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11

90, First Floor, Chatham Street, Colombo 1

**வேலையாட்கள் தேவை**

வல்வையில் இயங்கும் அம்மா உணவகத்திற்கு

➤ கொத்து மாஸ்டர்
➤ சமையல் வல்லுநர்
➤ சப்பிளையர்

வேலைகளுக்கு ஆண், பெண் ஊழியர்கள் தேவை, 18 வயதிற்கு மேல்

தொடர்புகளுக்கு : அம்மா உணவகம்
( மரக்கறிசந்தை முன்பாக , வல்வெட்டித்துறை )
0774563959

**புதிய வருடத்தில் புதிய வாய்ப்பு**

யாழ் நகரில் இயங்கிவரும் Everest நிறுவனமானது வேலைக்காக புதிய நபர்களை இணைத்துக் கொள்ளவுள்ளது. இது கற்கை நெறியுடன் கூடிய வேலை வாய்ப்பு என்பதால் பயிற்சியின் போது 15000 வருமானமும் பயிற்சியின் பின்னர் 45000 அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு, ஊக்குவிப்பு கொடுப்பனவு போன்ற வசதிகள் வழங்கப்படும்.

முன் அனுபவம் வயதெல்லை தேவையில்லை தங்குமிடவசதி, உணவு வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.

புதிய கிளைகள்: கிளிநொச்சி, மன்னார் வவுனியா , முல்லைத்தீவு, திருகோணமலை ஆரம்பிக்கப்படவுள்ளன. (3666)

தொடர்புகளுக்கு: செல்வரட்ணம் - 077 939 5408
மதுசாளினி - 078 369 4110 , அர்சாத் - 077 306 3763

# அகிலா நகை மாடம்

காக்கா கடைச்சந்தி, யாழ் வீதி, கிளிநொச்சி.

0212283559, 0763490023

அகிலாவின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.
அட்ஷய திருதியை முன்னிட்டு தங்க நகைகளை முற்பதிவு மற்றும் கொள்வனவு செய்து தங்க நாணயம் ஒன்றினைப் பரிசாக வென்றிடுங்கள்.





கிளை: நவீனா நகை மாடம்
இல.191, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-2248)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.